வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
25.°c 24.°c



## சிங்கள மக்களுக்கே பிரச்சினை தமிழர்களுக்கு முழுச் சுதந்திரம்

### இதுதான் முத்தையா முரளிதரனின் கருத்து

கொழும்பு, நவ.20
"போரின்போதும் அதன் பின்னரும் இலங்கையின் எப்பாகத்திலும் தமிழர்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலை இருந்து வருகிறது. ஆனால் சிங்கள மக்கள்தான் அன்றும் இன்றும் சுதந்திரமாக வாழ முடியாதுள்ளனர் என்று கூறியுள்ளார் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.
இங்கே எந்த மக்களின் மனித உரிமை கள் மீறப்பட்டுள்ளன?



## தமிழர்களிடம் முரளிதரன் மன்னிப்பு கோரவேண்டும்

### வலுக்கிறது எதிர்ப்பலை

கொழும்பு, நவ.20
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வடக்குக்குப் பயணம் செய்தவேளை, அவரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழர்கள் முன்னெடுத்த போராட்டத்தையும் அவர்களின் உணர்வுகளையும் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள முத்தையா முரளிதரனுக்கு எதிராகக் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.
அரசியல்வாதிகள்,

### இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் :

# உள்ளக விசாரணையில் எமக்குத் திருப்தியில்லை

### இலங்கை அரசின் செயற்பாடு குறித்து பிரிட்டன் நாடாளுமன்றில் கமரூன்

லண்டன், நவம்பர் 20
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அந்நாட்டு அரசினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் முழுமையான சுயாதீனமுடையவையாக அமையவில்லை. அந்த விசாரணைகளில் பிரிட்டனுக்குத் திருப்தி இல்லை.
இவ்வாறு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பிரதமர் டேவிட் கமரூன்.
"யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'உதயன்' நாளிதழின் நம்பமுடியாத துணிச்சல் கொண்ட ஊடகவியலாளர்களை பிரிட்டன் ஊடகவியலாளர்களுடன் சேர்ந்து நான் சந்தித்தேன். அவர்களின் சகாக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார் கள். மேலும் பலர் தாக்கப்பட்டு, அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்" என்றும் கமரூன் அங்கு கூறினார்.
"போர்க்குற்ற விசாரணை மிக அவசியம். பொதுநலவாயத்தின் விழுமியங்களைப் பாதுகாக்கவே கொழும்பு மாநாட்டில் நான் கலந்துகொண்டேன். மிகவும் சர்ச்சைக்குரிய



விவகாரங்களில் தலையீடு செய்வதைத் தவிர, அதனைப் புறக்கணிப்பது எனது கடமையல்ல.
பல பத்தாண்டுகால உள்நாட்டுப் போர் இடம்பெற்ற இலங்கைக்கு நீதி, நிலையான தீர்வு, ஆற்றுப்படுத்தல் போன்றன மிக முக்கிய தேவைப்பாடாக உள்ளன. இலங்கை, தன் மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதத்துக் குள் ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் இதில் அனைத்துலகத் தலையீடு இடம்பெறும்." என்றும் கமரூன் தனது உரையில் குறிப் பிட்டார்.
இதேவேளை, இந்தப் பிரச்சினையை இப்படியே விட்டுவிட முடியாது. கனடா மற்றும் இந்திய நாடுகளின் தலைவர்கள் இலங்கையில் இடம்பெறும் உச்சி மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்த நிலையில், இதில் பங்குபற்றுவதற்காக கமரூன் அங்கு செல்வது சரியா அல்லது தவறா எனப் பிரிட்டனின் எதிர்க் கட்சித் தலைவரும், தொழிற்கட்சித் தலை

## வலி.வடக்குக் காணிகள் மக்களுக்கே உரியவை

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அரச தரப்பினரே தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.20
வலி. வடக்கில் விடுவிக்கப்படாத நிலையிலுள்ள மக்களின் காணிகள் அவர்களுக்கே திருப்பியளிக்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்த நிலையில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களால் மீண்டும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் மீண்டும் தகவல்களைத் திரட்டுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருந்தார். இதற்கமைய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் ஆகியோரின் விவரங்களைப் பதிவு செய்து அவற்றை ஒழுங்கமைக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.
அத்துடன் இந்தத்

## கூட்டமைப்பு புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், நவ.20
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை முன்னரே அறிவித்தது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுப் புறக்கணித்தனர்.
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்க வேண்டிய வடக்கு முதலமைச்சரோடு கூட்டம் பற்றியோ, பொருத்தமான திகதி பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டிருக்கவில்லை.
எனவே, நாடாளுமன்ற உறுப்பினராகிய தம்முடன் அல்லது வடக்கு மாகாண முதலமைச்சருடன் கலந்து பேசப்படாமல் இந்தக் கூட்டத்தை அறிவித்தமை

## மனித உரிமை மீறல் குறித்து விசாரணை

கொழும்பு, நவ.20
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலான விசாரணைகளை பொதுநலவாய செயலகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் முன்னெடுக்கப் போவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இந்த விசாரணைகளை தேசிய மட்டத்

### வடக்கு முதல்வருக்கு அறிவிக்காத

## அரச அதிபரின் செயலை நியாயப்படுத்திய டக்ளஸ்

யாழ்ப்பாணம், நவ.20
இணைத் தலைவர்களுள் ஒருவராகிய வடக்கு மாகாண முதலமைச்சருடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடர்பில் கலந்துரையாடத் தவறிய யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் செயற்பாட்டை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியாயப்படுத்தினார்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சருடன், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்துவது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர்

## சட்டம் ஒழுங்கு சீர்குலைவு அச்சத்துடன் யாழ். மக்கள்

### ஒப்புக்கொண்டது அரச தரப்பு

யாழ்ப்பாணம், நவ.20
யாழ்.மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், தமிழ் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் கூறிய அரச தரப்பு உறுப்பினர்கள், குற்றவாளிகள் தப்பிச்செல்லவிடப்படுகின்றனர் என்றும் அதற்குப் பொலிஸாரும் உடந்தையாக உள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினர்.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சட்டம் - ஒழுங்கு தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பருத்தித்துறை பிர

## நெறிமுறை மீறிவிட்டார் கமரூன்

கொழும்பு, நவ.20
பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டுக்கு வருகை தந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இராஜதந்திர நெறிமுறைகளை மீறியுள்ளார் என இலங்கை அரசு குற்றஞ்சாட்டியுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை நகர வீதிகளில் ஓடித்திரியும் தெரு நாய்கள்

வடமராட்சி, நவ.20
பருத்தித்துறை நகரில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளால் பாதசாரிகளுடன், வாகனச் சாரதிகளும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

நகரப் பகுதியில் குறிப்பாக பஸ் நிலையப் பகுதியில் கூட்டமாக உலாவும் கட்டாக்காலி நாய்களால் பாதசாரிகளுக்கு இடையூறுகளையும், சிரமங்களையும் கொடுக்கின்றன. சைக்கிள் தொடக்கம் கனரகவாகனங்கள் வரையான அனைத்து வாகனச் சாரதிகளுக்கும் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன. (ஒ-8)

## ஆயுள்வேத வைத்தியர் இருவருக்கு அபராதம்

வலி.தென் மேற்கு, நவ.20
ஆயுள்வேத வைத்திய நிலையத்தில் ஆங்கில மருந்து வகைகள் பயன்படுத்திய இரு ஆயுள்வேத வைத்தியர்களுக்கு மல்லாகம் நீதிவான் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

ஆயுள்வேத வைத்திய நிலையங்களில் சட்ட விரோதமான முறையில் ஆங்கில மருந்து வகைகளைப் பயன்படுத்தும் வைத்தியர்களைக் கையும் மெய்யுமாகக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற சுகாதார பரிசோதகர்கள் சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து இடங்களிலுமுள்ள ஏழு ஆயுள்வேத வைத்திய நிலையங்களை முற்றுகையிட்டுச் சோதனை செய்த போது மூன்று வைத்திய நிலையங்களில் ஆங்கில மருந்து வகைகள் பயன்படுத்தப்படுவது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து, மூன்று வைத்தியர்களுக்கும் எதிராக சுகாதாரப் பகுதியினரால் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அங்கு சமுகமளித்திருந்த இரு வைத்தியர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (த-115)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட விவகாரம்

# அதிகாரிகளிடையே முரண்பட்ட கருத்து



யாழ்ப்பாணம், நவ.20
யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குரிய கடிதங்கள் அனுப்பப்பட்டமை தொடர்பில் அதிகாரிகள் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். தாம் கடிதங்களை தபால் திணைக்களத்தில் ஒப்படைத்ததாக யாழ்.மாவட்ட ச் செயலகத்தினர் தெரிவிக்கின்றனர். ஆனால் கடிதங்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் துக்குரிய சாதாரண கடிதங்கள், கடந்த 12 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தினால் சுண்டுக்குளி தபால் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் கடிதங்கள் உரிய அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெறவில்லை. நேற்று முன்தினம் அவசர அவசரமாக கடிதங்கள் அதிகாரிகளிடம் நேரடியாகவே கையளிக்கப்பட்டன.

இது குறித்து நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரி வித்த அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அதிகாரிகளுக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்க வில்லை என்று தெரிவிக்கின்றனர் என சுட்டிக்காட்டினார். ஆனால் யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் கிளையினர் தாம் கடந்த 12 ஆம் திகதி கடிதங்களை தபாலகத்தில் ஒப்படைத்ததாக குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் நேற்று உதயனில் வெளியான செய்தி தொடர்பில், யாழ்ப்பாண பிரதம அஞ்சலதிபரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், சாதாரண கடிதங்கள் உரிய முகவரியாளருக்கு தாமதமின்றி விநியோகம் செய்யப்படுகின்றன. கடிதங்கள் உரியவர்களுக்கு விநியோகிப்பதில் எதுவித தடையுமில்லை.

கடிதங்களை அஞ்சலிடாது, உரியவர்களுக்கு அனுப்பப்பட்டும் கிடைக்கவில்லை - மாயமாகி விட்டன என்று கூறுவதற்கு அஞ்சல் திணைக் களம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. - என்றார்.

கடிதம் தபாலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகமும், கையளிக்கப்பட்ட கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தபாலகமும், கடிதங்கள் கிடைக்கவில்லை என்று அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர். (ஐ-5)

## காணாமற்போன ஆசிரியரை கண்டு பிடிக்குமாறு கவனவீர்ப்பு




வவுனியா, நவ.20
காணாமற் போன ஆசிரியர் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி வவுனியா தெற்கு வலயத்துக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 3 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

வவுனியா செட்டிக்குளம் அல் ஹாமிய வித்தியாலயத்தில் கற்பிக்கும் கார்த்திகேசு - நிரூபன் என்பவர் காணாமற்போயிருந்தார். இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையம், வவுனியா தெற்கு கல்வி அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகம் ஆகியவற்றில் முறையிடப்பட்டிருந்தது.

குறித்த ஆசிரியர் காணாமற் போய் இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் அவர் தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. இதனை அடுத்து இவர் காணாமற் போனமை தொடர்பாக துரிதமாக விசாரணைகளை மேற் கொண்டு உண்மை நிலைமையைக் வெளிக்கொணர வேண்டும் என வற்புறுத்தியே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்று இணைப்பாளர் றோகித பிரியதர்சனவிடம், மனு ஒன்றைக் கையளித்தனர். இந்த மனுவை ஏற்றுக்கொண்ட இணைப்பாளர் காணாமற்போன ஆசிரியர் தொடர்பாக துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாக ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் , வட மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான இ. இந்திரராசா, ஜி.ரி. லிங்கநாதன், இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (த-400-402)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வடமராட்சி, நவ. 20
இளம் குடும்பஸ்தர் ஒருவர் வீட்டின் பின் புறமுள்ள வேப்ப மரம் ஒன்றில் சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

தாளையடி, ஆழியவளையைச் சேர்ந்த செல்வராசா தேவதாஸ் (வயது 34) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவராவார்.

அவரது சடலம் மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா மரண விசாரணையை நடத்தினார். மருதங்கேணி பொலிஸார் சாட்சிகளை முன்னிலைப்படுத்தினார்கள்.

சம்பவ தினத்துக்கு முதல்நாள் இரவு கடுமையான போதையில் வீட்டுக்கு வந்தவர் மனைவி, பிள்ளைகளுடன் சண்டை பிடித்து அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டு வீட்டைப் பூட்டிக்கொண்டார். மனைவியும் பிள்ளைகளும் வெளியே சென்று பிறிதொரு இடத்தில் தங்கிவிட்டு அதிகாலை வீட்டுக்கு வந்து பார்த்தபோது அவர் வீட்டின் பின்புற வேப்பமரத்தில் கயிற்றினால் சுருக்கிட்டு சடலமாகத் தொங்கியிருக்க கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரி மருத்துவர் கே. மயிலேறும்பெருமாள் பிரேத பரிசோதனையினை மேற்கொண்டார். அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-8)

## 'பிஸ்டல்' வழக்கில் இருந்து சிவாஜிலிங்கம் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ.20
அனுமதிப் பத்திரமின்றி கைத்துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட வழக்கு சட்ட மா அதிபர் திணைக்கள ஆலோசனைக்கு அமைய ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முடிவுறுத்தப்பட்டு அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திர ராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவரான எம். கே.சிவாஜிலிங்கம் 2005 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு தனது பாதுகாவலர்களுடன் சென்றிருந்த போதே நெடுந்தீவுப் பொலிஸாரால் அவருக்கு எதிராக இந்தக் குற்றம் சுமத்தப்பட்டது. பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் சிவாஜிலிங்கம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

2005 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடந்த போதும் 2010 ஆம் ஆண்டு பொலிஸாரால் இது தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சட்ட மா அதிபர் திணைக்கள ஆலோசனைக்காக வழக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

சட்டத்தரணி கே.சுகாஷ் மூலமாக சிவாஜிலிங்கம் மன்றுக்கு வந்திருந்தார். சட்ட மா அதிபர் திணைக்கள அறிவுறுத்தலின் படி வழங்கிலிருந்து சிவாஜிலிங்கம் விடுவிக்கப்பட்டதோடு வழக்கும் முடிவுறுத்தப்பட்டது. (த-4)

## போரினால் பாதிப்புற்றோருக்கு நேற்று நட்ட ஈட்டு கொடுப்பனவு

### வவுனியாவில் வைத்து வழங்கப்பட்டது



வவுனியா, நவ.20
கடந்த கால போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 336 பேருக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவாக 28 மில்லியன் ரூபா புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள், புனர்வாழ்வு அதிகார சபையினால் வழங்கப்பட்டது.

போர் அனர்த்தங்களால் வீடுகள் மற்றும் உடைமைகள் அழிக்கப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்தக் கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகள் நேற்று வழங்கப்பட்டன.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற காசோலைகள் வழங்கும் நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திர சிறி கஜதீர, பிரதி அமைச்சர் சந்திரசிறி முத்துக்குமார, கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வவுனியா மாவட்ட புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி செல்வராசா, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் எஸ்.சதீஸ்குமார், வட மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக, வவுனியா பிரதேச செயலாளர் க.உதயகுமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (த-400,402)

## மருத்துவ முகாமில் அதிகமானோர் பயன்

வலி.தென்மேற்கு, நவ.20
யாழ்.மாவட்டம், சர்வதேசம் ஆகிய லயன்ஸ் கழகங்களின் அனுசரணையுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட மாபெரும் நடமாடும் மருத்துவ முகாமில் மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், இளம் பெண்கள், முதியோர்கள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பயனடைந்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் நட்டாங்கண்டல் வைத்திய சாலையில் பிரதேச செயலர் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடமாடும் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 535 இளம் பெண்களுக்கு சல்வார்களும், குழந்தைகள் உட்பட 350 கர்ப்பிணிப் பெண்களுக்கு 1,600 ரூபா பெறுமதியான சத்துணவு [illegible] மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (வ-115)

## யாழ்.டிப்போவில் 19 பஸ்கள் பழுது

யாழ்ப்பாணம், நவ.20
யாழ்.டிப்போவில் பழுதடைந்த நிலையில் 19 பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. பல மாதங்களாக அவை திருத்தப்படாதமையால் பயன்பாட்டுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக டிப்போ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

யாழ்.டிப்போவில் 80 பஸ்கள் உள்ளன. அவற்றில் 19 பஸ்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் பல மாதங்களாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

அவற்றைத் திருத்துவதற்கு, பிரதியீட்டுப் பொருள்களைப் பெறுவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதனால் ஏற்படும் கால தாமதம் காரணமாக பஸ்களைத் திருத்தி விரைவில் பயன்பாட்டுக்கு விட முடியாத நிலை காணப்படுகிறது. இது தொடர்பில் வட மாகாண டிப்போ முகாமையாளர் அவர்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, பஸ்களில் சில பொருள்கள் திடீரென உடைந்து போய்விடும். இது போன்று திடீரென ஏற்படும் பழுதுகளைத் திருத்திப் பயன்படுத்தி வருகிறோம்.

திருத்துவதற்கான பொருள்களை பெறுமதி மதிப்பீட்டு அடிப்படையில் அதுவும் கொழும்பிலேயே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அதில் தாமதம் நிலவுகிறது - என்றார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனைக் காணி ஈட்டில் இருந்து மீட்பு

வலி வடக்கு, நவ.20

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான காணி சுன்னாகம் மக்கள் வங்கியில் ஈட்டில் இருந்து மீட்கப்பட்டு மீண்டும் வைத்திய சாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 44 வருடங்களுக்கு முன்னர் குறித்த வைத்தியசாலைக் காணி அன்றைய நிர்வாகத்தால் மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவுக்கு ஈடு வைக்கப்பட்டிருந்தது.

குறித்த காணியை கூட்டுறவு வைத்தியசாலைக்கு தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தம்பி கனகரெட்ணம் என்பவர் 1950 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கி இருந்தார்.

குறித்த காணி 44 வருடங்களுக்கு முன்னர் சுன்னாகம் மக்கள் வங்கியில் 5 கட்டங்களாக ஈடு வைக்கப்பட்டு மீட்கப்படாது இருந்த நிலையில் தற்போது அந்தக் காணியை கனகரெட்ணத்தின் மகள் செல்வி மகேஸ்வரி ஈட்டில் இருந்து மீட்டு மீண்டும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை புதிய நிர்வாகத்திடம் கையளித்துள்ளார்.

சுன்னாகம் மக்கள் வங்கியில் வைத்து சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த்தீபன் முன்னிலையில் இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (வ-86)

# உடனடியாக மூடப்பட்டது சீர்கேடான உணவகம்

*மன்னார் நகரசபை அதிரடி நடவடிக்கை*

மன்னார், நவ.20

மன்னார் பஸார் பகுதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றை மன்னார் நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் காலவரையின்றி மூடியுள்ளதாக நகர சபை உறுப்பினர் எஸ். குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் பஸார் பகுதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றின் மலசல கூடக் கழிவுகள் உணவகத்துக்கு முன்பாகவுள்ள கழிவு நீர் கால்வாயினுள் செலுத்தப்படுவதாக மன்னார் நகர சபைக்குத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து மன்னார் நகர சபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசத்தின் பணிப்புரைக்கு அமைவாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் நகர சபை செயலாளர் லெனாட் பிரிட்டே உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்,நகர சபை உறுப்பினர்கள்,நகர சபை அதிகாரிகள் கூட்டாகச் சென்று குறித்த உணவகத்தை பரிசோதனை செய்தனர்.



இதன் போது குறித்த உணவகத்தின் மலசலகூடம் உணவகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள நிலையில் மலக்கழிவுகள் உணவகத்துக்குமுன்பாகவுள்ள கழிவு நீர் கால் வாயில் கலப்பது ஆரம்பக் கட்ட விசாரணையின் மூலமாகத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபை அதிகாரிகள் உடனடியாக குறித்த உணவகத்தை மூடுமாறு பணிப்புரை விடுத்துள்ளனர்.

மேலதிக நடவடிக்கைகளை மன்னார் நகரசபை மேற்கொண்டு வருவதோடு குறித்த உணவகம் மூடப்பட்டமைக்கான காரணத்தையும் எழுத்து மூலம் அதன் உரிமையாளருக்கு அனுப்பிவைத்துள்ளது. (க-12)

## நீதிமன்ற வளாக வாயிலில் பொலிஸ் சோதனைச் சாவடி

பருத்தித்துறை, நவ.20

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாக நுழைவாசலில் நவீன வடிவில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட பொலிஸாரின் சோதனைச் சாவடி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சோதனைச் சாவடியைத் திறந்து வைத்தார்.

'நீதிமன்றத்துக்குள் நுழைவோரை சோதனை செய்யும் நிலையமாக இந்தச் சாவடி செயற்பட்டு வருகின்றது. (ஒ-8)



தென்மராட்சி பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 300 குடும்பங்களுக்கு ஒரு மாதக் கோழிக் குஞ்சுகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக 137 குடும்பங்களுக்கு தலா 10 கோழிக் குஞ்சுகள் வீதம் இலவசமாக சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனையில் வைத்து விநியோகிக்கப்பட்டன. பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தலா ஐந்து குடும்பங்களுக்கு ஒரு மாதக் கோழிக்குஞ்சுகள் வீதம் விநியோகிக்கப்பட்டன. (வ-9)

## 1,120 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

அச்சுவேலி, நவ.20

யாழ்.மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 1,120 குடும்பங்களுக்கு பண்ணை வளர்ப்புக்குரிய மண்ணிற முட்டை இடும் உயர் ரக கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. குடும்பம் ஒன்றுக்கு பத்துக் குஞ்சுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் கோழிக் குஞ்சு வழங்கல் நிறைவடைகின்றது.

பண்ணை வளர்ப்புக்கான உயர் தர மண்ணிற கோழிக் குஞ்சுகள் உரிய முறையில் வளர்க்கப்பட்டால் அவை 3 மாதங்களில் முட்டை இடும். சாதாரண கோழிகள் போல அடை கிடக்காமல் தொடர்ந்து முட்டை இடும். அவை ஒரு வருடத்தில் 280-300 முட்டைகள் வரையில் இடும் இயல்பு கொண்டவை.

ஒருநாள் குஞ்சுகள் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு ஒரு மாதத்துக்கு குறையாமல் வளர்ந்த நிலையில் பயனாளிக் குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 132 குடும்பங்களுக்கும், கோப்பாய், சங்கானை, வேலணை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 100 குடும் பங்களுக்கும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 75 குடும்பங்களுக்கும் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன.

கோழிக் குஞ்சுகளை உரிய முறையில் வளர்த்து பயனாளிகளுக்கு விநியோகிக்கும் ஒப்பந்த வேலையை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ்.மாவட்ட சமாசம் பொறுப்பேற்று இருந்தது. கால்நடை வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குஞ்சுகள் வழங்கப்படு கின்றன.

கோழிக்குஞ்சு பெறுவதற்கான பயனாளிகள் தெரிவு கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மூலம் நடைபெற்று இறுதிப்பட்டியல் பிரதேச செயலகங்களினால் உறுதி செய்யப்பட்டிருந்தன. (வ-11)

## பிரதேச சபை செயலாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.20

வடமாகாண பிரதேச சபைகளில் வெற்றிடமாக உள்ள செயலாளர் பதவிகளுக்கு தகைமையுள்ள மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்புத் தர உத்தியோகத்தர்களிடமிருந்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு இல. 81, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு ஆணைக் குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (வ-9)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.20

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் சிவில் சமூக அமைப்புகளுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாக பிராந்திய இணைப் பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார்.

சமகால மனித உரிமை நிலைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சிவில் சமூக அமைப்புக்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகின் றது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 3 மணிவரையில் கிறீன் கிறாஸ் விடுதியில் கூட்டம் இடம்பெறவுள்ளதாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். (வ-5)

## வாசிப்பு மாத இறுதிநாள் பரிசளிப்பு விழா

தென்மராட்சி, நவ.20

சாவகச்சேரி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும்,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி நகரசபை உப தலைவர் கு.சதாசிவமூர்த்தியும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-9)

*நெடுந்தீவு-குறிகாட்டுவானுக்கான*

## படகுச் சேவை நேர அட்டவணை

யாழ்ப்பாணம்,நவ.20

நெடுந்தீவு-குறிகாட்டுவானுக்கான அரச மற்றும் தனியார் படகுச்சேவை நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக குமுதினி படகுச் சேவை திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கும், பிற் பகல் 2.30 மணிக்கும் குறிகாட் டுவானில் இருந்து காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக் கும் சேவையில் ஈடுபடும்.

செவ்வாய்க்கிழமைகளில் தனியார் படகு நெடுந்தீவிலிருந்து காலை 6.30 மணிக்கும் குறிகாட்டுவானில் இருந்து பிற்பகல் 3 மணிக்கும் குமுதினி படகு நெடுந்தீவில் இருந்து காலை 7.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் சேவையில் ஈடு படும்.

வியாழக்கிழமைகளில் தனியார் படகு நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் குறிகாட்டுவானில் இருந்து காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் சேவையில் ஈடு படும்.

குறித்த சேவை நேரம் கடந்த 13ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (வ-14)

## வீடமைப்பு திட்டம் வழங்கலில் பாரபட்சம்

பளை, நவ.20

பளைப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வீடமைப்புத் திட்டங்கள் வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்தபோது அனைத்து குடியிருப்பாளர்களும் வீடமைப்புத் திட்டங்களில் வீடுகள் அமைக்கத் தெரிவு செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் நிரந்தரமாகக் குடியமர்ந்து ஓலைக் கொட்டிலில் வசிப்பவர்கள் வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்படாமல் பளைப் பிரதேசத்தில் குடும்ப அட்டையை பதிவு செய்து விட்டு கொழும்பு, வவுனியா, வன்னிப் பிரதேசம் யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்கள் ஆகியவற்றில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டு அவை பயன்படுத்தப்படாமல் மூடிய நிலையில் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Study In Singapore
* 3 Month Study 6 Month பயிற்சி
* பயிற்சியின் போது 100,000/= மேல் Salary
* Collage Admition Free
* 5 Star hotel இல் பயிற்சி
* 2year Singapore இருக்கலாம்
* No IELTS
* No Bank Balance
* G.C.E.O/L இல் சித்தி பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம்
* S Pass மூலம் LKR 250000 Monthly Salary பெறலாம்
Only Rs. 250,000
Athor :
UK, Canada, Malasysia, Arminia, Rasia
Malaysia Visit Visa
* Can apply low price without document
Branch : Colombo, Vavuniya, Jaffna
Phone No : 077 4246696, 075 2756723 and 077 7128034

# திட்டமிட்ட குடியேற்றத்தால் குலைக்கப்படும் குடிப்பரம்பல்

## வட மாகாண சபையின் அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

திட்டமிட்ட குடியேற்றத்தால் எமது குடிப்பரம்பல் குலைக்கப்படுகிறது. எமது பிரதிநிதித் துவம் குறைகிறது. இந்த மண்ணை நேசிக்கும் சிறந்த கல்வியாளர்களாக மாறி எமது மண்ணைக் காப்பவர்களாக நீங்கள் மாற வேண்டும். உங்களுக்கு அந்தப் பொறுப்பு உண்டு என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டங்கள் எமது பிள்ளைகளின் நல்வாழ்வுக்கானதாக இருத்தல் வேண்டும். சிறுவர் தொடர்பான சட்டங்கள் மாகாண சபையில் நன்கு பரிசீலனை செய்யப்படும். அது தொடர்பான ஆலோசனைகள் கேட்கப்படும்.

சைவ வித்தியாவிருத்திச் சங் கம் கடந்த காலங்களில் பாட சாலைகளை நிர்வகித்து கல்விச் சமுதாயமாக மாணவர்களை உருவாக்கும் பணியை மேற்கொண்டிருந்தது. தற்போது அதன் பணி குறுகிவிட்டது. எமது மாணவர்கள் தற்போது மிகமோசமான நிலைக்கு திட்டமிட்டு உள்வாங்கப்படுகின் றனர்.

ஒரு சமயத்தைச் சார்ந்ததாக இல்லாமல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் சமூகத்தை முன்னிலைப்படுத் துவதாக அமைய வேண்டும். கடந்த காலங்களில் அதன் உயர்ந்த பணிகளால் சிறந்த மனிதர்களாக உருவான மாணவர்களைப் போன்று நீங்களும் உங்கள் வாழ்க்கையில் உயர்வடைந்து எதிர் காலத்துக்கு சிறப்பான சமூகத்தை உருவாக்குபவர்களாக வரவேண்டும்.

இங்கு பணியாற்றுபவர்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்குவது குறித்தும் நடை பெற்ற நிகழ்வுகளில் உங்களின் திறமை கண்டும் வியப் படை கின்றேன்-என்றார். (வ-7)

## நூலகத்தை இடம் மாற்றுங்கள்; மக்கள் கோரிக்கை

மீன் சந்தையின் துர்நாற்றமும் கழிவுகளின் நாற்றமும் வீசுவதனால் நாம் நூலகத்துக்கு செல்ல முடியாதுள்ளது. எனவே மீன் சந்தைக்கு அருகில் உள்ள சங்கானை நூலகத்தை இடமாற்றித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சங்கானை பொது நூலகம் அபிவிருத்தியின்றி மக்கள் வாசிப்பில்லாத பகுதியாக காட்சியளிக்கின்றது.

அங்கு பாடசாலை மாணவர்களோ அல்லது பொது மக்களோ நூல்களை வாசிப்பதற்கோ பத்திரிகைகள் படிப்பதற்கோ இயலாத பிரதேசமாக கழிவுகளின் மையமாக நூலகம் உள்ளது.

எனவே சங்கானை நூலகத்தை வேறு பொருத்தமான இடத்துக்கு மாற்றி உதவுங்கள் அல்லது சுழிபுரம் உப அலுவலக நூலகத்துடன் இணைத்து விடுங்கள். நீண்ட தூரம் பயணித்தாவது நாம் வாசிப்பதற்கு தயாராக உள்ளோம்.

ஆனால் துர்நாற்றத்தின் மத்தியில் சங்கானை மீன் சந்தைக்கு அருகில் நூலகம் இருப்பது பொருத்தமானதல்ல என்பதனை சங்கானை மக்களாகிய நாம் கவலையுடன் தெரிவிக்கின்றோம் எனத் தெரிவித்தனர். (வ)

பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டுகளும்



செல்வி ம.பாதுஷா
யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை
புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காகவும் இன்று (20.11.2013) புதன்கிழமை 10 ஆவது பிறந்ததின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மன் கோயிலடி,
ஊரெழு கிழக்கு,

வாழ்த்துபவர்கள்:- தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் 25 ஆவது பிறந்தநாள் நினைவும்



தோற்றம்
26.11.1988

மறைவு
13.12.2011

அமரர்
செல்வநாயகம் கோபிநாத்
(மாணவன் விளையாட்டு விஞ்ஞானப் பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)

நம்ப மறுக்குதடா மனது உன் நினைவு நாளை
நினைத்து நீற்குதடா உன் பிறந்த நாள் நிகழ்வு
நாம் முதுமை அடைந்த போதும் எம் மனதில்....
என்றும் நீ இருப்பாய் குழந்தையாய் இளைஞனாய்
நாம் செல்லமாக அழைக்கும் குட்டியாய்

கரவெட்டி தெற்கு
கரவெட்டி

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி அன்னலக்சுமி சுப்பிரமணியம்



சப்பச்சி மாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கரம்பகத்தை நிரந்தர வதிவிடமாகவும், ஆசிரியர் வீதி, சாவகச்சேரியை தற்காலிகவதிவிடமாகவும் கொண்ட அன்னலக்சுமி சுப்பிரமணியம் நேற்று (19.11.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும, காலஞ்சென்ற வீரகத் திப்பிள்ளை சின்னமபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், இராசமலர், இராஜ கோபால சிங்கம், நிர்மலா, பிறேமலா, விஜயகுமார் காலஞ்சென்ற கனக சிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், சுந்தரலிங்கம், பாக்கிய லீலா, தங்கராசா, குணராசா, விஜயராசா, சந்திரலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/1, ஆசிரியர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
க.எழிலழகன்.

மரண அறிவித்தல்



நாகர் கார்த்திகேசு

நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கார்த்திகேசு நேற்று (19.11. 2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம், சங்கானை.
கண்ணன்- 077 4965386

தகவல்:
குடும்பத்தினர்.

31ஆம் நாள் வீட்டுக்கிருத்த அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
10.12.1933

மறைவு
21.10.2013

திருமதி இராசம்மா (இராசமணி) நடராசா

கடந்த 21.10.2013 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (20.11.2013) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெல்லிப்பழந்தை,
வதிரி கரவெட்டி.

குடும்பத்தினர்.

World concern.

EMPLOYMENT OPPORTUNITIES

We are an international non-governmental organization registered in Sri Lanka implementing relief and development programmes. The below positions are needed for immediate hire.

1.DISTRICT MANAGER- MULLAITHIVU
Minimum Skills & Educational Qualifications Required:
- Post graduate University Degree or Equivalent Experience
- 10 years of experience in relief/development organization and Humanitarian good practices

2. VETERINARY SURGEON – MULLAITHIVU
Minimum Skills & Educational Qualifications Required:
- Bachelor of Veterinary Science from the University ofSri Lanka or equivalent qualification.
- Registration with Sri Lanka Veterinary council to practice as a veterinarian.

3. ADMINISTRATOR - COLOMBO
Minimum Skills & Educational Qualifications Required:
- Bachelor's degree (preferably in Administration) or Equivalent Experience
- Minimum 7 years of experience in Administration & Personnel Management

General conditions for all above positions:
- Good command of English, written and spoken.
- Computer Literacy.
- Previous working experience with I/NGO would be desirable.

Remuneration will be in par with the industry norms.
Interested candidates are requested to email self prepared applications enclosed with a detailed CV and scanned photograph towcsrilankavacancies@gmail.com on or before29th November 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிர மறுக்கும் வீதி விளக்குகள்



கொழும்புத்துறை, நவ.20
அரியாலை மலர்மகள் வீதி, சாஸ்திரியார் வீதிப் பகுதிகளின் வீதி விளக்குகள் முற்றாக ஒளிர்வதில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் இந்த வீதிகள் இருள் சூழ்ந்து காணப்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாயம் நிலவுகின்றது.

இதேவேளை குறித்த பகுதியில் இருளைப் பயன்படுத்தி பல வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள நீரிறைக்கும் மோட்டார்கள் திருடர்களால் களவாடப் பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

# பூர்த்தியடையாத பஸ் தரிப்பிடம்

தென்மராட்சி, நவ.20
கைதடி-கோப்பாய் வீதியில் நலன்விரும்பி ஒருவரால் அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த வீதியில் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அண்மித்த பகுதியில் நீண்ட காலமாக காணப்பட்ட பஸ் தரிப்பிடக் கட்டடம் வீதி அகலிப்பின் போது முற்றாகத் தகர்க்கப்பட்டது.

பஸ் தரிப்பிடக் கட்டடம் இல்லாததால் குறித்த வீதியில் பயணிப்போர் வெய்யில், மழையில் ஒதுங்க இடமில்லாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த நலன் விரும்பியொருவர் தமது உறவினரின் நினைவாக பஸ் தரிப்பிடம் அமைக்க உரிய இடங்களில் அனுமதி பெற்று கட்டட வேலைகள் ஆரம்பித்த போது ஒரு சிலர் அதனை அமைக்கவிடாமல் தொடர்ந்து தடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியில் கைதடிச் சந்திக்கு அருகில் காணப்பட்ட பஸ் தரிப்பிடக் கட்டடம் வீதி அகலிப்பில் அப்புறப்படுத்தப்பட்டு இதுவரை புதிதாக கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (வ-9)



## நெடுந்தீவில் நீர்த்தாங்கி அமைக்கும் பணி

யாழ்ப்பாணம், நவ.20
நெடுந்தீவுப் பகுதியில் இரணைமடு நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் கடல் நீரை நன்னீராக்கி விநியோகிப்பதற்கான தண்ணீர்த் தாங்கி, சாராப்பிட்டி வரையான நீர் விநியோகக் குழாய் தண்ணீர் தாங்கி ஆகியன அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீர் விநியோகத் திணைக்களத்தால் அமைக்கப்படவுள்ள 301 மலசல கூடத்தில் 222 மலசல கூடங்களில் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (வ-7)

## சிற்றி லயன்ஸ் கழகம் சாவகச்சேரியில் ஆரம்பம்

தென்மராட்சி, நவ.20
சாவகச்சேரி சிற்றி லயன்ஸ் கழகம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோர் புதிய கழகத்தை ஆரம்பித்து வைத்து கழகத்தின் புதிய நிர்வாகத்தினருக்கு பதவிப் பிரமாணமும் செய்து வைத்தனர்.

மத்துமகல லயன்ஸ் கழகத்தின் அனுசரணையு டன் கைதடி விநாயகர் மணி மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கழகத்தின் தலைவராக லயன் சண்முகநாதன் மனோகரனும், செயலாளராக லயன் பா.சிவ பாலனும், பொருளாளராக லயன் தேவராசா சித்தார்த்தனும், உப தலைவராக லயன் வீ.வேணுகோபனும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

கழகத்தின் முதலாவது நல நோம்பு செயற்பாடாக வடக்கு மாகாண சபை அமைந்துள்ள கைதடியில் பயணிகள் வாகன தரிப்பிட நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோவால் நட்டு வைக்கப்பட்டது. (வ-9)

# மக்களின் கஷ்டங்களை கவனிக்காத மாநகரசபை

### சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்.நகரின் றக்கா வீதி, இராசாவின் தோட்டம் வீதி, மின்சார நிலைய வீதி எனப் பல வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் உள்ளன. இதனால் மக்கள் போக்குவரத்துச் சிரமங்களை அனுபவிக்கும் நிலையில் அவற்றைக் கவனிக்காது விட்டு விட்டு மாநகர சபை தனது பழைய கட்டடங்களைத் திருத் திக் கொண்டி ருப்பதாக மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப் பினர் விஜயகாந்த் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். யாழ். மாநகர சபை மக்களுக்குத் தேவையான பல நல்ல விடயங்களை மேற்கொண்டுள்ளது. அவை எமக்குத் தெரியும். வீதிகள் குறித்து பத்திரிகைகளில் அதிகமான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதிகமான முக்கிய வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அவை கைவிடப்பட்டுள்ளன.

வீதிகள் குறித்து ஏற்கனவே உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் ஒரு சிலரின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலேயே மாநகர சபை செயற்படுகின்றது. மக்களது வரிப் பணத்தில் இயங்கும் சபை அவர்களுக்குத் தேவையானவற்றைத் தவிர்த்து உள்ளகத் திருத்தங்களை மேற்கொள்கின்றது என்று தெரிவித்தார். பல வீதிகளுக்குத் திருத்தம் கோரியிருந்தும் முன்னுரிமை வழங்கப்படவில்லை. இது தொடர்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் குற்றஞ் சுமத்தியுள்ளனர். (வ-7)

" _ "

**யாழ். மாநகர சபை மக்களுக்குத் தேவையான பல நல்ல விடயங்களை மேற்கொண்டுள்ளது. அவை எமக்குத் தெரியும். வீதிகள் குறித்து பத்திரிகைகளில் அதிகமான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

## சுயதொழில் கொடுப்பனவை பெறலாம்

நவாலி, நவ.20
சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த 5 பேருக்கு கொடுப்பனவுக்கான காசோலைகள் சமூக சேவைகள் திணைக்களத்தால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பயனாளிகளை செயலகத்துக்கு வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை கள் உத்தியோகத்தர் ந. அருந்தவராசா அறிவித்துள்ளார்.

இ.கவிதா - சுழிபுரம் கிழக்கு, க.சுகிர்தாயினி- நிச்சாமம் சங்கானை, ந.சகுந்தலாதேவி- பொன்னாலை மேற்கு, ம.சதீஸ் குமார் - நிச்சாமம், மு.கோமளா- தொல் புரம் கிழக்கு ஆகியோருக்கான கொடுப்பனவுக்கான காசோலைகளே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (வ-100)

## கிராம அலுவலர் பிரிவுகளில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்

அச்சுவேலி, நவ.20
கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அத்துடன் சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான விளம்பரப் பலகைகளும் பொதுமக்களின் பார்வைக்கு நடுகை செய்யப் படவுள்ளன.

சிறுவர் உரிமை மீறல் மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்களுக்கான கட்டாயக் கல்வி, சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தல், அவர்களைத் துன்புறுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கண்காணிப்பதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக "சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்" செயற் படவுள்ளன. (வ-11)

" _ "

**சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான விளம்பரப் பலகைகளும் பொதுமக்களின் பார்வைக்கு நடுகை செய்யப்படவுள்ளன.**

## புங்குடுதீவு பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம்

யாழ்ப்பாணம், நவ.20
வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு, மடத்துவெளி, ஊரதீவு, கேரதீவு பகுதிகளுக்கு மிக விரைவில் மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசங்களுக்கு மின்னிணைப்புப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்பப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்காக மின் கம்பங்களை நடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அதனையடுத்து மின்சாரத்தை மிக விரைவில் வழங் குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார். (வ-7)



நயினாதீவில் சுயதொழில் முயற்சியாக கச்சான் வியாபாரத்தில் ஈடுபடும் கடை உரிமையாளர்களுக்கு நிழற்குடைகளை வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா வழங்கினார். (வ-7)

# விதை உருளைக்கிழங்கு விநியோகம் ஆரம்பம்

அச்சுவேலி, நவ.20
யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு மானிய விலை விதை உருளைக் கிழங்கு கடந்த வெள்ளிக் கிழமை தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

விதை உருளைக்கிழங்கு கோரி பதிவுசெய்த விவசாயிகளுக்கு 50 கிலோ பொதி ஒன்று 6,500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது. விதை கிழங்கு விநியோகத்தை ஊடக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைத்தார்.

விதை உருளைக்கிழங்கு கோரி புத்தூர் கமநல சேவை பிரிவில் இருந்து 388 விவசாயிகளும், உரும் பிராய் கமநல சேவை பிரிவில் இருந்து 281 விவ சாயிகளும், உடுவில் கம நல சேவைப் பிரிவிலிருந்து 234 விவசாயிகளும், தெல் லிப்பழை கமநல சேவைப் பிரிவிலிருந்து 77 விவசாயிகளும் விண்ணப்பித்துள்ளனர்.


விதை உருளைக்கிழங்கு திருநெல்வேலியில் உள்ள விதை உற்பத்தியாளர் கூட்டுவுச் சங்க களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கு உற் பத்தியாளர் கூட்டுறவுச் சங் கங்கள் மற்றும் சாங்காங் களின் சமாசம் ஊடாக பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றது. (வ-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் நலம் தேறுகின்றார் அப்துல் கலாம்

புதுடில்லி, நவ.20
திடீர் உடல்நலக் குறைவால் மருத்துமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை திடீரென அப்துல் கலாம் மயங்கி வீழ்ந்ததை அடுத்து அவர் மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டது. அப்துல் கலாம் மயங்கி வீழ்ந்தபோது அவரது நெற்றிப்பகுதியில் சிறிய காயம் ஏற்பட்டது.
தற்போது அவரது உடல் நிலை முன்னேற்றம் அடைந்து வருகின்றது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அவர் இன்னமும் ஓரிரு நாள்களில் வீடு திரும்பலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் சட்டசபைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன. அங் குள்ள 8 மாவட்டங்களில் உள்ள 18 தொகுதிகளில் கடந்த 11 ஆம் திகதி முதற்கட்ட வாக்குப் பதிவுகள் நடைபெற்றன. பொது மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று அங்குள்ள மாவோயிஸ்ட்டுக்கள் எச்சரித்திருக்கும் நிலையில் பொது மக்கள் ஆர்வமுடன் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. முதற்கட்ட வாக்குப் பதிவின்போது துப்பாக்கிச் சூட் டுச் சம்பவங்கள் மற்றும் மின் வாக்குப் பதிவு இயந்திரம் களவாடப்பட்டமை போன்ற சம்பவங்கள் இடம்பெற்றமையால் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவின் போது பாதுகாப்புக்காக ஒரு லட்சம் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற)

## இந்திரா காந்தியின் பிறந்தநாள் நேற்று

புதுடில்லி, நவ.20
முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 96ஆவது பிறந்த நாள் இந்தியா முழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது.
முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 96ஆவது பிறந்த நாளை முன்னிட்டு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, துணைக் குடியரசு தலைவர் அமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ்தலைவி சோனியாகாந்தி, உள்ளிட்ட தலைவர்கள் இந்திரா காந்தியின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செய்தனர். (ற)

# தனித் தெலுங்கானா அறிக்கை விரைவில்

புதுடில்லி, நவ.20
ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்து தனித் தெலுங்கானா அமைப்பது தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட இந்திய மத்திய அமைச்சர்கள் குழு, தனது அறிக்கையை விரைவில் மத்திய அமைச்சரவையில் தாக்கல் செய்யவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி உட்பட ஆந்திரம், சீமாந்திரா மற்றும் தெலுங்கானாப் பகுதித் தலைவர்கள் தெலுங்கானா அமைப்பது தொடர்பாக அமைக்கப்பட்ட மத்திய அமைச்சர்கள் குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
அந்தச் சந்திப்பின்போது மாநிலத்தை பிரிக்கும் போது ஏற்படும் எல்லை வரையறை, அதிகாரப் பகிர்வு, நிர்வாகப் பகிர்வு, வாக்காளர் தொகுதிகள் பிரிப்பது ஆகியன குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.
குறித்த கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே "தெலுங்கானா தொடர்பான ஆலோசனை, கருத்துக் கேட்பு முடிந்து விட்டது. மீண்டும் ஒரு முறை தெலுங்கானா அமைப்பது தொடர்பாக ஆராயவென அமைக்கப்பட்ட மத்திய அமைச்சர்கள் குழு கூடி இறுதி அறிக்கையை உறுதி செய்யும். நவம்பர் 21 ஆம் திகதி இந்த சந்திப்பு நடை பெறும்.
இந்த மாத இறுதியில் அறிக்கை மத்திய அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும். எதிர்வரும் குளிர்கால கூட்டத் தொடரில் மத்திய அரசு தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது தொடர்பாக சட்ட மசோதா சீர்திருத்தத்தைக் கொண்டு வரும்" என்று தெரிவித்தார்.
அதேவேளை ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் உருவாக்குவதற்கு கடும் எதிர்ப்பு நிலவி வருகின்றது. (ற)



இந்திய மத்திய அரசு தெலுங்கானா மாநிலத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளபோதும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும், வன்முறைகளும் நடைபெற்று வருகின்றன.

## ஆட்சி அமைக்கப்பட்டால் 3 ஏக்கர் நிலம் இலவசம்

### மாயாவதி அதிரடி அறிவிப்பு

பாலக்காடு, நவ.20
மத்திய பிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சி ஆட்சி அமைத்தால் நிலமற்ற ஒவ்வொருவருக்கும் தலா 3 ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று அதிரடியாக அறிவித்துள்ளார் அந்தக் கட்சியின் தலைவி மாயாவதி.
பகுஜன் சமாஜ் கட்சி மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள 230 சட்டமன்ற தொகுதிகளிலும் தனித்துக் களமிறங்குகின்றது. உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்வரும், பகுஜன்சமாஜ் கட்சியின் தலைவியுமான மாயாவதி தனது கட்சி வேட்பாளர்களுக்காக அனல்பறக்கும் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றார்.
மாவோயிஸ்ட்டுகளின் ஆதிக்கம் அதிகமுள்ள பகுதியான பாலக்காடு மாவட்டத்தில் நடந்த பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
அங்கு அவர் மேலும் கூறும் போது,
"எனது கட்சி மத்திய பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்தால் நிலமற்ற ஒவ்வொருவருக்கும் தலா 3 ஏக்கர் நிலம் வழங்கப்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை வழங்கப்படும்.
உத்தரபிரதேசத்தில் எனது அரசு நிலமற்ற மக்களுக்கு 3 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கியது. 66 ஆண்டுகளாக இங்கு காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதா கட்சியுமே ஆட்சியில் இருந்தன.
மத்திய, மாநில அரசுகள் மலைவாழ்பழங்குடியினருக்குஎந்தவித உதவியும் செய்யவில்லை. அதனாலேயே நிலமற்ற பழங்குடியினர் மாவோயிஸ்டுகளுடன் சேர்ந்து கொள்கிறார்கள்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## கேரள சிறைகளில் நிரபராதிகள் 40 வீதம்

புதுடில்லி, நவ.20
கேரளாவில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களில் 40 வீதமானவர்கள் நிரபராதிகள் என்று தெரிவித்துள்ளார் கேரள சிறைத்துறை ஆணையாளர் அலெக்சாண்டர் ஜேகப்.
தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.
இந்தத் தகவல் வெளியானதை அடுத்து கேரளாவில் பல்வேறு தரப்பினரும் பொலிஸாருக்கு எதிராகக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, கடந்த மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய சிறைத்துறை ஆணையாளர், சிறையில் உள்ள 20 சதவீத கைதிகளே நிரபராதிகள் என்று கூறியிருந்தார். (ற)

## ராகுலை துணிந்து கடித்த கொசுவை பாராட்டுகிறேன்

### பரப்புரைக் கூட்டத்தில் மோடி கிண்டல்

சாகர், நவ.20
ராகுல் காந்தியைத் துணிச்சலாகக் கடித்த மத்திய பிரதேசக் கொசுக்களை வாழ்த்துகின்றேன் என்று கிண்டல் செய்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.



கடந்த மாதம் மத்திய பிரதேசத்தின் பந்தல்காண்ட் பகுதியில் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் பேசிய காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, "2009ஆம் ஆண்டு மத்திய பிரதேச மாநிலம் பந்தல்கண்ட் பகுதிகளை சுற்றிப்பார்த்தபோது 25 ஆயிரம் கொசுக்கள் என்னைக் கடித்தன" என்று கவலை வெளியிட்டிருந்தார். அதுகுறித்துக் கூறும்போதே நரேந்திர மோடி இவ்வாறு கிண்டல் செய்துள்ளார்.
"இளவரசர் ராகுலைக் கடிக்கத் துணிந்த பந்தல்காண்ட் கொசுக்களை நான் வாழ்த்த விரும்புகிறேன். கடந்த 100 ஆண்டுகளாக ராகுல் காந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கூட கொசுவால் கடிபடவில்லை. அதனாலேயே ராகுலைக் கடித்த பந்தல்காண்ட் கொசுக்களை நான் வாழ்த்துகிறேன்.
நான் இந்தியாவின் வளர்ச்சி விவகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு நான் தேர்தலில் களமிறங்க விரும்புகிறேன், ஆனால் காங்கிரஸ் கட்சி அந்த விடயத்தில் தயக்கம் காட்டுகிறது. வாக்கு வங்கியை அதிகரிப்பதில் மட்டுமே அவர்கள் அக்கறை காட்டுகின்றனர்" என்று தெரிவித்துள்ளார் மோடி.
தற்போது புதுடில்லி, சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் சட்டசபைத் தேர்தலுக்கான பரப்புரைகள் அனல் பறக்கின்றன. காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் ஒருவரை ஒருவர் மிகக் கடுமையான வார்த்தைகளால் பரஸ்பரம் விமர்சித்து வருகின்றனர். அத்தோடு விடாது ஒருவர் மீது ஒருவர் தேர்தல் ஆணையத்திடமும் முறைப்பாடு செய்துவருகின்றனர். (ற)



பிரமோஸ் பிளாக் 3 வகை ஏவுகணை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது என்று இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. ராஜஸ்தானின் பொக்ரான் ஏவுகணைத் தளத்தில் இருந்து சோதனை செய்யப்பட்ட இந்த ஏவுகணை 300 கிலோ எடையுள்ள அணு ஆயுதத்தை 290 கி.மீ தூரம் வரை எடுத்துச் சென்று தாக்கும் திறன் கொண்டது. (ற)

## இரு மாதங்களில் 142 புதிய கட்சிகள்

### களைகட்டுகின்றது இந்திய தேர்தல் களம்


புதுடில்லி, நவ.20
இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்களே உள்ளது. தேர்தலை சந்திக்க பா.ஜ.க., காங்கிரஸ் போன்ற பெரிய கட்சிகள் மட்டுமின்றி சிறிய கட்சிகளும் கூட ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளன.
இந்தியாவில் கடந்த ஒகஸ்டு மாதம் வரை 1392 கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்திருந்தன. எனினும் கடந்த 2 மாதங்களாக அரசியல் கட்சிகள் தொடங்குவது மிகவும் அதிகமாகியுள்ளது என்று தேர்தல் ஆணையம் கூறுகின்றது. கடந்த 2 மாதங்களில் மட்டும் 142 புதிய கட்சிகள் முளைத்துள்ளன. அதனால் இந்தியாவில் உள்ள மொத்தக் கட்சிகளின் எண்ணிக்கை 1534 ஆக உயர்ந்துள்ளது.
ஆசிரமம் நடத்தும் சாமியார்கள், வியாபாரிகள், ஓய்வு பெற்ற அரசு உயர் அதிகாரிகள் எனப் பலரும் புதிய அரசியல் கட்சிகள் தொடங்குவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இவர்களில் பலரும் பெரிய கட்சிகளின் பெயர் ஒத்து வருவது போல் தங்கள் புதிய கட்சிகளுக்கு பெயர் வைத்துள்ளனர். இந்த கட்சிகள் லாபம் கருதியே தொடங்கப்பட்டு இருப்பதாக தெரிய வந்துள்ளது.
புதிய கட்சிகளில் 90 சதவீத கட்சிகளுக்கு அன்பளிப்பு என்ற பெயரில் நிறைய வருமானம் வருகிறது. மற்றபடி இந்த கட்சிகள் வேறு எந்த அரசியல் பணியிலும் ஈடுபடுவதில்லை. பதிவு செய்யப்பட்டுள்ள 1,534 கட்சிகளில் 16 சதவீத கட்சிகளே அரசியலில் ஈடுபடுகின்றன. மற்ற கட்சிகள் சலுகைகளை அனுபவிக்கவே பயன்படுத்தப்படுகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏ.கே.-47 துப்பாக்கியை உருவாக்கியவர் சுகயீனம்



மொஸ்கோ, நவ.20
ஏகே-47 துப்பாக்கியை உருவாக்கிய மிக்கையல் கலஸ்நிக்கோவ் (வயது 94) சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
ரஷ்யாவின் உட்முரிட்ரியா மாகாணத்திலுள்ள மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று ரஷ்யத் தகவல்கள் கூறுகின்றன.
கடந்த மே மாதம் இருதயம் தொடர்பாக சிகிச்சைகளை கலஸ்நிக்கோவ் பெற்றுக்கொண்டார் என்றும் மேலதிக சிகிச்சைகளுக்காகவே அவர் மொஸ்கோவுக்குச் சென்றிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.
துப்பாக்கிகளில் மிகவும் பிரபலமானதாகக் காணப்படும் ஏகே-47 உலகம் முழுவதும் ஏறத்தாழ 100 மில்லியன் வரை பரவியுள்ளது. முதலாவது ஏகே-47 ஆயுதத் தொழிற்சாலையின் சிரேஷ்ட உருவாக்குநராக 80 வயது வரை அவர் செயற்பட்டிருந்தார். (ற)



செவ்வாய் கிரக மேற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 'மாவென்' என்ற விண்கலத்தை அமெரிக்கா நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. 'அட்லஸ் வி-401' ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட இந்த விண்கலம் 10 மாதங்கள் பயணித்துச் செவ்வாயை அடையும். இது குறித்து நாஸா தரைக் கட்டுப்பாட்டு மையம் தெரிவிக்கையில், "விண்கலம் சிறப்பான முறையில் பயணத்தை ஆரம்பித்துள்ளது. அது 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் செவ்வாய் கிரகத்தைச் சென்றடையும்." என்று தெரிவித்துள்ளது. (ற)

## பின்வாங்குகின்றன ஐரோப்பிய நாடுகள்

### அழிப்பதற்கு இடமின்றிக் காத்திருக்கும் சிரிய இரசாயன ஆயுதங்கள்

பிரஸ்சல்ஸ், நவ.20
சிரியாவின் சுமார் ஆயிரம் மெற்றிக்தொன் எடையுள்ள இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் தயக்கம் காட்டுகின்றன.
குறித்த இரசாயன ஆயுதங்களை தமது நாட்டுக்கு வெளியே வைத்து அழித்துவிடும்படி சிரியா கேட்டிருந்தது. அதற்கமைய அதற்காக ஐரோப்பிய நாடுகள் சில பட்டியலிடப்பட்டிருந்தன.
எனினும் தற்போது அந்த நாடுகள் பின்வாங்கத் தொடங்கியுள்ளன.
அல்பேனியா இந்தத் திட்டத்தை நிராகரித்து விட்டது. "இது ஓர் சவாலான பணி. நீண்டகால அடிப்படையிலும் அது பற்றி நாம் சிந்திப்பதாக இல்லை" என்று அந்த நாடு கூறியுள்ளது.
அதேபோன்று ஹொலண்ட், அல்பேனியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளும் இதிலிருந்து பின்வாங்கியுள்ளன.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஹொலண்ட் வெளிவிவகார அமைச்சர் பிரான்ஸ் டிம்மர்மான்ஸ், "இரசாயன ஆயுதங்களை வெளியே கொண்டு சென்று அழிப்பதை விடவும் அதை சிரியாவில் அழிப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளலாம்" என்று கூறியுள்ளார்.
இந்த இழுபறியால் இரசாயன ஆயுத அழிப்புப் பணிகள் தொய்வடைந்துள்ளன. (ற)

## ஆளில்லா விமானம் தயாரித்தது ஈரான்

### இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தவாம்

தெஹ்ரான், நவ.20
ஈரான் தமது நாட்டுத் தயாரிப்பான புதிய வகை ஆளில்லா விமானம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
இந்த ஆளில்லா விமானம் 30 மணி நேரம் தொடர்ச்சியாகப் பறப்பை மேற்கொள்ள வல்லது என்று கூறப்படுகின்றது.



"பொட்ராஸ் ரக இந்த ஆளில்லா விமானம் தொடர்ச்சியாக 30 மணி நேரம் பறப்பை மேற்கொள்ளக் கூடியது. இஸ்ரேல் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது. 25 ஆயிரம் அடி உயரத்தில் இருந்தவாறு 2 ஆயிரம் கிலோமீற்றர் வரை சென்று தாக்குதல் மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் வல்லமை கொண்டதாகும். எமக்கு எதிராக பல்வேறு தடைகள் இருந்தபோதும் ஈரான் எமது விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ள இந்த ஆளில்லா விமானம் ஈரான் ராணுவத்தின் பலத்தை அதிகரிக்கும்" என்று ஈரான் தெரிவித்துள்ளது.
ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகின்றது என்று இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. தற்போது அணு செறிவூட்டல் தொடர்பாக மேற்கு நாடுகளுடன் ஈரான் பேச்சுக்களை நடத்தி வரும் நிலையில், அந்நாட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரேல் எச்சரித்து வருகின்றது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே ஈரான் தனது புதிய தயாரிப்பான ஆளில்லா விமானத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது என்று கருதப்படுகின்றது.
முன்னர் ஈரான் தயாரித்த ஷாஹத்-129 என்ற ஆளில்லா விமானம் 24 மணி நேரம் வரை பயணித்து 2000 கிலோமீற்றர் தூரம் வரை செல்லக் கூடியதாகும். (ற)

## குமுறுகின்றன இந்தோனேஷிய எரிமலைகள்

ஜகார்த்தா, நவ.20
இந்தோனேஷியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் இரண்டு எரிமைலைகள் வெடித்துச் சிதறியுள்ளன. அவற்றில் இருந்து கிளம்பிய கரும்புகை 2 கிலோமீற்றர் உயரத்திற்குப் பரவியுள்ளது.
அதனால் அந்த மலைப்பகுதி அடிவாரத்தில் இருந்த 600 குடும்பங்கள் வெளியேறினர். குறித்த பயண மார்க்கமாக விமானங்கள் பறக்க அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது. (ற)

## பத்திரிகை நிறுவனம் மீது பிரான்ஸில் துப்பாக்கிச் சூடு

### படப்பிடிப்பாளர் காயம்

பாரிஸ், நவ.20
பிரான்ஸில் உள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் 'லிபராசியோன்' பத்திகையின் தலைமை அலுவலகத்துக்குள் திடீரெனப் புகுந்த துப்பாக்கிதாரி சரமாரியாகச் சுடத் தொடங்கியுள்ளார். அதில் ஒரு உதவிப் படப்பிடிப்பாளர் படுகாயமடைந்துள்ளார்.



சம்பவத்தை அடுத்து பிரான்ஸ் உள்துறை அமைச்சர் மனுவல் வால்ஸ் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த லிபராசியோன் பத்திரிகையின் வெளியீட்டுப் பிரிவின் தலைவர் நிக்கோலா டெமோரோன்,
"ஒரு ஜனநாயக நாட்டில் துப்பாக்கியுடன் பத்திரிகை அலுவலகத்தில் நுழைவதென்பது மிகவும் அதிர்ச்சிகரமான விடயம். நாம் மிகவும் அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்றைக் கடந்து வந்துள்ளோம். இதைச் செய்தவனின் மனநிலை எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க முடியவில்லை" என்று தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஒல்லோந்த் "அனைத்து வளங்களையும் உபயோகித்து உடனடியாக இந்த வன்முறையாளனைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அமெரிக்காவில் சூறாவளி


### 6 பேர் சாவு: பலர் காயம்

வொஷிங்ரன், நவ.20
அமெரிக்காவைத் தாக்கிய கடும் சூறாவளியால் 6 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
சூறாவளியால் இல்லனாய்ஸ் மற்றும் சிகாகோ நகரங்களே பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. மின்கம்பிகள், மரங்கள் சாய்ந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதிகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் முழுவீச்சுடன் இடம்பெற்று வரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சூறாவளி ஏற்படுத்தியுள்ள சேதம் மற்றும் மீட்பு பணிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றார். (ற)

## ஆஸிக்கான தூதரை அழைத்தது இந்தோனேஷியா

### ஸ்நோடனின் கைங்கரியத்தால் இருநாடுகளுக்கிடையே முறுகல்

லண்டன், நவ.20
இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பங் யுதோயோனோ, அவரது மனைவி அனி மற்றும் மூத்த அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்களை ஆஸ்திரேலிய உளவு அமைப்பு ஒட்டுக்கேட்டது என்று வெளியாகிய தகவல்களை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க தேசிய உளவு நிறுவனத்தின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் பகிரங்கப்படுத்திய ஆவணங்களில் இருந்தே இந்தத் தகவல் கசிந்துள்ளது.
ஆஸ்திரேலியப் பிரதமராக தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த கெவின் ரூத் பதவி வகித்த போது, மின்னணு புலனாய்வு அமைப்பும், பாதுகாப்பு இயக்குநரகமும் இணைந்து, 2009 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் 15 நாள்கள் இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பாம்பங்கின் தொலைபேசி ஒட்டுக்கேட்டுள்ளன.



இந்தோனேஷய ஜனாதிபதி மற்றும் அவருக்கு நெருக்கமான 9 பேர் ஆஸ்திரேலியாவால் உளவு பார்க்கப்பட்டனர் என்று அந்த ஆவணங்கள் கூறுகின்றன.
அதையடுத்து இதுகுறித்து ஆஸ்திரேலியா உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என்று இந்தோனேஷிய ஜனாதிபதி மாளிகை கோரியுள்ளது.
ஆஸியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக ஆஸ்ரேலியாவுக்கான தமது நாட்டுத் தூதரை இந்தோனேஷியா திருப்பி அழைத்துள்ளது.
அதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபாட், "ஊடகங்களில் வெளியாகும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இதுகுறித்துக் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிரிவுக்கு காணி கொள்வனவு

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கான கட்டடம் அமைப்பதற்கு 8 பரப்புக்காணி கொள்வனவு செய் யப்பட்டு வலய கல்விப் பணி மனைக்கு வழங்கப் பட்டுள்ளது. வெளிநாட்டு புலம்பெயர் மக்கள் மற்றும் வலி. மேற்கு சங் கானை மக்களின் நிதியுதவி யுடன் 45 லட்சம் ரூபா வுக்கு காணி கொள்வனவு செய்யப் பட்டதாகக் காணி கொள்வன வுக் குழுத் தலைவர் கு.குண சிறி தெரிவித்தார்.

1000 பாடசாலைகள் திட் டத்துக்குள் சங்கானை சிவப் பிரகாச மகா வித்தியாலயம் உள்வாங்கப்பட்டது.

அதனால் முதலாம்தரம் தொடக் கம் 5 ஆம் தரம் வரையான ஆரம்பப் பிரிவு நீக்கப்பட்டது. இதனையடுத்து அந்தப் பிர தேச மக்கள் ஒன்றிணைந்து இந்தக் காணியை சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் கொள்வ னவு செய்து வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து புதிய ஆரம்பப் பிரிவுப் பாடசாலை விரைவில் உருவாக்குவதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (ந-41)




சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தின் ஒளி விழா நிகழ்வு வெள்ளிக்கிழமை கல்லூரி நாகேந்திரராசா மண்டபத்தில் இடம்பெற்றது.
இதன் போது வேதாகம வாசிப்பு, கிறிஸ்மஸ் கீதங்கள், இறை செய்தி ஆகியவற்றுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ந-9)

## நேரஅட்டவணையை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இதழியல் டிப்ளோமா 2011 (பகுதி நேரம்) இரண்டாம் வரு டம், முதலாம், இரண்டாம் அரையாண்டு பரீட்சை டிசெம்பர் 2 ஆம் திகதி நடை பெறவுள்ளது. பரீட்சை அட்டவணையை ஊடக வள பயிற்சி நிலையத்திலும் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அலுவலகம் விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம் என பதிவாளர் அறிவித்துள் ளார். (ந)

## வெளிநாட்டு பயணியிடம் பணத்தை திருடிய நபர் சிக்கினார்

கொழும்பு, நவ.20

வெளிநாட்டுப் பயணி ஒருவரின் பணத்தைத் திருடிய நப ரொருவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார். களுத்துறை வடக்கில் அமைந்துள்ள ஹோட்டல் விடுதியொன்றில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பயணியின் அறையிலிருந்து 2 லட்சத்து 79 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநரட்டு நாணயத் தாள்களை இந்த நபர் திருடியதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் துரிதமாகச் செயற்பட்ட களுத்துறைப் பிரதேசத்துக்கான குற்றவியல் விசார ணைப் பிரிவினர் அந்த நபரைக் கைது செய் தனர்.

தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட இந்த நபரின் தங்குமிடத்தில் இருந்து அவரால் ஏற்கெனவே திருடப்பட்ட இரண்டு கைத்தொலைபேசிகள், ஒரு ஐபாட், டிஜிற்றல் புகைப்படக் கருவி என்பன கைப்பற்றப்பட் டுள்ளன. (க)

## தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்

வலி.வடக்கு, நவ.20



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி தேசிய மட்டப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

இலங்கையில் முதன் முதலாக நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான கட்டுரைப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவி விதுஷா வாமதேவன் இரண்டாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கும் மாவட்ட மாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். இதனை கல்லூரிச் சமூகம் பெரிதும் பாராட்டியுள்ளது. (ந-86)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 17.09.1929 மறைவு 23.10.2013

அமரர் பெரியதம்பி வீரசிங்கம்

கடந்த (23.10.2013) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் பெரியதம்பி வீரசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிருத்திய கிரியைகள் இன்று (20.11.2013) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (22.11.2013) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற வுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.
குடும்பத்தினர்.
(40095) (7.6.3)


## சின்னம் சூட்டுதல்

தென்மராட்சி, நவ. 20

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த வருடத்துக்கான சிரேஷ்ட மாணவத் தலைவர் கள், உதவிச் சிரேஷ்ட மாணவத் தலைவர்கள் உட்பட 70 மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

மாணவ தலைவர்களுக்கான சின்னங்களை கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் மாணவத் தலைவிகளுக்கான சின்னங் களை கல்லூரி பகுதித் தலைவரும் மூத்த ஆசிரி யையுமான திருமதி பரிமளா இரத்தின சிங் கமும் சூட்டி வைத்தனர். (ந)


### கண்ணீர் அஞ்சலி



மனித உரிமைகள் பேரவைச் சட்டத்தரணியும்
சிறந்த சமூக சேவையாளரும்
சமயப் பற்றாளரும் ஆகிய
வேலுப்பிள்ளை சிற்றம்பலம்
கணேசலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். அன்னாரது பிரிவால் ஆறாத் துயரில் உறைந்து போய் நிற்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா இறைபதம் அடைந்திட மாவைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகக் குழு
மாவிட்டபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
யா/232
(40197) (5.6.3)



### 6 ஆம் ஆண்டின் நினைவலைகளுடன்



மலர்வு 03.08.1933
உதிர்வு 27.11.2007

அமரர் தம்பையா கார்த்திகேசு

ஆறு ஆண்டுகள் ஆனதுவோ ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது
எமைவிட்டு உம் நினைவலைகள்
உமையிழந்து ஆறாண்டுகள் ஆனாலும்
நீர் இருப்பீர் எம் நெஞ்சமதில்

கைதடி மேற்கு, கைதடி. குடும்பத்தினர்.
(35629) (2.6.3)


## மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 20

நயினாதீவு வைத்தியசாலைக்கு மருத்துவர் கு.பாலச் சந்திரன் வைத்திய அதிகாரியாக கடந்த வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்சமயம் தேவையான மருந்துவசதிகள் வைத்தியசாலையில் உள்ளன. எனினும் இங்கு பணியாற்றிய தாதி உத்தியோகத்தர் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குச் சென்று விட்டதால் நோயாளர்கள் பாதிக்கப்படுகின் றனர்.

இதனால் மேற்படி வைத்தியசாலைக்கு தாதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (ந-7)


### மரண அறிவித்தல்கள்

#### சோமசுந்தரம் பாலசிங்கம்



(நாச்சிமார் கோயில் மோட்டார் சைக்கிள் மெக்கானிக் பாலா)

சொர்ணவடலியைப் பிறப்பிடமாக வும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிட மாகவும் கொண்ட சோமசுந்தரம் பால சிங்கம் 16.11.2013 சனிக்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.11.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (40190) (2.6.3) தகவல்: குடும்பத்தினர். 077 959 0041


## பொங்கல் திருவிழா

வவுனியா கல்நாட்டிய குளத்திலுள்ள வேப்பங்குளம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஒரு நாள் பொங்கல் உற்சவமாக இடம் பெறவுள்ள நிகழ்வுகள் காலை 8 மணிக்கு அபிஷேக பூசையுடன் ஆரம்பமாகும். மூலஸ் தான பூசை இடம்பெற்று விநாயக பெரு மானுக்குரிய பிரதான கும்பம் உள் வீதி வலம் வருவதைத் தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெறும். (க-421)


#### சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை (சின்னத்துரை)



(இளைப்பாறிய ஊழியர்- துறைமுக அதிகார சபை)

பழைய பூங்கா வீதி, யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சவிரிமுத்து அந்தோனிப் பிள்ளை 18.11.2013 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிசிலியா அந்தோனிப் பிள்ளையின் அன்புக் கணவரும், எட்வேட், டேவிற், பேணாட், காலஞ்சென்ற சாள்ஸ் மற்றும் மரியநாயகி (வசந்தி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹிப்பொலிற்றா, குயின் அஞ்சலின், செல்வறாகினி, காலஞ்சென்ற இம்மானுவல் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றொசானி, தயானி, சிறோமி, தயாளன், வினோத், பிரசாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.11.2013) புதன் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/3, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (40198)(5.3.6)

தகவல்:
இம்மானுவல் தயாளன்
(C.M.E.V பேரன்)



### ஆறாத்துயரத்தில் ஆண்டு ஏழு



பிறப்பு 10.05.1959
இறப்பு 07.12.2006

அமரர் சிவசாமி ரஞ்சன்

(பெற்றோலிய கூ.தாபனம்)
திதி:- திருதியை (20.11.2013)

நினைவுகள் நீண்டது
உறவுகள் மறைந்தது
பள்ளி செல்லும் குழந்தைகளும்
கூடி வாழ்ந்த குடும்பமும்
கண்ணீர் விட்டுக் கலங்குகிறது
மறைந்தவரும், மாண்டவரும்
மீண்டும் வர நினைக்கின்றோம் முடியவில்லை.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

11, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (40312)(2.6.7)
குடும்பத்தினர்.


## சத்தியப் பிரமாணம்



சாவகச்சேரி இந்துக் கல் லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் செல்லையா சபாரத்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலை யில் தீவு முழுவதுக்குமான சமா தான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண் டார்.

[illegible] சாவகச்சேரி [illegible] [illegible]ம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபி விருத்திச் சங்க உறுப்பினருமாவார். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் சந்தை



மன்னார், நவ.20
மன்னாரில் இளைஞர் களுக்கான தொழில் வாய்ப்புக்களை இலகு படுத்தும் பொருட்டு மாவட்ட தொழில் சந்தை ஒன்று இங்கு இடம் பெற்றது.
மன்னார் மாவட்டச் செயலகத்தில் இயங்கி வரும் மனிதவலு அபிவிருத்திப் பிரிவு மாவட்டச் செயலகத்துடன் இணைந்து மனிதவலு, வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்படி தொழில் சந்தையை ஏற்பாடு செய்திருந்தது.
மன்னார் முருங்கன் மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையில் இந்தத் தொழில் சந்தை இடம்பெற்றது.
இதனை மன்னார் அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய பிரதம விருந்தினரர்கக் கலந்து கொண்டு திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# நீர்த் தேக்கத்தை உருவாக்குமாறு வன்னேரிக்குளத்தில் கோரிக்கை

அக்கராயன்,நவ.20
கிளிநொச்சி வன்னேரிக் குளத்தையும், தேவன் குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கமொன்றை உருவாக்குமாறு வடமாகாண விவசாய அமைச்சரிடம் வன்னேரிக்குளம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக் குளம் கிராமத்தில் தற்போது 500 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.
இந்தக் கிராமத்தின் உயிர்நாடியாக இங்குள்ள குளமே காணப்படுகின்றது. இந்தக் குளத்தை நம்பியே இங்குள்ள மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் கடந்த 60 ஆண்டுகளாக புனரமைப்புப் பணிகள் எதுவும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை.
மேலும் வன்னேரிக்குளம் கிராமத்தை உவர் ஆபத்தும் எதிர்கொண்டுள்ளது. இங்குள்ள குஞ்சுக்குளம் என்ற சிறிய கிராமம் முழுமையாக உவரடைந்ததால் இங்கு வாழ்ந்த சுமார் 50 குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன. அத்துடன் 500 ஏக்கர் வரையான வயல் நிலமும் உவர் நிலமாக மாறியுள்ளது. இந்த நிலையில் வன்னேரிக்குளத்தையும், தேவன் குளத்தையும் இணைத்து பெரியதொரு நீர்த் தேக்கம் உருவாக்கப்படுமாயின் வன்னேரிக்குளம் கிராமத்தை உவராபத்திலிருந்து மீட்க முடியுமென மக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இங்கு மிதிவெடி அபாயம் உள்ளதாக கடந்த 4 ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகின்றது. வன்னேரிக் குளத்தையும் தேவன் குளத்தையும் இணைப்பதன் மூலமாக பூநகரியின் ஜெயபுரம் கிராம மக்களுக்கும், குஞ்சுக் குளம் மக்களுக்கும் வயல் நிலங்கள் வழங்கக் கூடிய தாக இருக்கும்.
மேலும் சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியும். அத்துடன் வன்னேரிக் குளம் கிராமத்தையும் உவர் ஆபத்திலிருந்து காப் பாற்ற முடியுமென இந்தக் கிராம மக்கள் வடமாகாண விவசாய அமைச்சருக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர். (க-18)



முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள நீராவிப் பிட்டி கிழக்கு கிராமத்தில் ஐரோப்பிய ஒன்றியம், ஆஸ்திரேலிய அரசு, சுவிஸ் முகவர் அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் அமைக்கப்படவிருக்கும் வீடுகளுக்கான அடிக்கல்லை முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் நட்டு வைக்கின்றார். (க-402)

## கிளிநொச்சியில் மூடப்பட்டன கூட்டுறவு சங்கக் கிளைகள்

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளை நிலையங்கள் கடந்த இரண்டு மாதங்களில் மூடப்பட்டுள்ளன.
உரிய நிர்வாக முகாமைத்துவம் இல்லாமை, விற்பனையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, தனியார் வர்த்தக நிலையங்களுடன் போட்டியிட முடியாத நிலை போன்ற காரணங்களால் இந்தக் கிளை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.
அந்தப் பகுதி கிளைக் குழுக்களுக்குத் தெரியாமல் திடீரென இந்தக் கிளைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் தொடர்ந்தும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நட்டத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. சிவநகர், திருநகர், உதயநகர் கிழக்கு ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று கிளை நிலையங்களே இவ்வாறு மூடப் பட்டுள்ளன. (க-6)

வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு

# மூன்று கிராமங்களில் வெள்ள வாய்க்கால்கள்

கிளிநொச்சி, நவ.20
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமங்களில் வெள்ளப் பாதிப்புக்களை தடுக்கும் வகையில் கழிவு வாய்க்கால்களை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினால் மாவட்டத்தில் ஏற்படக் கூடிய இடர்களைத் தடுப்பது மற்றும் இடர்களில் இருந்து மக்களை பாதுகாப்பது போன்ற பல் வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினால் கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய மூன்று கிராமங்களில் வெள்ள வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பிரமந்தனாறு கிராமத்தில் சுமார் 38 லட்சம் ரூபா செலவிலும், கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள உருத்திரபுரம் கிராமத்தில் 64 லட்சம் ரூபா செலவிலும், சாந்தபுரம் கிராமத்தில் 19 லட்சம் ரூபா செலவிலும் இந்த வெள்ள வாய்க்கால்களை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# இடிந்து விழும் நிலையில் பனிக்கன்குளம் முன்பள்ளி

இடிந்து விழும் நிலையிலுள்ள பனிக்கன்குளம் முன்பள்ளியைப் புனரமைத்து இங்கு கல்வி பயிலும் 35 சிறார்களின் நலன்களைப் பேணுவதற்கு உரிய அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்தில் ஏ-9 வீதியில் இந்த முன்பள்ளி அமைந்துள்ளது. இதன் கூரை சேதமடைந்து மிகவும் ஆபத் தான நிலையில் தற்போது காணப்படுகின்றது.
இங்கு தற்போது 35 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர்.
கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இந்த முன்பள்ளி ஆபத்தான நிலையில் இயங்கி வருகின்றது. இதனைப் புனரமைத்து வழங்குமாறு பெற்றோர்கள் அதிகாரிகளிடம் ஏற்கெனவே கோரிக்கை விடுத்திருந்தனர்.
ஆனால் புனரமைப்புப் பணிகள் இன்றுவரை இடம்பெறவில்லை. இதனால் இங்கு கல்வி கற்கும் சிறார்களும், ஆசிரியையும் பல்வேறு இடர்களை எதிர்கொள்வதோடு எந்த நேரத்திலும் கட்டடம் இடிந்து விழுந்து விடுமோ என்ற அச்சத்துடன் உள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

# பஸ் தரிப்பிடக் குறியீட்டை அகற்றுமாறு கோரிக்கை

மாங்குளம், நவ.20
முறிகண்டியில் அமைக்கப்பட்டுள்ள பஸ்தரிப்பிடத்துக்கான குறியீட்டை பொருத்தமானதொரு இடத்துக்கு அகற்றுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஏ-9 வீதியில் முறிகண்டிப் பிள்ளையார் கோயில் தாண்டி யாழ்ப்பாணம் நோக்கி வருகின்ற இடத்தில் வீதி அதிகார சபையினரால் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்புக் குறியீடு வீதியின் வளைவுப் பகுதியில் உள்ளதால் அதனை அகற்றி 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் பொருத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த பஸ்தரிப்பு நிலையத்தினால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் அதனை உடனடியாக அகற்றுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
அண்மையில் மாங்குளம் பொலிஸாரால் போக்குவரத்துத் தொடர்பான ஒன்றுகூடல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட பொது மக்களே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.
வீதி அதிகார சபை உறுப்பினருக்கு மாங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரியால் பஸ்தரிப்புக் குறியீட்டை மாற்றி அமைக்குமாறு கூறப்பட்ட போதிலும் அது இதுவரை நிறைவேற்றப்படாமை குறித்தும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-422)

# சேதமடைந்த வீதியை புனரமைக்க வேண்டுகோள்

## சிறாட்டிகுளம் மக்கள் விடுக்கின்றனர்

முல்லைத்தீவு, நவ.20
மோசமாகச் சேதமடைந்து காணப்படும் மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் பிரதான வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சிறாட்டிகுளம் கிராமத்தில் தற்போது 80 குடும்பங்கள் வசித்து வருகின்றன.
குறித்த கிராமத்துக்கு நட்டாங்கண்டல் சந்தியில் இருந்து செல்லும் ஒரேயொரு பிரதான வீதி புனரமைக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.
நட்டாங்கண்டல் சந்தியில் இருந்து இந்தக் கிராமத்துக்குச் செல்லும் 5 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியில் நட்டாங்கண்டல் தமிழ் வித்தியாலயம் மற்றும் உழுவன் ஏரி கிராமம் என்பன அமைந்துள்ளன.
இந்த வீதியில் உள்ள பறங்கியாற்றுக்கான பாலம் மாத்திரமே அமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. ஆனால் வீதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறவில்லை.
இந்தக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்கள் தமது சகல தேவைகளுக்கும் வேறு இடங்களுக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளன. அதற்கு இந்த வீதியையே பயன்படுத்த வேண்டும். தற்போது பருவ மழையும் பெய்ய ஆரம்பித்துள்ளதால் வீதியில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகின்றது.
இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்பதில் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மேலும் பலத்த மழை பெய்யுமாயின் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-6)

"-"
நட்டாங்கண்டல் சந்தியில் இருந்து இந்தக் கிராமத்துக்குச் செல்லும் 5 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியில் நட்டாங் கண்டல் தமிழ் வித்தியாலயம் மற்றும் உழுவன் ஏரி கிராமம் என்பன அமைந்துள்ளன.

# வவுனியா தெற்கில் முறைசாராக் கல்வி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் சான்றிதழ் வழங்கலும், கண்காட்சியும் கடந்த 12 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முறைசாராப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன், வெளிக்களப் பணிப்பாளர் ஜனாப் எம்.ஜே.துவான் மன்சில் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் கடந்த முறைசாராப் பிரிவில் பயிற்சி பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் முறைசாரா கல்வி பற்றிய கண்காட்சியும் இடம்பெற்றது.
இந்த நிகழ்வின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றுகையில்;
குறிப்பிட்ட வயதுவரை பெற்றோரின் அரவணைப்பில் இருந்த பிள்ளைகள் பின்னர் பாடசாலைக் கல்வியைப் பெறுகின்றனர். அதற்குப் பின் னர் சுயமாகச் சிந்தித்து நினைத்த இலக்கை அடைவதற்கு ஏற்ற இடமாக முறைசாராக் கல்வி உதவியளிக்கிறது. இதன் மூலமாக சுயமாக வேலை தேடும் ஆற்றல் வளர்த்தெடுக்கப் படுவதுடன் ஜீவனோபாயத்தைத் தேடும் திறன் விருத்திக்கும் முறைசாராக் கல்விப் பிரிவு வித்திடுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதல்

## பொலிஸாரின் கண்ணீர் புகை பிரயோகத்தால் நிந்தவூரில் பதற்ற நிலை நீடிக்கிறது



அம்பாறை.நவ.20

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியை நிந்தவூர் பிரதேசத்தில் இடைமறித்து ஆர்ப்பாட்டம் செய்த பொது மக்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து, பொதுமக்கள் பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதனால் இந்தப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து நேற்று காலையும் அந்தப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அதனால் பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன் போக்குவரத்தும் தடைப்பட்டது. கடந்த இரு வார காலமாக நிந்தவூர் பிரதேசத்தில் இரவு வேளைகளில் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதுடன் அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொண்டதாக சந்தேகிக்கப்படும் மர்ம நபர்கள் சிலரை நேற்று முன்தினம் இரவு கடற்கரையில் வைத்து பொது மக்கள் மடக்கிப் பிடித்ததையடுத்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது.


இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மர்ம நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரியுமே பொது மக்கள் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

இந்தநிலையில் நேற்றுக் காலை கல்முனை - அக்கரைப்பற்று வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளதோடு, பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட மூன்று பேரையும் கைசெய்துள்ளனர். அத்தோடு நிந்தவூர் பிரதான வீதியில் போடப்பட்ட தடைகளை அகற்றி பொதுமக்களை கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி கலைத்து போக்குவரத்தை சீரான நிலைக்கு கொண்டு வந்தனர். தற்போது குறித்த பகுதியில் 500 இற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச-30)



# பிரதேச சபைக்கு நிரந்தரக் கட்டடம்

*ரூ.29.99 மில்லியன் செலவில் அமைப்பு*



மட்டக்களப்பு.நவ.20

மட்டக்களப்பு.போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு தற்போது புதிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது.

அதனால் இந்தப் பிரதேச சபைக்கு தற்போது புதிய நிரந்தரக் கட்டடம் வெல்லாவெளியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

பொருளாதார அமைச்சின் கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின் கீழ் 29.99 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது என்று போர தீவுப் பற்று பிரதேச சபை செயலர் எஸ்.குபேரன் தெரிவித்தார்.

இந்தக் கட்டட வேலைகள் முடிவுற்றதும் தமது சேவைகளை மேலும் விரிவு படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

# மகாத்மா காந்தி பூங்கா திறப்பு



மட்டக்களப்பு.நவ.20

மட்டக்களப்பு நகரத்தில் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி பூங்கா நேற்று திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் 28 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி பூங்காவில் ஓய்வு எடுப்பதற்கான இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன், பூமரங்களும் நட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர்களான எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# மக்கள் கொந்தளிப்பு வரவேற்கத்தக்கது

## மாவை எம்.பி. தெரிவிப்பு

அம்பாறை. நவ.20

"அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூரில் இடம்பெற்றுள்ள சம்பவம் கவலையளித்துள்ளது. இரு வாரங்களுக்கு மேல் அச்சம், பீதிக்குள் உள்ளாக்கப்பட்டுள்ள அங்குள்ள மக்களின் துணிச்சலான நடவடிக்கை பாராட்டத்தக்கது."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலர் மாவை.சேனாதிராசா கூறினார்.

நிந்தவூர் முஸ்லிம் மக்களை விசேட அதிரடிப் படையினருக்கு எதிராகக் கிளர்ந்தெழ வைத்துள்ள சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட அவர் இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த நாட்டில் சிறுபான்மை சமூகங்களை அச்சம், பீதிக்குள்ளாக்கி அவர்களது இயல்பு வாழ்க்கையை முடக்கி அசாதாரண சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற பேரினவாத அரச செயற்பாட்டின் ஓர் அங்கமே நிந்தவூர் சம்பவமாகும்.

ஏற்கனவே கிழக்கில் தமிழ் முஸ்லிம் கிராம மக்களை உலுப்பிய 'கிறீஸ் மனிதன்' பாணியில், நிந்தவூரில் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த சுமார் இரு வார காலமாக இரவு வேளைகளில் இடம்பெற்றுள்ள கிறீஸ் மனிதன் பாணியிலான சம்பவங்கள் அப்பாவி மக்களை அச்சம், பீதிக்குள்ளாக்கி அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

எமது மண்ணிலிருந்து எம் மக்களின் குடியிருப்பு பிரதேசங்களிலிருந்து குவிக்கப்பட்டுள்ள படைத்தரப்புகள் அகற்றப்பட வேண்டும்.

சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்குஎதிராக இணைந்து போராட வேண்டிய காலமே இதுவாகும்.- என்றார். (ச-30)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு அபிவிருத்திகள்

## கல்முனை விகாராதிபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்றன.

அம்பாறையில் இருக்கின்ற அமைச்சர்கள் அங்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்து பல அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலே தான் அபிவிருத்திகள் அதிகம் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு கல்முனை சுபத்திர ராம விகாராதிபதி ரண்முத்துகல சங்கரெத்திதேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட மரம் நடுகை நிகழ்வு பட்டிருப்பு, வெல்லாவெளி பிரதான வீதியில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள மக்களும் தமிழ் படிக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் சிங்களம் படிக்க வேண்டும். தமிழ் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சிங்களத்தைக் கற்பிக்க வேண்டும்.

அதேபோல் ஆசிரியர்களும் சிங்களம் கற்கவேண்டும். வரலாறுகளை பாடசாலை அதிபர்கள் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களுக்கு வரலாற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாதுள்ளது.- என்றார்.

# மீனவருக்கு சைக்கிள்கள்



அட்டாளைச்சேனை இம்றானியா நன்னீர் மீன்பிடிச் சங்க மீனவர்களுக்கு ஒரு தொகுதி மீன்பிடி வலைகள், சைக்கிள்கள் ஆகியன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அட்டாளைச்சேனையில் மீன்பிடி சங்கத்தின் தலைவர் எம்.பி. ஜமால்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. அன்ஸில், உறுப்பினர்களான எஸ். எல்.முனாஸ், ஏ.எஸ்.எம். உவைஸ் உட்பட பலர் கலந்து கொண்டு சைக்கிள்கள் வழங்கி வைத்தனர். (ச)

### கிழக்கு மாகாணத்தில் கடும் வெப்பம்

# பகலில் இடம்பெயரும் சிகரம் கிராம மக்கள்



கிழக்கு மாகாணத்தில் கடும் வெப்பம் நிலவுவதால் தகர கொட்டில்களுக்குள் இருக்க முடியாது பகல் நேரங்களில் வேறு இடங் களுக்குச் சென்று இரவு நேரங்களில் மீண்டும் குடி சைக்குத் திரும்பும் பரிதாப நிலைக்கு ஆரையம்பதி, சிகரம் சுனாமி குடியேற்ற கிராம மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு .ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிகரம் சுனாமி குடியேற்ற கிராம மக்கள் கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட பின்னர் தகரக் கொட்டில்களிலே வசித்து வருகின்றனர்.

சுனாமி இடர் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்தும் இது வரை இந்தக் கிராம மக்கள் தகரக் கொட்டில்களிலே வசித்து வருகின்றனர்.

கடும் வெப்பத்தால் தகரக் கொட்டில்களுக்குள் இருக்க முடியாது பகல் நேரங்களில் வேறு இடங் களுக்குச் சென்று இரவு நேரங்களில் மீண்டும் குடிசைக்குத் திரும் பும் பரிதாப நிலைக்கு சிகரம் சுனாமி குடியேற்ற கிராமமக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஷோகம்' மாநாடு மக்களுக்கு 'சோகமாக' அமைந்துவிடலாகாது

## சண். குகவரதன் தெரிவிப்பு



பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மாநாட்டை கோலாகலமாக நடத்திமுடித்த அரசு அதற்குச் செலவழித்த தொகையை நிவர்த்திசெய்து கொள்வதற்காக வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் மீது வரிச்சுமைகளைச் சுமத்தும் எந்தவிதமான திட்டத்தையும் நடைமுறைப்படுத்தலாகாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவிப் பொதுச் செயலாளர் சண். குகவரதன் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள ஜனாதிபதி இனிமேலாவது இனவாத சக்திகளின் பிடியிலிருந்து விடுபட்டு வடபகுதி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உண்மையான - நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை வழங்க முன்வர வேண்டும். இல்லாவிட்டால், சர்வதேசத்தின் தலையீட்டைத் தவிர்க்கமுடியாது போய்விடுமென்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு மாநகரசபை உறுப்பினரும், திட்டமிடல் அபிவிருத்தி சுகாதாரம் மற்றும் பொதுவசதிகள் தொடர்பான நிலையியற் குழுக்களின் தலைவருமான சண். குகவரதன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஒரு நாட்டில் சர்வதேச நாடுகள் கலந்துகொள்ளும் மாநாடு நடத்தப்படவேண்டுமென்றால் இதற்கான வசதிகள், அபிவிருத்திகள் எனப் பல்வேறு வேலைகளுக்கான பணம் செலவிடப்படவேண்டும். இதனை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், வீணான செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியாததோடு, அச்செலவை நிவர்த்திசெய்துகொள்வதற்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்கள் மீது வரிச்சுமைகளைச் சுமத்துவதை அனுமதிக்க முடியாது.

எனவே, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பொதுநலவாய மாநாட்டின் செலவை மக்கள் மீது சுமத்தும் திட்டங் களை அரசு கைவிடவேண் டும். மாறாக மக்களுக்கு வாழ்வதற்கான வாழ்வாதாரங்களை வழங்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தவேண்டும்.

அத்தோடு, வடபகுதி தமிழ் மக்களின் தீர்க்கப்படவேண்டிய நியாயமான பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்கவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

வெளிநாடுகள் எமக்கு ஆலோசனை கூறும் நிலைமையை உருவாக்கி பின்னர் அந்நாடுகளை விமர்சிப்பது உசிதமானதல்ல.

வடக்குத் தமிழ் மக்களும் இலங்கையர்கள் என்ற நினைப்பு வராதவரை சர்வதேசத்தின் தலையீடுகள் தவிர்க்க முடியாததேயாகும்.

'ஷோகம்' மாநாடு மக்களுக்கு நன்மைகளையும், ஜனநாயகத்தையும் வழங்குவதாக அமையவேண்டுமே தவிர, 'சோகத்தை' கொண்டு வருவதாக அமையலாகாது என்றும் தெரிவித்துள்ளார்.

# நுகேகொட விபசார விடுதி முற்றுகை!

## மூவர் மாட்டினர்

மிரிஹான பொலிஸ் பிரிவில் பாகொட வீதி நுகேகொட பகுதியில் தங்குமிடம் என்ற பெயரில் இயங்கிவந்த விபசார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.

குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த விபசார விடுதியை இயக்கிச் சென்ற ஒருவரும் விபசாரத்தில் ஈடுபட்டனர்எனக்கூறப்படும்இருபெண்களும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண்களுக்கு வயது 21, 23 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, விபசார விடுதியை இயக்கிச் சென்ற சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும், விபசாரத்தில் ஈடுபட்ட இரு பெண்களும் 2 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ் வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள் ளது.

# நூரி தோட்ட அதிகாரி கொலை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு!

## நீதிமன்றில் புலனாய்வுப் பொலிஸார் தெரிவிப்பு

தெரணியகல, நூரிதோட்ட அதிகாரி நிஹால் பெரேராவைக் கொலை செய்தமை, மேலும் இருவருக்குக் காயம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் தொடரப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம்(18ஆம் திகதி) அவிசாவளை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இவ் வழக்கு சம்பந்தமான சகல விசாரணைகளும் பூர்த்தியாகி அந்த அறிக்கைகள் சட்டமா அதிபரின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரின் அறிவுறுத்தல் கிடைத்தபின் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் புலனாய்வுப் பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தவழக்கு அவிசாவளை பதில் நீதிவான் சரத் ஜயவர்தனவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 23 சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் வருமாறு:-

பெரியசாமி கருப்பையா, சரத் விஜேசிங்க, சுப்பிரமணியம் மகேந்திரன், பழனிவேல் விஜயகுமார், பெருமாள் உதய குமார், இராஜேந்திரா ரவிகுமார், கின்னம்மா சிவகுமார், கிருஷ்ணவேல் நிஷாந்த குமார, கிருஷ்ணவேல் இராஜேந்திரா, அனில் சம்பிக்க விஜேசிங்க(தெரணியகல பிரதேசசபையின் முன்னாள் தலைவர்), அஷான் ரங்க விஜேசிங்க, சிதம்பரம் பழனியாண்டி, இந்திரஜித் ஜீவந்த, ஆறுமுகம் அர்ஜுன, உதய விஜேசிறி, அருணாசலம் முனியாண்டி, அமிலவிஜேசிங்க, சம்பத் பத்மகுமார, லக்ஷித விஜேசிரி, தினேஷ் சத்துரங்க, தரிந்து தனஞ்சய.

புலனாய்வுப் பொலிஸாரின் சார்பில் உப பொலிஸ் பரீட்சகர் எஸ்.எம்.பொல்வத்த ஆஜராகியிருந்தார்.

# மொழியைக் கற்பிக்கும் புதிய முறைமை தொடர்பில் ஆய்வு

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



மொழியை கற்பிக்கும் புதிய முறைமை தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன்மூலம் மும்மொழி செயற்றிட்டத்தை நாடு முழுவதும் உரிய முறையில் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்கள் மற்றும் சாதாரண பிரஜைகளுக்கு மொழிகளை கற்பிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுவருவதாக அமைச்சர் கூறினார்.

திறமையுள்ளவர்களுக்கு மொழியை கற்பிக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், ஆங்கிலமொழியை கற்பிக்கும் விசேட திட்டமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வித் திணைக்களத்திற்கு மேலதிகமாக, தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு மொழியை கற்பிக்கும் விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறினார்.

இதேவேளை, மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமொழிதொடர்பான பயிற்சிகள் பொருத்தமாக அமையுமென அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# பல்கலைகளில் பண மோசடிகளை தடுக்க நடவடிக்கை

தவறான முகாமைத்துவ தீர்மானம் மற்றும் விரயம் காரணமாக பல்கலைக்கழகங்களில் ஏற்படும் நிதி நட்டத்தை, அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவுள்ளது என்று கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வாளர்கள் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ.எஸ்.சமரவீர தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பண மோசடி மற்றும் விரயம் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மரண தண்டனை

ஆனமடுவ - வல்பாலுவ பகுதியில் பொல்லால் ஒருவரை அடித்து கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பொனாண்டோ இத்தீர்ப்பை அளித்துள்ளார்.

2005 ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி வல்பாலுவ பகுதியில் 38 வயதுடைய நபரை கடத்திச்சென்று தாக்கி கொலை செய்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருக்கும் காரணத்தால் வழக்கு விசாரணை தாமதமடைந்தது.

எனினும்,நேற்றுவழக்குவிசாரணைக்கு வந்தபோது இரண்டாவது கொலை சந்தேகநபர் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் நீதிபதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# நிதி மோசடியில் ஈடுபட்ட பிக்குவுக்கு வலை வீச்சு

இந்தியாவிற்கு யாத்திரை அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் ஏனைய நபர்களிடம் பாரியளவில் பணம் சேகரித்த பிக்கு தலைமறைவாகியுள்ளார்.

குறித்த பிக்கு இந்த மோசடியில் 60 இலட்சம் ரூபா பணம் சேகரித்துள்ளார்.

அநுராதபுரம் சவாஸ்திபுர அதரஎல பிரதேச விஹாரை ஒன்றைச் சேர்ந்த பௌத்த பிக்குவே இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

திரட்டிய பணத்தை வாகனங்களுக்கும், குத்தகைக் கொடுப்பனவுகளுக்கும் குறித்த பிக்கு செலுத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. தலைமறைவாகியுள்ள இவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 பேர் மாட்டினர்

கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள கடை ஒன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத சூதாட்டம் குறித்து கொம்பனித்தெரு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெலிக்கடை சிறை மோதல்: விசாரணைக்குழு பரிந்துரை விரைவில் வெளியாகும்

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவிப்பு

வெலிக்கடைசிறைமோதல் தொடர்பில் விசாரணை செய்த மூவர் அடங்கிய குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் வாரம் ஊடகங்களுக்கு வெளியிடத் தயார் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அறிக்கை, பரிந்துரைகளைபிரச்சினை இன்றி இணைக்கப்பட்டு [illegible] செயற்படுத்த முடியும் என அமைச்சின் செயலாளர் எஸ். வித்தானகே தெரிவித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற இம்மோதலில் 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து விசாரணை செய்ய ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து தலைமையில் மூவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

விசாரணை அறிக்கை கடந்த மாதம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

ஆனால் மூவர் அடங்கிய குழுவில் இருந்த ஒருவர் பரிந்துரைகளில்சிலவற்றுக்குஎதிர்ப்பு தெரிவித்ததால் அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது.

அதன்படி கடந்த 12ஆம் திகதி புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புஅமைச்சர்தலைமையில் கூடிய மூவர் அடங்கிய விசாரணை ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது. எனவே விசாரணை அறிக்கையின் பரிந்துரை அடுத்த வாரம் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமைகளைப் பேணும் தளத்தில் சீனாவின் புதிய போக்கு

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், அவற்றை ஊக்குவிக்கவும் அந்நாட்டு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு குரல் கொடுத்துள்ளது சீனா. அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குயின் காங் தமது அரசின் சார்பில், கொழும்பில் பொதுநலவாய மாநாடு முடிவுற்ற கையோடு, பீஜிங்கில் வைத்து இலங்கைக்கு மேற்கண்ட புத்திமதியைக் கூறியுள்ளார்.

உலக வல்லரசுகளில் ஒன்றான சீனா, அதன் நெருங்கிய நட்பு நாடுகளில் முதல் வரிசையில் நிற்கும் இலங்கையிடம் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர், மனித உரிமை விவகாரங்களுக்குப் பதில் அளிப்பதற்கு இலங்கை அரசு தவறினால், அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரிட்டன் பிரதமர் கமரூன் கொழும்பில் வைத்து எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அது குறித்து ஊடகவியலாளர்கள் பீஜிங்கில் வைத்து எழுப்பிய வினாவுக்கு பதிலளிக்கையிலேயே அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஆகையால் சீனாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக விளங்கும் இலங்கை, இது தொடர்பில் ஊன்றிக் கருத்தில் கொள்வதனைத் தவிர்க்க முடியாத நிலை ஒன்று திடுதிப்பென மேல் எழுந்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளைத் தோற்கடிப்பதில் சீனா தீவிர பங்களிப்புச் செய்திருந்தது.

மனித உரிமைகள் தொடர்பாகப் பல நெருக்கடிகளை இலங்கை அரசு எதிர்கொள்ளும் வேளையில், திடீரென இருந்தாற்போல் ஞானம் பிறந்த வகையில், தனது நெருங்கிய நட்பு நாடான இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து சீனா காத்திரமான கருத்தை முதல் தடவையாக வெளியிட்டுள்ளது.

அதற்கு முத்தாய்ப்பு வைப்பது போன்று-

மனித உரிமை விவகாரங்களில், அனைத்து நாடுகளுடனும் பேச்சுவார்த்தை மற்றும் நெருங்கிய தொடர்பாடல்கள் ஊடாகப் பரஸ்பர புரிந்துணர்வை பேணி வருகிறோம். அனைத்துலக மனித உரிமைகளை ஊக்குவிக்க ஆக்கபூர்வமாக செயற்படுகிறோம் என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வழமையான மூடு மந்திரம் இல்லாமல் வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.


கனடா, பிரிட்டன் உட்பட்ட மேற்குலக நாடுகள் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து காத்திரமான கருத்துக்களை வெளியிட்ட போதெல்லாம், கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறிய வேண்டாம் என்று "போதனை செய்த" எமது நாட்டு அரசு இனி என்ன கூறப்போகிறது?

அதற்கும் மேலாக, இலங்கையின் எதிர்க்கட்சிகள் (ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நவசமசமாஜக் கட்சி உட்பட்ட இடதுசாரிகள் முன்னணி போன்றவை) மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டும் என்று குரல் கொடுத்த போதிலும், அதனைக் காதில் போட்டுக் கொள்ளவும் விரும்பாத அரசு இனி என்ன செய்யப்போகிறது?

மேலும், இந்தியாவைத் தூர வைப்பதற்கு அல்லது அதனுடன் பேரம்பேசுவதற்கு சீனாவை முன்னிறுத்தி "அச்சுறுத்தி" வந்த, வரும் எமது அரசு, சீனாவின் புத்திமதியைத் தூக்கிக் கடாசுமா, அல்லது கருத்தில் கொள்ளுமா என்பது உடனடியாகத் தெரியவருவதற்கான சாத்தியமில்லை.

மொத்தத்தில், சீனா பொதுநலவாய நாடுகள் குழுமத்தைச் சேராத நாடு. ஆனால் கொழும்பில் அந்தக் குழுமத்தின் உச்சி மாநாடு முடிவுற்ற இரண்டு நாள்களில் (நேற்றுமுன்தினம்) திடுதிப்பென இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்திருப்பதற்கு உள்ளும் புறமும் காத்திரமான, கனதியான நோக்கம் அல்லது இராஜதந்திரம் உண்டா என்பது உடனடியாகத் தெரியவராது. மெல்லெனப் பாயும் தண்ணீர் போன்று ஏதோ ஒரு கட்டத்தில், கல்லையும் உருவிப் பாயும் காலம் ஒன்று நெருங்குமோ யாரறிவார்....?

# இலங்கை அரசு தன்னிச்சையாக எதையும் செய்தால் விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும்



இன்று முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு எமது உரிமைப் போர் சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் உரிமைக் கோரிக்கைக்கு நியாயமான, சுதந்திரமான, நடை முறைக்கேற்ற தீர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக மக்கள் எங்களுக்கு வாக்களித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு பிரிட்டன் பிரதமர் கமரூன் வருகை தந்த உற்சாகத்துடன் பொதுநலவாய மாநாடு நிறைவுறும் அதேநாளில் முதுபெரும் அரசியல் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், கொழும்பில் உள்ள தனது வீட்டில் தி இந்துவுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டி இது.

**1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தில் தமிழ் ஈழமே தீர்வு என்று பிரகடனம் செய்தீர்கள். இப்போது வடக்கு மாகாணத் தேர்தலில் உங்கள் கூட்டமைப்பு பெருவெற்றி பெற்றபோது, ஒன்றுபட்ட இலங்கைக் குள் தீர்வு என்ற நிலைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி என்று வர்ணித்தீர்கள். அப்படியெனில், தனித் தமிழ்ஈழம் என்பதை இலங்கைத் தமிழ் மக்கள் தேர்தலின் மூலம் நிராகரித்துவிட்டார்களா?**

நாம் 70களுடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். ஓர் இனத்தின் வரலாற்றில் பல்வேறு சகாப்தங்களைத் தாண்ட வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நாங்கள் ஆரம்பத்தில் கூட்டாட்சி தத்துவத்தின் கீழ் ஒரு தீர்வைக் காண முயன்றோம். ஆனால், அது கைகூடவில்லை. மாறாக, எங்கள் மக்கள் மீது பெரும்பான்மையினரால் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 1956, 1958, 1961, 1977, 1981, 1983-ஆம் ஆண்டுகளில் வன்முறைகள் தொடர்ந்தன.

இந்த வன்முறைகளை அந்தந்த வேளைய இலங்கை அரசுக்களே முன்னின்று நடத்தியன. இவற்றில் 1983 ஜூலையில் நடந்த கலவரம் முத்தாய்ப்பாக அமைந்தது. ஆரம்பத்தில் நாங்கள் வன் முறையில் ஈடுபடவில்லை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் காரணங்களால் எங்கள் இளைஞர்கள் ஆயுத மேந்திப் போராடினார்கள். இன்று ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது.

இன்று முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு எமது உரிமைப் போர்கள் சர்வதேச மயமாக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் உரிமைக் கோரிக்கைக்கு நியாயமான, சுதந்திரமான, நடைமுறைக்கேற்ற தீர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக மக்கள் எங்களுக்கு வாக்களித்துள்ளனர். அதுதான் இன்று எங்களுக்கு இருக்கும் ஒரே யதார்த்தமான வழி.

**வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, 3 இல் 2 பங்கு வெற்றியைத் தந் தால், ராணுவத்தை தமிழர் பகுதியிலிருந்து அகற்று வோம் என்று வாக்குறுதி அளித்தீர்கள். ராணுவத்தை அகற்றுவது சாத்தியம் எனக் கருதுகிறீர்களா?**

ராணுவத்தை அகற்றுவது என்ற எங்களின் கோரிக்கை தொடர்கிறது. எங்கள் நிலங்களில் ராணுவம் இருப்பது தொடர்ந்து அசௌகரியத்தையும் சுயமரியாதைக் குறைவையும் ஏற்படுத்துகிறது. குறிப்பாக எங்களது பெண்களுக்கு - யாழ்ப்பாணத்தில் இருக்கும் விதவைகளுக்கு பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தேர்தலின்போது வடக்கு மாகாணத்தில் பயணித்த பொது நலவாய, சார்க் நாடுகளின் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளைப் படித்துப் பார்த்தால் ராணுவத்தின் அத்துமீறல்கள் புரியும்.

அதையும் தாண்டி நாங்கள் வடக்கில் வெற்றி பெற்றிருக்கி றோம். ராணுவத்துக்கு எதிரான உணர்வை தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதை உணர்ந்து நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை. ஆட்சியின் அத்திபாரம் ஜனநாயகம். மக்களின் ஜனநாயக முடிவை மதிக்க வேண்டியது அரசின் கடமை.

**பொதுநலவாய மாநாட்டுக்கு மன்மோகன் சிங் வராதது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் வருத்தம் தெரிவித்துள்ளார். இது பற்றி நீங்கள் கருதுவது என்ன?**

பொதுநலவாய அமைப்பின் மதிப்பீடுகளை இலங்கை அரசு மதித்து நடக்கவில்லை. குறிப்பாக நல்லாட்சி, தனிமனித உரிமைகள், நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், சட்டம் - ஒழுங்கு ஆகியவற்றில் இலங்கை அரசின் செயல்பாடுகள் கவலைக்குரியதாகவே உள்ளன. ஆனால், அதேநேரத்தில், இந்திய அரசைப் பொறுத்தவரை - இந்தியப் பிரதமரைப் பொறுத்த வரை இத்தகைய முடிவுக்கு வர அவர்களுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

எத்தகைய முடிவெடுக்கும் உரிமையும் இந்தியாவுக்கு உண்டு. இது குறித்து நான் தனிப்பட்ட முறையிலோ, எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலோ கருத்துரைக்க விரும்பவில்லை. ஆனால், எங்களுக்கு இந்தியாவின் உதவி நிச்சயம் தேவை. இந்திய அரசுடனும் தமிழக அரசுடனும் இணைந்து எங்கள் பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்க்க நாங்கள் தயாராக உள்ளோம். இந்தியாவின் பரிபூரண உதவி எங்களுக்குத் தேவை.

**பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதென உங்கள் கூட்டமைப்பு முடிவெடுத்தது. புறக்கணிப்பதற்கு பதில் அதில் பங்கேற்று உங்கள் அவலங்களை எடுத்துரைத்திருக்கலாமே?**

பொதுநலவாய மாநாட்டில் எங்கள் கருத்துகளை முன்வைக்க எங்களுக்கு அனுமதியில்லை. அதேநேரத்தில் எங்களைச் சந்திக்க வரும் தலைவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். இலங்கைத் தமிழர்களின் துயர் தீர சர்வதேச சமூகத்திடம் எமது மக்களது பிரச்சினைகள் பற்றி எடுத்துக்கூறும் முயற்சி எப்போதும் தொடரும்.

**பிரிட்டன் பிரதமர் கமரூன் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளார். இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து நீங்கள் என்ன கருத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்கள்?**

எங்களை ஆட்சி செய்த நாடு பிரிட்டன். குறிப்பிட்ட சில நிபந்தனைகளின் அடிப்படையில்தான் எங்களுக்கு அந்த நாடு சுதந்திரம் தந்தது. சுதந்திரத்தின்போது இயற்றப்பட்ட அரசமைப்புச் சாசனத்தில், சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அந்தப் பாதுகாப்பு அம்சம் மீறப்படுகிறது.

தங்களால் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சம் போதுமானதாக இல்லை என்பது பிரிட்டிஷ் அரசின் கருத்து. அதற்குப் பரிகாரமாக அந்நாட்டுப் பிரதமர் கமரூன் யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளார். இந்தப் பின்னணியில் தான் கமரூன் பயணத்தை நாங்கள் பார்க்கிறோம். பத்திரிகையாளர் சந்திப்பில் கமரூன் தெரிவித்த கருத்துகளை இந்தப் புரிதலோடுதான் அணுகுகிறோம். இதன் படித்தான் இலங்கைத் தமிழர் விவகாரத்தைப் பார்க்க வேண்டும் என இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

**13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை செயல்படுத்த இலங்கை அரசு தயங்குவது ஏன்?**

இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது சட்டத் திருத்தத்தை நிரந்தர அரசியல் தீர்வாக எவரும் கருதவில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் அந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி, இலங்கையின் வடக்கும் கிழக்கும் ஒரே மாகாணமாக இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. அதி காரப் பகிர்வு பற்றியும் அது கூறுகிறது.

ஆனால், ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரசும் இந்தத் திருத்தத்தில் திருத்தம் செய்து கொண்டேயிருந்தன. சந்திரிகா குமாரதுங்க, பிரதமராயிருந்த ரணில் விக்கிரமசிங்க, இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமக்குத் தோன்றியபடி திருத்தங்களை உருவாக்க முயன்றனர்.

இந்த சட்டத்திருத்தத்தை நடைமுறைப் படுத்தி அதிகாரப் பரவலை சாத்திய மாக்கப் போவதாக ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ-மூனுக்கு ராஜபக்ஷ உறுதியளித்தார்.


ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் உருவான சட்டத் திருத்தத்தை மாற்றுவதற்கோ மீறுவதற்கோ முயற்சி செய்வது வியட்நா மாநாட்டு சாசனத்தை மீறும் செயலாகும். இந்த விடயத்தில் இலங்கை அரசு தன்னிச் சையாக எதையும் செய்ய இயலாது. செய்தால், அது சர்வதேசரீதியில் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

(நன்றி-த ஹிந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகள் புரிந்த குற்றச் செயல்களைக் காட்டி

# அரசு இழைத்த போர்க் குற்றங்களை எவரும் நியாயப்படுத்த முடியாது



சனல்-4 புகழ்
கெலும் மக்ரே பேட்டி

எனது நிகழ்ச்சி நிரலானது ஒரு பத்திரிகையாள னுக்குரிய நிகழ்ச்சி நிரல். உண்மையைக் கண்டு பிடித்து சொல்வதுதான் எனது வேலை.

நான் ஒருபோதும் விடுதலைப் புலிகளின் கொடூரங் களைக் குறைத்துக் கூறியதில்லை. ஆனால் அரசுதான் ஒரு ஜனநாயக அரசு என்று கூறிக் கொள்கின்றது. சர்வதேச நியமங்களை உயர்ந்த தரத்தில் பேணி வருவதாகவும் கூறுகிறது. நான் இப்போது புலி ஆதரவாளன் என்று பட்டம் சூட்டப்பட்டுக் கொழும்பு வீதிகளில், நடமாட முடியாதவனாக்கப்பட்டு விட்டேன். அது மிக பாதுகாப்பற்றதாக இருக்கிறது. கிளிநொச்சிக் கான பயணம் பாதுகாப்பாக இருக்கவில்லை. அது தடுக்கப்பட்டுவிட்டது. இது மக்களின் தவறு அல்ல. அவர்களுக்குக் கூறப்பட்டதை அவர்கள் நம்புகிறார்கள். அது அப்பட்டமான வெறும் பொய்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சனல்-4 தொலைக்காட்சி யின் பணிப்பாளர் கெலும் மக்ரே. நோ பயர் சோன், இலங்கையின் கொலைக்களம் போன்ற ஆவணப் படங்களை வெளியிட்டவரும், சர்ச்சைக்குள்ளானவ ருமான கெலும் மக்ரே அண்மையில் கொழும்பு வந்திருந்தபோது ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருந்த பேட்டியின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

தன்னை ஜனநாயக அரசு என்று கூறிக்கொள்ளும், சர்வதேச நியமங்களைப் பேணி வருவதாக பெருமை பேசிக்கொண்டிருக்கும் ஓர் அரசுடன் நாம் சம்பந்தப்பட் டிருக்கிறோம். பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு இந்த அரசு பொறுப்புடைய தாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எவ்வளவு எண்ணிக்கை யில் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற வாதத்தில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஆனால் குறிக்கப்பட்ட சில குற்றச்சாட்டுக்களில் இலங்கை அரசு பொறுப்புக் கூறியாக வேண்டும். புலிகள்தான் அதிகமான அளவில் கொலைகளைச் செய்தார்கள் என்று கூறுவது சரியாக இருக்கமாட்டாது.

தமிழ் அமைப்புகளிடமிருந்து நான் ஒரு சதம்கூடப் பெற்றுக்கொண்டதில்லை. புலிகள் எவ்வாறு எனக்குப் பணம் தருவார்கள்? அவர்களை நான் போர்க்குற்ற வாளிகளாக குற்றஞ்சாட்டியிருக்கும்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தினார்கள், தங்கள் சொந்த மக்களையே கொன்றார்கள், போர்த் தவிர்ப்பு பகுதியிலிருந்து மக்கள் தப்பிச் செல்வதைத் தடுத் தார்கள் என்றெல்லாம் நான் குற்றஞ்சாட்டியுள்ளேன். அவ்வாறிருக்கையில் இது அபத்தமான குற்றச்சாட்டு.

தமது ஆவணப்படங்கள் யாவும் சோதனையிடப்பட்டு உண்மையானவை என்று அங்கீகரிக்கப்பட்டிருப்ப தாக தெரிவித்த மக்ரே மேலும் கூறுகையில்:-

போர் ஒரு முடிவுக்கு வந்தபோது ஐ.நாமனித உரிமைகள் சபையானது போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக இலங்கை அரசைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியமை உங்களுக்குத் தெரிந்த விடயம். ஆனால் குற்றச்செயல்கள் பற்றிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியதும், அவர்கள் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்கள். நிபுணர்குழு நியமிக்கப்பட்டது.

பான் கீ-மூன் ஆவணப் படங்களைப் பார்த்துவிட்டு நம்பகமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஐ.நா.வுக்கு அறிக்கை தாக்கல் செய்தார். இவைகள் தான் நிலைமைகள் மாறுவதற்குக் காரணமாக இருந்துள்ளன. நிபுணர்குழு அறிக்கையை ஐ.நா. பரிசீலித்தது. படத்தில் காணப்படும் ஆதாரங்கள் முக்கியமானவை, அவை உறுப்பு நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. நவிப்பிள்ளையும் கூட விவரமான அறிக்கையொன்றைக் கேட்டிருந்தார். சனல்-4 படங்கள் தொடர்பாக ஏன் விரிவான ஆய்வு நடத்தப்படவில்லை என்பது பற்றியும் கேள்வி எழுப்பி யிருந்தார். அவர்கள் இதில் அதிக அக்கறை கொண்டி ருக்கிறார்கள். அதனால்தான் ஒவ்வொரு ஆறு மாதத்துக் குப் பிறகும் இலங்கைக்கு எதிராக அதிக தாக்கமான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இலங்கையில் இருப்பது எனக்கு மிக கஷ்டமாகவே இருந்தது. நான் யாரையும் குறை கூறவில்லை. போர்க் குற்றங்களை வைத்து இலங்கை மக்களை நான் பார்க்க வில்லை. இலங்கையர்களை அவர்களின் ஜனாதிபதியை வைத்து நான் தீர்மானிக்கவில்லை.

இலங்கையில் நல்லிணக்கம் மலர்வதையும் அரசியல் தீர்வொன்று ஏற்படுவதையும் நான் காண விரும்பு கிறேன். நீதி நிலைபெற வேண்டும். நீதியைப் பெறுவதற்கு உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும். இது இன்னமும் தீர்வுக்கு வரவில்லை.

எல்.எல்.ஆர்.சி. விசாரணையின் போது பொருத்தமான கேள்விகள் எழுப்பப்படவில்லை என்று நான் கூறியிருந் தேன். மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வாவிடம் போரின் கடைசிக் கட்டங்களில் யாரிடமிருந்து அவர் கட்டளை களைப் பெற்றுக்கொண்டார் என்பது போன்ற கேள்விகள் எழுப் பப்படவில்லை என்று நான் கூறியிருந்தேன் என்றார் மக்ரே. (ப)

**இலங்கையில் நல்லிணக்கம் மலர்வதையும் அரசியல் தீர் வொன்று ஏற்படுவதையும் நான் காண விரும்புகிறேன்.**



# சனிக்கிரகம் :

## நாசாவின் புதிய தகவல்


அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, சனிக்கிரகத்தை ஆராய அனுப்பிய , கேசினி விண்கலன், கடந்த ஜூலை 19ஆம் திகதியன்று, எடுத்த சில அரிய ஒளிப்படங்களை இப்போது வெளி யிட்டிருக்கிறது.

இந்தப் ஒளிப்படங்கள் , ஜூலை 19ஆம் திகதி ஏற்பட்ட சூரிய கிர கணத்தின்போது கேசினி விண் கலத்தில் இருந்த ஒளிப்பதிவுக் கருவி யால் எடுக்கப்பட்டவை.

சனியைச் சுற்றி இயற்கையாக அமைந்திருக்கும், அழகிய, பனித்து ளிகளாலான வளையம் போன்ற அமைப்பு இந்தப் படங்களில் அற்பு தமாகத் தெரிகிறது.

மேலும், சனிக்கிரகத்தைச் சுற்றி அமைந்திருக்கும் அதன் நிலவுகளில் சிலவும் இந்தப் ஒளிப்படங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

சூரியன், சனிக்கிரகம் மற்றும் இந்த கேசினி விண்கலம் ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வந்தபோது ஏற்பட்ட சூழ்நிலையைப் பயன் படுத்தி, சனிக்கிரகத்தில் இருந்து பல கோடிக்கணக்கான மைல்கள் தொலைவில் இருக்கும், பூமியை யும், படம் எடுக்க முடிந்திருக்கிறது.




இந்த விண்கலத்தால் எடுக்கப்பட்ட படத்தில், நாம் வசிக்கும் பூமி, ஒரு சிறிய புள்ளி போல, தன்னந்தனி யாகத் தெரிவதைப் பார்க்கலாம்.


பூமியை இது போல ஆழ் விண்வெளி யில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் முன்பும் வந்திருக்கின்றன.

1990இல் அமெரிக்க விண்கலமான வாயேஜர் கலம் சூரியக் குடும்பத்துக்கு அப்பால் இருந்து எடுத்த படத்தில் பூமிக் கிரகம், ஒரு வெளிர் நீலப் புள்ளி போலத் தெரிந்தது. அந்தப் புகழ் பெற்ற படம் , விண்வெளியில் மனித சமூகம் எப்படித் தன் னந்தனியாக இருக்கிறது என்பதையும், பூமியின் சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் வலியுறுத்தியது.

இதே போல 2006ஆம் ஆண்டிலும், சனிக்கிரகத்தின் சுற்றுவட்டப்பாதையில் இருந்த கேசினி விண்கலம் தொலை தூரத்தில் தெரியும் பூமியை எடுத்த படம் , சனியைச் சுற்றி இருக்கும் பனித்துளி வளையத்தின் பிரம்மாண்டத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், ஒரு சிறு துளி போலத் தெரிவதைக் காட்டியமை அனைவரையும் பிரமிக்கவைத்தது.

**சனிக் கிரகம் -சில தகவல்கள்**

1. சனி சூரியக்குடும்பத்தில், சூரியனில் இருந்து ஆறாவதாக இருக்கும் கிரகம்.
2. இது சூரியக்குடும்பத்தில் இரண்டாவது மிகப்பெரிய கிரகமாக இருந்தாலும், சனி மிகவும் குறைவான அடர்த்தி உள்ள கிரகம். இதைக் கொள்ளக்கூடிய தொட்டி கிடைத்தால், அதில் மிதக்கும்!
3. சனிக்கு 62 நிலவுகள் உண்டு. ஆனால் அவற்றில் டைட்டன் என்ற நிலவில்தான் குறிப்பிடத்தக்க சூழ்நிலை உண்டு.
4. சனிக்கிரகத்தையும் அதன் நிலவு களையும் ஆராய,1997இல் அனுப்பப் பட்ட இந்த கேசினி-ஹ்யூஜென்ஸ் விண்கலம், அமெரிக்க-ஐரோப்பிய கூட்டுத் திட்ட முயற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆவணங்களைப் பெற இலவச நடமாடும் சேவை

*ஆனைவிழுந்தான், முழங்காவில், ஜெயபுரத்தில்*

யாழ்ப்பாணம், நவ.20
கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இலவச நடமாடும் சேவை நாளை 21 ஆம் திகதி, மறுதினம் 22 ஆம் திகதி மற்றும் 23 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கரைச்சி, மற்றும் பூநகரி பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வன்னேரிக்குளம் (கே.என்-01), ஆனைவிழுந்தான் (கே.என்-02) கிராம சேவகர் பிரிவுகளுக்கு உட்பட்டவர்களுக்கு ஆனைவிழுந்தான் பொதுநோக்கு மண்டபத்திலும்;

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பூநகரி பிரதேச செயலர் பிரிவில் முழங்காவில் (கே.என்-73), நாச்சிக்குடா (கே.என்-74) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு முழங்காவில் கிராம சேவகர் அலுவலகத்திலும்;

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம் வடக்கு (கே.என்-69), பல்லவராயன்கட்டு (கே.என்-72) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஜெயபுரம் உப அலுவலகத்திலும் இடம்பெறும்.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை என்பவற்றுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# கழிவுநீர் வாய்க்கால்கள் மூடப்பட்டதால் அவலப்படும் புத்திரகண்டான் விவசாயிகள்

மன்னார், நவ.20
நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புத்திரகண்டான் விவசாயக் கிராமத்தில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளதால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கையில்,

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புத்திரகண்டான் குளத்தின் கீழ் 90 ஏக்கர் காணி உள்ளது. அதில் 60 ஏக்கர் காணிக்கு கழிவு நீர் வாய்க் கால்கள் உள்ளன.

ஆனால் தற்போது இவை மூடப்பட்டு விட்டன. இவை மூடப்பட்டதால் விவசாயத்தை மேற்கொள்வதில் நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

முதலாவது வாய்க்கால் புத்திரகண்டான் குளத்தில் இருந்து ஆரம்பித்து நானாட்டான் வீதியில் இருக்கும் குழாயினூடாக கார்மேல் மாதா கோயிலுக்கு அருகில் உள்ள வாய்க்காலைச் சென்றடைகின்றது.

இந்த வாய்க்காலை அதற்கு அருகில் குடியிருக்கும் சிலர் மூடி விட்டனர். இதனால் அந்தப்பகுதியில் குடியிருப்புக்களும், விவசாய செய்கை நிலங்களும் வெள்ளத்தில் மூழ்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த வாய்க்கால் பல வருடங்களாக இருந்து வந்துள்ளது. இந்தக் காணியின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ள நிலையில் போலி உறுதி எழுதி குறித்த வாய்க்காலையும் மூடிச் சிலர் குடியமர்ந்துள்ளனர்.

இரண்டாவது கழிவு வாய்க்கால் அளவக்கை, ஆத்திக்குழி சேமக்காலை வீதி அமைத்ததால் மூடப்பட்டு விட்டது.

இந்த வீதி கிராம அபிவிருத் திச் சங்கத்தினால் அமைக்கப்பட்டபோதும், விவசாயிகளிடம் இது தொடர்பாக எந்த ஆலோசனைகளையும் பெறப்படவில்லை.

குறித்த வாய்க்கால் மூடப்பட்டதால் நாம் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள இயலாது உணவுக்காகத் துன்பப்படும் நிலை ஏற்படும். எனவே உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசன் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம் ஆகியோரது கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (க-12)

# மழை வேண்டி விசேட பூசைகள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வேண்டி ஆலயங்களில் விசேட பூசைகள் நடத்தப்படுகின்றன.போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் வயல்கள் நீரின்றிக் காணப்படுவதாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் மழை பெய்யாதுவிடில், பயிர்கள் வாடும் அபாய நிலை காணப்படுவதாகவும் நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

ஒக்ரோபர் மாதம் முடிவடைந்த போதிலும் இது வரை போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் விவசாயப் பயிர்களுக்குத் தண்ணீர் பெறும் நீர் நிலைகளில் நீர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் பயி ரிடப்பட்ட நிலங்களுக்கு நீர் இறைப் பதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். மேலும் புதிதாகப் பயிர்களை நடுகை செய்ய முடியாத நிலை காணப்படுவ தாகவும் மேட்டு நில உப உண வுப் பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

# பயணிக்க முடியாத நிலையில் தாளையடி-கேவில் வீதி சேதம்

தாளையடி, நவ.20
வடமராட்சி கிழக்கு மக்களின் பிரதான வீதியாக உள்ள தாளையடி சந்தியிலிருந்து கட்டைக்காடு ஊடாக கேவிலுக்குச் செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இவ் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி பழுதடையும் நிலை ஏற்படுவதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மீன்பிடிக் கிராமங்களை உள்ளடக்கிய வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு அதிகமான வாகனங்கள் தின மும் பயணிக்கின்றன. அந்தப் பகுதியில் மீளக் குடியமர்வுக்கு அனுமதிக்க முன்னர் கனரக வாகனங்களின் பாவனையால் சேதமடைந்து காணப்பட்ட வீதியை தொடர்ந்து வாகனங்கள் பயன்படுத்துவதால் மேலும் மோசமாகப் பாதிக்கப் படுகிறது.

அத்துடன் மழை வெள்ளம் வீதியின் பல இடங்களில் தேங்கி நிற்பதால் வாகனங் கள் சேதங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் உள்ள குறித்த வீதி, வீதி அபிவிருத்தித்திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

"-"

**மீன்பிடிக் கிராமங்களை உள்ளடக்கிய வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு அதிகமான வாகனங்கள் தினமும் பயணிக் கின்றன.**

# நயினாதீவுக்கு புதிய மின் பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், நவ.20
நயினாதீவுக்கான மின்விநியோகச் சேவைக்கென சுன்னாகம் மின்சார சபை யின் அத்தியட்சகர் எஸ். கிரிசாந்தன் புதிய மின் பிறப்பாக்கியை அனுப்பி வைத்துள்ளார்.

250 கே.வி.வலுக் கொண்ட குறித்த மின்பிறப்பாக்கி அங்கு எடுத்து வரப்பட்டதை அடுத்து 24 மணிநேர மின்சாரம் நயினாதீவுக்கு வழங்கப்படுவதாக நயினாதீவு மக்கள் தெரி வித்தனர். (வ-7)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**இடபம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அடுத்தவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.



**மிதுனம்:** திடீர்ப் பயணங்களால் திணறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.



**கடகம்** : வியாபார ரீதியாக சிலரை சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.



**சிங்கம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**கன்னி:** உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

நாளை

கார்த்திகை-05 வியாழக்கிழமை 21.11.2013
திதி: சதுர்த்தி பி.இ.03.29 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ. 08.42 வரை
சுபநேரம்: 07.40 - 09.10 வரை
இராகுகாலம்: 01.40 - 03.10 வரை



**துலாம்:** தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**விருச்சிகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப்போவீர்கள்.



**தனுசு:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.



**மகரம்:** அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**கும்பம்:** நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர்ப் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**மீனம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பலருக்கு வந்த தேக்க நிலை மாறும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 5 | 8 | | | | | 3 |
| | 4 | | 9 | | 6 | | | 2 |
| | | 6 | 2 | | 3 | | | |
| | | | | | | 9 | 5 | 6 |
| 5 | | 3 | 6 | | 2 | 7 | | 4 |
| 4 | 6 | 7 | | | | | | |
| | | | 3 | | 9 | 5 | | |
| 6 | | | 4 | | 8 | | 3 | |
| 2 | | | | | 7 | 8 | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 5 | 9 | 1 | 6 | 8 | 4 |
| 6 | 1 | 4 | 3 | 8 | 2 | 7 | 9 | 4 |
| 5 | 8 | 9 | 4 | 6 | 7 | 3 | 2 | 1 |
| 8 | 4 | 5 | 9 | 1 | 6 | 2 | 3 | 7 |
| 2 | 9 | 7 | 8 | 3 | 5 | 4 | 1 | 6 |
| 1 | 3 | 6 | 2 | 7 | 4 | 8 | 5 | 9 |
| 4 | 6 | 3 | 1 | 2 | 9 | 5 | 7 | 8 |
| 7 | 2 | 1 | 6 | 5 | 8 | 9 | 4 | 3 |
| 9 | 5 | 8 | 7 | 4 | 3 | 1 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் ம.வியில் நடந்த ஒளி விழா





யாழ்ப்பாணம்,நவ.20
"இறைவன் மனித குலத்தின் மீது இன்னமும் பரிவு கொள்பவராகவே உள்ளார். ஆனால் மனித பரிவு, இரக்கம் என்பன இல்லாத சூழலையே நாம் இன்று காண்கின்றோம்'' என்று மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை ஒளி விழா நிகழ்வில் தெரிவித்தார்.
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் "பெத்தேலை கூறும் செய்தி கேளீரே" என்ற தொனிப் பொருளில் ஒளி விழா நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;
"இன்றைய சூழலில் பரிவு காட்டப்படாத இரக்கம் இல்லாத நிகழ்வுகளையே நாம் காண்கிறோம். மனித சுயநலமே இன்று மேலானதாகக் காணப்படுகின்றது.
ஒவ்வொரு பிள்ளையையும் நாம் பரிவு கண்ணோடு பார்க்க வேண்டும். பிள்ளைகளிடமுள்ள நல்ல குணங்களை இனங்கண்டு அதனை வளர்க்க வேண்டும். 'பால் நினைந்தூட்டும் தாயின் சாலப் பரிந்து நின் பாவியேனுடைய..." என்ற பாடலில் ஆழமாக தாய்மைத்துவம் உள்ளது. மானிடத்தின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்பதே கிறிஸ்து பிறப்பின் அர்த்தம். எக்காலத்திலும் இல்லாதவாறு சிறந்த ஒளி விழாவை நான் கண்டு மகிழ்ந்தேன்" என்று கூறினார் ஆயர்.
இந்த விழாவில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, மதகுருமார், அயல் பாடசாலை சமூகத்தவர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஓ-10)

# சமாதான நீதிவானை நியமிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,நவ.20
வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட சங்கரத்தை துணைவி பிரதேசத்துக்கு இதுவரை சமாதான நீதிவான் எவரும் நியமிக்கப்படவில்லை.
சமாதானநீதிவானின் கையொப்பம் பெறுவதற்காக தேவையின் பொருட்டு மக்கள் அலைவதாகவும் அதற்காக அயற் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதாகவும் பிரதேசத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே பொது நோக்கில் ஆர்வமுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறைசெலுத்திஜே/159துணைவி - சங்கரத்தை கிராமத்துக்கு ஒரு சமாதானநீதிவானை நியமிக்க முன்வர வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-41)

# சரணடைந்த நபர் விளக்கமறியலில்

வலி.வடக்கு, நவ.20
மாவிட்டபுரம் சாயோடைப் பகுதியில் கடந்த வாரம் தாயும் மகளும் கத்தி வெட்டுக்கு உள்ளாகிய சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் சட்டத்தரணி மூலம் பொலிஸில் சரண் அடைந்துள்ளார்.
மாவிட்டபுரம் சாயோடைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் காங்கேசன்துறைப் பொலிஸில் சரண் அடைந்ததைத் தொடர்ந்து சந்தேக நபர் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.
எதிர்வரும் 29 ஆம் திகதி வரை குறிப்பிட்ட சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-86)



ஜனாதிபதியின் பிறந்த நாளையொட்டி கடந்த 15 ஆம் திகதி இளவாலைப் பொலிஸாரினால் மரம் நடும் திட்டம் செயற்படுத் தப்பட்டது.
இதன் ஒரு கட்டமாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வளாகத்தில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தலைமையில் மரம் நடும் திட்டம் இடம்பெறுவதையும், ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை யேசுதாசன் அடிகளார் உட்பட மாணவர்களும் மரம் நடும் திட்டத்தில் ஈடுபட்டு இருப்பதையும் படத்தில் காணலாம். (ந-86)

## விண்ணப்பிக்கலாம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தால் தொழிலுரிமைத்துவமும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கை நெறிகளுக்கு 18 வயதைப் பூர்த்தி செய்த ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

* * *

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பம், வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம், அலுமினியம் பொருத்துநர், விவசாய உபகரணம் திருத்துநர் ஆகிய கற்கை நெறிகள் சுன்னாகம், பிரான்பற்று, கரவெட்டி ஆகிய இடங்களில் உள தொழில் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக் கப்படவுள்ளன.
ஆர்வமுடையவர்கள் தமது சுயவிவரத்தை இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (ந-14)

* * *

கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்ப பட்டப் படிப்பு வெளிவாரிக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முதலாம் ஆண்டு கற்கைநெறியைப் பூர்த்தி செய்வோருக்கு டிப்ளோமா பட்டமும், மேலும் 2 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வோருக்கு தகவல் தொழில் நுட்ப இளமாணிப் பட்டமும் கொழும்பு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும்.
க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பிப்போர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம். (ந)

# பயணத்தில் சிரமம்

*நயினைக்குச் செல்லும் பக்தர்கள் பூசைகளில் கலந்து கொள்வதில்*

*"ஆலயத்துக்கு வரும் மக்களுக்கு தனியான வரிசை ஏற்படுத்தி உரிய நேரத்தில் கோயிலுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்"*

யாழ்ப்பாணம், நவ.20
குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு என பிற பகுதிகளில் இருந்தும் நயினை நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் பூசைகளில் கலந்து கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.
நீண்ட தூரங்களில் இருந்து ஆலயத்துக்கு வரும் மக்களும், தென்பகுதியில் இருந்து கூடுதலாக வரும் மக்களுக்கு இடம் கொடுத்த பின்னரே நயினாதீவுக்கான படகில் ஏற அனுமதிக்கப்படுகிறார்கள்.
அதனாலேயே தாங்கள் உரிய நேரத்தில் கோயிலுக்குச் செல்ல முடியாதிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.
ஆலயத்துக்கு வரும் மக்களுக்குத் தனியான வரிசை ஏற்படுத்தி அவர்கள் உரிய நேரத்தில் கோயிலுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் குறிகாட்டுவான் துறைமுகத்தில் கடமையில் இருப்பவர்கள் அதை நடைமுறைப்படுத்துவதில்லை என ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.
குறிகாட்டுவான் நிலைமையை பார்க்கும் போது தமிழ் மக்கள் தமது சொந்த நிலத்திலும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே இருக்க வேண்டியுள்ளது. குறிகாட்டுவானில் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து வடக்கு மாகாண சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் மக்கள் கருத்தாக உள்ளது.
அம்பாள் ஆலயத்துக்கு வரும் மக்களை தாமதமின்றி அனுப்பவும் படகுகளை நயினை பிரதான பாலத்தில் முதலில் நிறுத்தவும் சம்பந்தப்பட்டவர்களுடன் பலதடவைகள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படுவதில்லை எனவும் ஆலயத்தின் சார்பில் கூறப்பட்டது. (ந-7)

*பாடசாலை மாணவர்களிடையே*

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் முரசுமோட்டை பொதுநூலகத்தினால் பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட பல் வேறு போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.
2013 ஆம் ஆண்டுக்கான வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பிரதேச சபைகளினால் பல்வேறு வகையான போட்டிகள் மற்றும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள முரசு மோட்டை பொது நூலகத்தினால், தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய வகையில் பாடசாலை மாணவர்களிடையே போட்டி கள் நடத்தப்பட்டன.
இந்தப்போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**வாசிப்பு போட்டி**
**தரம்-3**
1 ஆம் இடம்-சி.லக்சிகா (கிளி/தர்மபுரம் மகா வித்தி.), 1 ஆம் இடம்-ஸ.ஆன்சுமேக்கா (கிளி/பிரமந்தனாறு மகா வித்தி.), 3 ஆம் இடம்-சி.பார்கவி (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தி.).
**தரம்-4**
1 ஆம் இடம்-பா.சாரங்கன் (கிளி/பரந்தன் இந்து மகா வித்தி.), 2 ஆம் இடம்-க.றொபின்சன் (கிளி/தர்ம புரம் இல.1 அ.த.க. பாட சாலை), 3 ஆம் இடம்-ர.பிரணவன் (கிளி/பிரமந்த னாறு மகா வித்தி.).
**தரம்-5**
1 ஆம் இடம்-ஜோ.ஜதிலஜா (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தி), 2 ஆம் இடம்-த.தமிழ் வாணி (கிளி/தர்மபுரம் மகா வித்தி.), 3 ஆம் இடம்-த.அங்கவை (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தி.).
**சித்திரப் போட்டி**
1 ஆம் இடம்-மா.கவிதரன் (தரம்-2) (கிளி/பரந்தன் இந்து மகா வித்தி.), 2 ஆம் இடம்-வி.கிருபாகரன் (தரம்-7) (கிளி/முருகானந்தா கல்லூரி), 3 ஆம் இடம்-சி.சாதுரிஜன் (தரம்-8) (கிளி/முருகானந்தா கல்லூரி).
**கட்டுரைப் போட்டி**
**மத்திய பிரிவு**
1 ஆம் இடம்-ம.கயல்விழி (தரம்-11) (கிளி/பிரமந்தனாறு மகா வித்தி.), 2 ஆம் இடம்-ர.தட்சாயினி (தரம்-11) (கிளி/பரந்தன் இந்து மகா வித்தி.), 3 ஆம் இடம்-செ.நிலக்சனா (தரம்-11) (கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி).
**மேற் பிரிவு**
1 ஆம் இடம்-சி.மதுஷாலினி (கிளி/கண்டாவளை மகா வித்தி.), 2 ஆம் இடம்-ம.ஒலிசியா (கிளி/பிரமந்தனாறு மகா வித்தி.), 3 ஆம் இடம்-தி.ரதினி (கிளி/முருகானந்தா கல்லூரி).
**பொதுஅறிவுப் போட்டி**
**கீழ்ப் பிரிவு**
1 ஆம் இடம்-ச.சதுர்சிகன் (தரம்-7) (கிளி/முருகானந்தா கல்லூரி), 2 ஆம் இடம்-தே.யாழினி (தரம்-8) (கிளி/தர்மபுரம் மகா வித்தி.), 3 ஆம் இடம்-யோ.தர்சிகன் (தரம்-8) (கிளி/தர்மபுரம் மகா வித்தி.).
**மத்திய பிரிவு**
1 ஆம் இடம்-ச.வில்லரசன் (தரம்-10) (கிளி/பிரமந்தனாறு மகா வித்தி.), 2 ஆம் இடம்-க.பௌசிகன் (தரம்-11) (கிளி/முருகானந்தா கல்லூரி), 3 ஆம் இடம்-ச.சமீரா (தரம்-10) (கிளி/முருகானந்தா கல்லூரி).
**மேற் பிரிவு**
1ஆம் இடம்-தி.தயந்திகா (தரம்-13) (கிளி/முருகானந்தா கல்லூரி), 2 ஆம் இடம்-ப.நிவேதன் (தரம்-13) (கிளி/முருகானந்தா கல்லூரி), 3 ஆம் இடம்-ஞா.விஜிதராஜ் (தரம்-12) (கிளி/முருகானந்தா கல்லூரி).
**முன்பள்ளி மாணவர்களின் சித்திரத்தில் நிறம்தீட்டல்**
1 ஆம் இடம்-ஜெ.அச்சயன் (வயது-5) 2 ஆம் இடம்-கோ.கரிஸ்ணவி (வயது-5) 3 ஆம் இடம்-வ.செந்தளிரன் (வயது-5). (க-6)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி, நவ.20
தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் கடந்த 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறும்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், யாழ்.திறந்த பல்கலைக் கழக உதவிப் பணிப்பாளர் சி.கந்தவேள் ஆகியோரும் கலந்து கொள்வர்.
போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புதிதாகத் திறக்கப்படவுள்ள (சுன்னாகம்) சாப்பாட்டுக்கடைக்கு சமையலில் அனுபவமுள்ள சமையல் ஆள்கள் தேவை. உடனடியாகத் தொடர்புகொள்ளவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(40192) (45.6.3)

077 2306 642/ 077 2418 804

## ஜெனறேற்றர்கள் விற்பனைக்கு

இந்திய உற்பத்தியான பெற்றோலிலும், மண்ணெண்ணெயிலும் இயங்கக்கூடிய 2KW"BIRLA ECOGEN" ஜெனறேற்ரர்கள் விற்பனைக்கு உண்டு.

பெற்றோலில் இயங்குவது ரூபா 65,000/=

மண்ணெண்ணெயில் இயங்குவது ரூபா 75,000/=

கிங்ஸ் எலெற்ரோனிக்ஸ்

11-A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

T.P: 021 222 3857 (40206) (10,14)

## வீடு வாடகைக்கு

இல.32, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(40193) (45.6.3) தொ.பே. 077 633 3580

## காணி விற்பனைக்கு

மிருசுவில் பகுதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய பயன் தரு தென்னம் தோப்புடன் 63 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.(பிரித்தும் கொடுக்கப்படும்)

(33007) (45.6.3) தொ.பே. 077 876 8738

## தவறிவிட்டது

இல.31, V.T.S. றோட், உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைச் சேர்ந்த சிவனேசன் கிஷோத் என்பவரது தேசிய அடையாள அட்டை (930240656V) (பாடசாலை வீதி, பண்டாரிக்குளம், வவுனியா) கடந்த 09.11.2013 அன்று யாழ். வேம்படிச் சந்தியில் தவறிவிட்டது.

(40196) (45.6.3) தொ.பே. 077 905 0693

## தென்னிந்திய திருத்தல யாத்திரை

நாட்கள் : 12 யாத்திரீகர் : 10 ஆரம்பம் 10.12.2013 நிறைவு : 22.12.2013

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன்கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

**தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய இரண்டு மாநிலங்களுக்கூடான யாத்திரை.**

தரிசிக்கும் ஆலயங்கள் : காஞ்சி காமாட்சி, மலைக்கோட்டைவினாயகர், பஞ்சபூதத்திருத்தலங்கள் ஐந்தும், ஆறுபடைவீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, உத்திரகோசமங்கை, தஞ்சாவூர், அலமேலுமங்கா, நாகாத்தம்மன், 9நவக்கிரகஆலயங்கள்தனித்தனியாக அனந்தமங்களம் ஆஞ்சிநேயர், மேல்மருவத்தூர் உட்பட 35க்கு குறையாத ஆலயங்களை தரிசிக்கலாம். இதன் முழு விபரமும் கேட்டு அறிந்து பதிவு செய்க.

**தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை**

நாட்கள் : 18 யாத்திரீகர் : 10 ஆரம்பம் 10.12.2013 நிறைவு : 28.12.2013

தரிசிக்கும் ஆலயங்கள் : மலைக்கோட்டை, திருப்பதி, திருக்கடையூர், மேல்மருவத்தூர், காஞ்சிபுரம், இராமேஸ்வரம், பஞ்சபூதத்திருத்தலங்கள், பஞ்சவடிஆஞ்சநேயர், குருவாயூர், ஆறுபடைவீடுகள், 9நவக்கிரகஆலயங்கள்தனித்தனியாக காணிப்பாக்கம் வினாயகர் ஊட்டி, மைசூர், சாமுண்டீஸ்வரி, பிருந்தாவனம், பொற்கோவில், தோணியப்பர் 408 சிவலிங்கங்களைஒரேஇடத்தில், திருவக்கரை, குணசீலம், கொடுங்களூர், சிக்கல், புர்ட்டப்பத்தி சாயிபாபா, சென்னை சீரடிபாபா, ஸ்ரீவில்லிபுத்தூர், நவசீரடிபாபா, சிறுமலை, ஐயர்மலை, கொல்லிமலை, சதுரகிரி சுந்தரமகாலிங்கேஸ்வரர், திருநீர்மலை, சரஸ்வதிகோவில் உட்பட 70க்கு குறையாத ஆலயங்களை தரிசிப்பதுடன் ஊட்டி மைசூர், பாண்டிச்சேரி பீச்சும் வேறு இடங்களும் காணலாம். இதன் முழு விபரமும் கேட்டு அறிந்து பதிவு செய்க.

மேலதிக விபரங்களுக்கு :

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்

No. 59,C 3/3, Sea Street, Colombo - 11.

Tel : 0777 680102, 072 4222989

(சி.13923) (6.3)


## கலந்துரையாடல்

வடமாகாண சுகாதார அபிவிருத்தித் திட்டம், சுதேச மருத்துவம் தொடர்பான கலந் துரையாடல் நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு சுகாதாரக் கிராமத்தில் உள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தின் கேட்போர் கூடத் தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்கள், ஆயுள்வேத வைத்தியம் சார்ந்த தனியார்கள், பாரம்பரிய வைத்தியர்கள், சுதேச மருத்துவ ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என யாழ். சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## வாராந்த கலை நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளை காரைநகர் கிழவன் காடுகலாமன்ற மாணவர்கள் ஆற்றுகைப் படுத்துவார்கள். (ந-8)

## திருக்கல்யாண திருவிழா

வடமராட்சி, நவ.20

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய முருகப் பெருமான் வள்ளி அம்மன் திருக்கல்யாண திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து சுவாமி வீதி வலம் வருதலும் கந்தபுராண படன பூர்த்தியும் இடம் பெறும். (ந-8)


## விற்பனைக்கு

Canan Flash - Speed light 430 Ex - II

விற்பனைக்குண்டு.

(40189) (45.6.3) தொ.பே. 077 889 3692

## மாபெரும் ஏல விற்பனை

உங்களுக்கு ஏற்ற விலையில் வாகனத்தை கொள்வனவு செய்யுங்கள்

நவம்பர் 23 ஆம் திகதி

LOLC வாகன நிலையத்தில்

எதாபெந்திவெவ வீதி, தலகிரியாகம, தம்புல்லை



LOLC மைக்ரோ கிறெடிட்

(ஒரு LOLC குழும கம்பனி)

066 511 80 80- சந்திமா

(சி.13922) (3.6)

# யா/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை

## பரிசில் நாள் - 20.11.2013

### தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013



ஜெ.தர்மிதா
178 புள்ளிகள்



ஜெ.கிறிஸ்ரிக்ரோஷன்
160 புள்ளிகள்



பி.கோபிகரன்
155 புள்ளிகள்

### விரைவு கணிதப்போட்டி

கோட்ட மட்டம்
2 ஆம் இடம் வலய
மட்டம் 4 ஆம் இடம்
ஜீ.சஞ்சய்
தரம் - 02





கோட்டமட்டம்
4 இடம்
லி.ரஞ்சன ரம்மியா
தரம் - 4



### நுண்ணறிவு வினாடி வினாப்போட்டி



தரம்: 05
கோட்டமட்டம்
2 ஆம் இடம்
வலய மட்டம்
4ஆம் இடம்.
பி.கோபிகரன்,
ஜெ.கிறிஸ்ரிக்ரோஷன்,
ஜெ.தர்மிதா.
து.டக்சன்,
ஜெ.நிதுசன்,

### திருக்குறள் மனனப்போட்டி



கோட்டமட்டம் முதலாம் இடம்
ரி. காயத்திரி
தரம் - 02

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் பெயர் விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. ஜெ.கயேந்திரன் - 151 | 02. து.டக்சன் - 150 | 03. ஜெ. நிதுசன் - 149 | 04. சி.திலக்ஷனா - 148 | 05. சர்மிலன் - 148 | 06. உ.துஷானி - 143 |
| 07. ஜெ. டிலக்ஷனா - 140 | 08. ச.டர்சிகா - 137 | 09. கே.லபின்சன் - 137 | 10. யோ.தணிகன் - 136 | 11. சு.சிரேன் - 135 | 12. ச.அரிநயன் - 133 |
| 13. மோ.தேனுகன் - 133 | 14. ஜெ.ஜெருக்ஷன் - 131 | 15. சி.வருஜன் - 126 | 16. பா. அபிஷர்னா - 125 | 17. ரி.சங்கீத் - 122 | 18. வி.மதுர்சன் - 122 |
| 19. சி.தீபிகா - 118 | 20. செ.விந்துஜா - 111 | 21. து.தேனுஷன் - 109 | 22. வ.வானுஜன் - 106 | 23. ப.வைஷ்னவி - 103 | 24. பு.கபில்ஷன் - 103 |

இன்றைய பரிசில் நாளில் சாதனை படைத்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை

(சி/14930) (45.6.3)

விளம்பர அனுசரணை: கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா கலாசார ஒன்றியம் கனடா - கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to **18.12.2013** from suitably qualified persons for the following posts.

**1. POST-WORKS ENGINEER [CIVIL] GRADE III (Faculty of Engineering, Kilinochchi)**

**Qualifications:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

**OR**

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

NOTE: - The in-plant training period will not be counted for the period of experience.

**Method of Recruitment** : Selection by a structured interview. Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary Scale:** U-EX1 (II) - 2006A - Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645-36,160/- p.m.

**2. UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna)**

1. The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale:** U-MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.
**Selection By :** Interview.

**3. MARSHAL, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

1. A Graduate from a recognized University
2. Age between : 30 - 45 years
3. Physique: Height : 5' 5"
   Chest: 32" deflated

Note:-

Preference will be given those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale:** U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.
**Selection By :** Interview.

**4. POST – CURATOR (LANDSCAPE), GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

(1). Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

(2). Should possess a four year special Degree in Botany of a recognized University/ HEI with not less than two (02) years of experience in Landscaping in State/ Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale:** U-EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 -36,160/- p.m.
**Selection By :** Interview.

**5. POST – CHIEF SECURITY OFFICER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

**OR**

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

**OR**

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**Salary Scale:** U-EX 1(II) - Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12 X 645 -36,160/- p.m.
**Selection :** By Structured Interview

**6. POST OF PUBLIC HEALTH INSPECTOR, GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale :** U-MT 1 (IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection :** By Interview

**7. POST OF PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**

a) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale :** U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.
**Selection :** By Aptitude Test and Interview

**8. POST OF NURSING OFFICER, GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale :** U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection :** By Aptitude Test and Interview

**9. POST OF NURSING OFFICER (DENTAL), GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

(i) Pass in 6 subjects at the GCE (O/L) Examination including 5 credits obtained in not more than two sittings. The credit passes should include Science and Mathematics.

**AND**

(ii) Three (03) Advanced Level passes in Science subjects in one sitting.

**Salary Scale :** U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection :** By Practical Test and Interview

**10. POST OF PHARMACIST (LOWER GRADE) (University of Jaffna)**

**Qualifications:**

Certificate of competence as a qualified Pharmacist recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale :** U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection :** By Aptitude Test and Interview

**11. POST OF SUB-WARDEN (FULL TIME) GRADE II (MALE & FEMALE)**
**(Faculty of Engineering, Faculty of Agriculture, Kilinochchi and University of Jaffna)**

**Qualifications :**

i. A graduate of a recognized University.
ii. Preference will be given :
   a. Who have experience in administration and management of hostel.
   b. Who have experience in handling the matters related to students' welfare and discipline.

**Note:**

o The successful applicant should reside in the Students' hostel of Faculty of Agriculture, Kilinochchi. But, he/she cannot reside with his/her family.
o The successful candidate should pay a refundable security deposit of Rs.10,000/=, this amount shall be deducted from their salary in 10 instalments.

**Salary Scale :** U-MN3 (II) - Rs.22,240-18x320-28,000 p.m
**Selection :** By Test and Interview

**12. POST OF SUPERVISOR (MAINTENANCE), GRADE III**
**(Faculty of Agriculture, Kilinochchi and University of Jaffna)**

**Qualifications:**

i) G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in Sinhala/Tamil/English Language/Literature and Arithmetic Commercial Arithmetic/Mathematics.

**AND**

ii) At least 3 years' experience in Labour supervision.

**Salary Scale :** U-MN1 (III A) - Rs.16,070-17x155-18,705 p.m
**Selection :** By Aptitude Test and Interview

**13. POST OF DAIRY ASSISTANT – ANIMAL HUSBANDRY, LOWER GRADE**
**(Faculty of Agriculture, Kilinochchi)**

**Qualifications:**

i) G.C.E. Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings.

**AND**

ii) Successful completion of one year's practical training course in Animal Husbandry conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale** : U-MT1 (IIIA) - Rs.16,535-7x155;10x185-19,470 p.m
**Selection :** By interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**
**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m. in size. Only Applications sent on the specified form will be accepted.

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/ Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR**
**19/11/2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் கண்ணுத்துரை

(HongKong Bank ஓய்வூதியர்)

யாழ்.வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கண்ணுத்துரை 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், ரட்ணதுரை, மோகனதுரை ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகலாதேவி, சந்திரவதனா ஆகியோரின் மாமனாரும், பாணுதுரை - நிசாந்தினி, சுஜேந்திரதுரை ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, Dr.பவளத்துரை, கைலாசதுரை மற்றும் சின்னத்துரை (ஆஸ்திரேலியா)ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.11.2013) வியாழக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து அஞ்சலிக்காக பொறல்ல ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, பி.ப.3.30 மணிக்குத் தகனக்கிரியைக்காக கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க.ரட்ணதுரை, க.மோகனதுரை (மகன்மார்)

வெள்ளவத்தை,0750403141/ 0112598377/0112361930.

(40213) (12.3-6)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, நவ.20

அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை அதிபர் வே.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.நந்தகுமார் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ந-8)

## அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்

உரிமை கோரப்படாத ஜே. வி.சி.இன தொலைக் காட்சிப்பெட்டி யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் 28.12.2012 அன்று கோப்பாய் பொலிஸாரால் பாரப் படுத்தப்பட்டது. குறித்த தொலைக்காட்சிப் பெட்டிக்கு உரிமை கோருபவர்கள் அலுவலக நேரத்தில் நீதிமன்றுக்கு வருகை தந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். 6 மாத காலத்துக்குள் குறித்த சான்றுப் பொருளைப் பெற்றுக் கொள்ளத் தவறும் பட்சத்தில் அரசுடைமை ஆக்கப் படும் என நீதி மன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ந)

*2014 ஆம் ஆண்டுக்கான*

## பாடசாலைத் தவணைகள் அறிவிப்பு

குருநகர், நவ.20

2014 ஆம் ஆண்டுக்குரிய பாடசாலைத் தவணைகள் குறித்த விவரம் மத்திய கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஜனவரி 2 ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பித்து ஏப்ரல் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை முதலாம் தவணைக்காக பாடசாலைகள் இயங்கும். இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஏப்ரல் 21 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து ஒகஸ்ட் முதலாம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடைபெறும்.

மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து டிசெம்பர் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது .(ந-51)

# மரண அறிவித்தல்கள்



## சீனிவாசகம்பிள்ளை நல்லையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

உரங்குலை, தண்ணீர்தாழ்வை பிறப்பிடமாகவும் கட்டுவனை வதிவிடமாகவும் தற்போது உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம்பிள்ளை நல்லையா 17.11.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-லஷ்சுமி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நவசிவாயம் (ஆசிரியர்), முத்தம்மா, காலஞ்சென்ற பவளம்மா ஆகியோ ரின் சகோதரரும், காலஞ்சென்ற அன்னம்மாவின் கணவரும், இராசேந்திரம் (வவுனியா), ஜெயராணி(சுவிஸ்), புஸ்பராணி, மகேந்திரம்(கண்ணன்), பாலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், நகுலேஸ்வரி, செல்வகுமார்(சுவிஸ்), செல்வராசா, தருமலஷ்சுமி, சிவநாதன் ஆகியோரின் மாமனாரும், நிரோஜன்,யனுஷா (சுவிஸ்), வேனுசா(சுவிஸ்), பிரதீபன்- பிரகாஷ், பிரசாந், கவிநயா, நிரோசனா, விசுதரன், தர்மிகா, கௌசிகன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.11.2013) புதன்கிழமை ந.ப. 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் (இந்துக் கல்லூரிக்கு அருகில்)

(40191)(5.6.3)

தகவல்: பிள்ளைகள்.
தொ.பே.: 077 604 8891

## திருமதி நேசம்மா தேவசகாயம்



உடுவில், மல்வத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா தேவசகாயம் நேற்று முன்தினம் (18.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சாமிநாதன் - விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளப்பு - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பிலிப்பு, ஞானமுத்து, சின்னம்மா, பர்னாந்து, திருச்செல்வம், பூரணம் மற்றும் சிங்கராச ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், றோஸ்மலர் மற்றும் எலிசபெத்ராணி, லில்லிபுஸ்பம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், தேவபெனடிற் (ஜேர்மனி), காலஞ்சென்ற பேனாட் மற்றும் பெர்ணதேத் பேனடேத், டெசி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், அல்பிறட், விமலா (ஜேர்மனி) யோகராணி, காலஞ்சென்ற சாள்ஸ் மற்றும் ஜான்சி (லண்டன்), ஆகியோரின் மாமியும், பேர்ளினா, சாளினா, கெரஸ், லொஜின், டெஸ்மன், டாலினியா, டெல்றின், டெனிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று(20.11.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு, மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மல்வத்தை, உடுவில்.

(40186)(2.6.3)

தகவல்: அல்பிறட் (மருமகன்)

## அப்பையா லிங்கநாதன் (சிறி)

(லங்கா சிமேந்து லிமிட்டட்)



அளவெட்டி,கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா லிங்கநாதன்(சிறி) 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கௌசலாதேவியின் (மணி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் லிங்கேஸ்வரி, காலஞ்சென்ற திலகேஸ்வரி மற்றும் சதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காண்டீபன், நகுலன், தமயந்தி (செல்வி), நளாயினி(ஆரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,தேனுகா,விஜிதா, சுதர்சன், சிறிஸ்கந்தராஜி ஆகியோரின் அன்பு மாமனும், கௌதமன், செரீனா, இலேனியா,அக்சயா,சபீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேஸ்வரம், அளவெட்டி.

(40188)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## மனுவல்பிள்ளை யோசப்



(முன்னாள் களஞ்சியக் காப்பாளர், வடகடல் நிறுவனம்)

மண்குழி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் ஒலுவில் வீதி,கரம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல்பிள்ளை யோசப் 18.11.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல்பிள்ளை-மேரி மெற்றில்டா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற நந்தாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பேணாட்,அன்ரன் மற்றும் சபினா விக்ரோறியா, அசலின்பௌலினா ஆகியோரின் சகோதரனும், மேரிஜஸ்மின், சாள்ஸ் பஸ்ரியன், வேல்ஸ் ஜஸ்ரின், மேரி ஷாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காவிந்த, காலஞ்சென்ற பயஸ்(ஓவியர்)அவர்களின் அன்பு மாமனாரும், கலன அதித்தியவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(20.11.2013) புதன்கிழமை மு.ப.10.30 மணிக்கு கரம்பன் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒலுவில் வீதி, கரம்பன்.
077 515 0612

(சி/14935)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி முத்துலட்சுமி துரைச்சாமி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்டிலிப்பாய் மேற்கு 7ஆம் கட்டையைச் சேர்ந்த திருமதி முத்துலட்சுமி துரைச்சாமி 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-இரர்சம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் துரைச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான ரஞ்சிதகுமார், ரஞ்சினி, லோஜினி மற்றும் லாகினி சாந்தினி, பிறேம்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பொன்னையா (கொக்குவில்), செல்வரத்தினம் (கனடா) மற்றும் மனோன்மணி (மலேசியா), செல்வராணி (சங்கானை), இரத்தினசிங்கம் (கனடா), குணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயக்குமார் (இந்தியா) மற்றும் சத்தியமூர்த்தி (லண்டன்), சுரேஸ்குமார் (கனடா), ரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சுயித்தா, அனித்தா (லண்டன்), மீரா, சயிரா, மதுரா, கரிகரன் (கனடா), வியாங்கா, சானியா, அஜை (கனடா), பிறினா, பிறீவன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கரினி, ஆகாஸ், மாஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சண்டிலிப்பாய் மேற்கு 7ஆம் கட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக சங்கானை கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய்.

(40194)(10.6.3)

தகவல்: து. பிறேம்குமார்
T.P: 077 6146 765



## திருமதி கமலாவதி நடராஜா

இருபாலையைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி நடராஜா நேற்றுமுன்தினம் (18.11.2013) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராஜா (முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், விக்னேஸ்வரன் (முன்னாள் முகாமையாளர், HNB), கேதீஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), ஞானேஸ்வரன் (கனடா), தேவகி (லண்டன்), சர்வேஸ்வரன் (உதவிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், அருந்ததி, சுதமதி (ஆசிரியை), சுதாயினி (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), ஜானகி ஆகியோரின் அருமை மாமியும், அர்ச்சனா, பிரதிஷ்ன, விஷ்ணுகா, சரண்யா, கீர்த்தனா, சங்கவி, பிரணவி, ஜெய்ஷன், கமிஸ்ஓவியன், இனியாள் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், பாலசுந்தரம் மற்றும் புவனேஸ்வரி ஆகி யோரின் அன்புச் சகோதரியும்,கமலாதேவி, சறோஜினிதேவி, சண்முகநாதன் காலஞ்சென்ற டாக்டர் யோகநாதன், பொன்னையா மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெருங்குளம் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (21.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கத்தானை வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.

(40196)(10.6.3)

தகவல்: குடும்பத்தினர்,
தொடர்பு: 077 972 7730

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கிருஷ்ணசாமி



திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் வீதியில் வசித்துவந்த மாணிக்கம் கிருஷ்ண சாமி நேற்றுமுன்தினம் (18.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பத்மாவதியின் (பவா) அன்புக் கணவரும், மாணிக்கம்-இளையபிள்ளை தம்பதியரின் மகனும், சிவசம்பு-நாகம்மா தம்பதியரின் மருமகனும், சுபீகரன் (சுவிஸ்), பிரதீபா (கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ண தருணி (சுவிஸ்), Dr. காண்டீபன் ஆகியோரின் மாமனும் கந்தசாமி (சுந்தரம்), ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற அரியரட்ணம் மற்றும் ராசரத்தினம், தவமணி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தமிஸ் (சுவிஸ்), அபர்ணா, ஆருஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2013) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"தீபவாசம்", சின்னப்பா வீதிச் சந்தி,
நவாலி றோட், மானிப்பாய்.
(40322) (10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17.08.1940

மறைவு
02.12.2012



அமரர்
### பெரியதம்பி சண்முகராஜா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அன்புடனும் பண்புடனும் எம்மை
அரவணைத்து
தோளில் தூக்கி வளர்த்து
பாடம் புகட்டி அறிவூட்டி
எம்மை ஆளாக்கிய எங்கள்
அன்புத் தெய்வமே
அந்த இனிய நாள்கள் வந்து.
உன் நினைவைக் கூட்டுதப்பா

உங்கள் நினைவு என்றும் எமது மனங்களில் ...
ஒளிர்ந்து கொண்டே இருக்கும்
இன்று மட்டுமல்ல என்றுமே
எங்கள் தெய்வம் நீங்கள் அப்பா...

எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு நாளை (21.11.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'கணேஸ்வரம்'
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
(கருவேம்பிலை பாடசாலைக்கு அருகில்)

குடும்பத்தினர்.
(40317)(10.6)

## திருடிய ஆட்டுடன் பிடிபட்ட திருடர்கள்

மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த ஆட்டுக் கடாவை வாகனத்தில் ஏற்றி விற்பனைக்கு கொண்டு சென்ற மூவரை பொலிஸார் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இந்தச் சம்பவம் பளை வண்ணாங்கேணிப் பகுதியில் இடம் பெற்றது. பளைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு துன்னாலைப் பகுதியில் இருந்து வாகனத்தில் சென்ற மூவர் நிகழ்வில் கலந்துவிட்டு அந்தப் பகுதியில் மேய்ச்சல் தரையில் சனநடமாட்டம் இல்லாத பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த ஆட்டை வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்களால் குறித்த வாகன இலக்கம் ஆட்டின் உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மறுநாள் நெல்லியடிப் பகுதியில் குறித்த நபர்கள் ஆட்டை விற்பனைக்காகக் கொண்டு வந்த போது கையும் மெய்யுமாகப் பிடித்தனர். (வ-9-14)

## கணினிமயமாகும் சாவகச்சேரி வருமானப்பகுதி

தென்மராட்சி, நவ.20

சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் 2 மில்லியன் ரூபா செலவில் கணினிமயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி எதிர்வரும் 25 ஆம் திகதி வைபவரீதியாக திறந்து வைக் கப்படவுள்ளது. ஆசியன் பவுண்டேசன் நிறுவன வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட வருமானப் பகுதியின் செயற்பாடுகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார் என்று நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

சபையின் அனைத்து வருமானச் செயற்பாடுகளும் இந்தப் பிரிவிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (வ-9)

## கடை வாடகைக்கு

748, பருத்தித்துறை வீதி, நல்லூர் மாநகர சபைக்கு முன்பாகவுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
(40200) (10.6)
**T.P: 021 790 2998**

## விற்பனைக்கு

புடைவைக் கடைக்கு அல்லது பன்ஸி கடைக்கு ஏற்ற புத்தம் புதிய அலுமினிய பிற்றிங் (வெள்ளை கவர்) சோக்கேசுகள் என்பன மலிவாக விற்பனைக்கு உள்ளது.
(சி/14936) (10.6)
தொடர்புக்கு: **077 817 9700**

# VACANCY

## BUSINESS PROMOTION OFFICER

Harikanan printers is leading printers in the North, We are on the lookout for a dynamic result oriented individual with a flair for Marketing

- Full or Part Qualification in CIM , SLIM or other relevant professional qualification
- Previous experience in Marketing, Advertising and Promotion
- Strong Interpersonal skills
- Strong computer literacy with aptitude in MS Office
- Age below 35

Please forward your CV on or before 25-November-2013, e-mail applicants : Please mention the position in the subject column

**HARIKANAN**
Printers of the North
Head Office:
#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
0094-21-2222717 /18, 0094-21-7397530
(H) 0094-21-2222737 0094-21-2222891
www.harikanan.com
print@harikanan.com
harikanan.print
Harikanan Printers

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### கேள்வி அறிவித்தல்
### கடைகள் வாடகைக்கு விடுவதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் துக்குச் சொந்தமான இல. 127, கே.கே.எஸ். வீதியில் அமைந் துள்ள எமது சங்கக் கட்டடத்தின் கீழ் தளத்தில் அமைந் துள்ள இரு கடைத் தொகுதிகள், 45 x 15 சதுர அடி பரப் பளவு கொண்ட சகல வசதியுடன் கூடிய கடைகள் வாடகைக்கு விடப்படவுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னங்கள், நிறுவன முகவர்களுக்கு வழங்கப்படும். கடை களைப் பார்வையிட விரும்புவோர் மற்றும் ஏனைய விவரங்கள் தொடர்பாக சங்கத் தலைமைக் காரியாலயத் தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் (021 222 2587) அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள லாம்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
(சி/14943) (10,14)

## மணமக்கள் தேவை

83, சதயம், 4 இல் சூரியன் செவ்வாய், கனடா P.R. 88, பூராடம், 4 இல் செவ்வாய், ஆஸ்திரேலியா P.R. மணமகன்களுக்கு மணமகளும், 83, அத்தம், செவ்வாய் அற்ற, லண்டனில் படிக்கும் மணமகனுக்கு P.R. உள்ள மணமகளும், 80, பூரட்டாதி 4 இல் செவ்வாய் அமெரிக்க P.R. மணமகளுக்குப் படித்த மணமகனும் தேவை.
(40183)(2.6.3)

**துர்க்கா திருமண சேவை**
**077 818 5978, 021 321 1814**

## IELTS @ KU Education

புதிய குழுவகுப்புகளும் தனிப்பட்ட வகுப்புகளும் ஆரம்பம்.
IELTS பரீட்சைப்பதிவினை அனைவரும் மேற்கொள்ளலாம்.

- Computer Hardware
- MS Office
- Web Design
- Graphic Design
- Sound Editing
- ESOL - A1/A2/B1/B2
- Diploma in Business
- Medical Assistants (Pre Nursing)

சர்வதேசப் பங்காளர்கள்.
*50% Discount on all computer courses - till 25th November/2013*
City & Guilds Approved Centre
Nightingale International College
Malaysian Government Approved College



இலவச பயிற்சி நெறிகள்
மருத்துவப்பயிற்சி நெறிகள்
முகாமைத்துவம்
சர்வதேச ஆங்கிலம்
பேச்சு ஆங்கிலம்
Offer

கே.யு எடியுகேசன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**KU Education**
No 424 K.K.S Road ,Jaffna
021-3208342/0777302882
http://edu.kugroup.info
(பண்டிக்கோட்டு பிள்ளையார் கோவில் எதிர் மேல்மாடியில்)

## குறைந்த விலையில் சொகுசான பயணம்

கொழும்பு – சென்னை Rs. 7,250/-
கொழும்பு – சென்னை – கொழும்பு Rs. 15,130/- upwards

திருவனந்தபுரத்துக்கு இப்போது சென்னை வழியாக இணைப்புண்டு

ONE WAY fare Rs.10,000- upwards
and return Rs. 19,550/-upwards

AIR INDIA express



- Baggage allowance 37 kgs.
- Complementary Meals provided
- Groups fares offer only over 10 passengers.

Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna.
Ph: 021 2221878, 0777730818
or nearest Travel agents
103, YMBA Building, Sir Baron Jayathilake Mawatha, Colombo 01.
011 2168083/ 011 2168082/ 011 2168081
www.airindiaexpress.in

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### பின்வரும் பணிகளுக்குப் பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கவும்

★ **அலுவலக லிகிதர் (ஆண்)**
25 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த உயர்தர சித்தி, கணினி அறிவு, கணக்கியலில் அறிவுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

★ **மகளிர் இல்ல மேற்பார்வையாளர் (பெண்)**
25 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றவர் விண்ணப்பிக்கவும்.

★ **இரவுக் காவலாளி (ஆண்)**
30 வயதுக்கு மேற்பட்ட, அனுபவமுடையவர் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

நிர்வாக சபை
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.
(சி/13812) (10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**காணி விற்பனைக்கு**

மருதடி வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலை இந்தியத்தூரதரகம் எனபவற்றுக்கு அருகில்) 1 1/4 பரப்பு வீதம் இரண்டு காணித்துண்டுகள் நல்லூர் சுற்றாடலில் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 053 8405


# இந்த ஆண்டுக்கான 'பட்ஜெட்' நாளை சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு,நவ.20

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த முறை வரவு- செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி வேகத்தை பலப்படுத்தவும் சமூக நியாயங் களை நிலை நாட்டவும் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்று பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாடு பொருளாதார அபிவி ருத்தி இலக்கு களுடன் அபிவி ருத்தி வேகமொன்றை பேணி வருகிறது. இந்த இலக்கை அடையும் வகையில் வரவு -செலவுத் திட்டத்தினூடாக யோசனைகள் முன்னெடுக்கப் படவுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

2014 நிதியாண்டுக்காக அரசு 154,252 கோடி 25 லட்சத்து 18 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்க திட்டமிட்டுள்ளது.

அதில் பாதுகாப்பு நகர அபி விருத்தி அமைச்சுக்கு 25, 390 கோடி 29 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும், நிதி திட்டமிடல் அமைச்சுக்கு 16,434 கோடி 407 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சுக்கு 10,601 கோடி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட உள்ளது.

இது தொடர்பான நிதி ஒதுக் கீட்டுச் சட்ட வரைவு கடந்த ஒக்ரோபர் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான குழு நிலை விவாதங்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விவாதம் நடைபெறும். குழு நிலை விவாதங்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுவதையொட்டி நாடாளுமன்றத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி கதிரவேலு

(SK எரிபொருள் நிரப்பு நிலையம் A9 வீதி, கனகராயன் குளம்)



யாழ் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும் யாழ். திருநெல்வேலியை தற்போதைய வதிவிட மாகவும் கொண்ட அன்னலட்சுமி கதிரவேலு கடந்த (17.11. 2013) ஞாயிற்றுக் கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னர் காலஞ்சென்ற சண்முகம், கண்ணகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காரைநகர் பாலாவோடையை சேர்ந்த காலஞ்சென்ற - சுப்பர் -சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பர் கதிரவேலுவின் அன்பு மனை வியும், செல்வரத்தினம், தனபாலசிங்கம், பற்குணம், சற்குணம், வசந்தா (ஆசிரியை கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), யோகராஜா (லண்டன்), இலங்கேஸ்வரி(ரதி - ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சுமதி (லண்டன்), மைக்கல் (லண்டன்), தனேந்திரன் (நோர்வே), தயானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ் சென்றவர்களான பொன்னம்மா, பாக்கியம்,தெய்வானை, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா , கணபதிப்பிள்ளை, சுந்தரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், இந்திரகுமார், பரிமளகாந்ததேவி, றஞ்சிதமலர், வசந்தி, நகுலநாதன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), நளினி (லண்டன்), குகநாதன் (முன்னாள் அதிபர், வ/பூந்தோட்டம் மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற கணேசரட்ணம் (லண்டன்), மாலினி (லண்டன்), ரதி (நோர்வே), துஷி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், கவி, வவி, கவிதா, கீதா, சுதா, லதா, கஜேன், அருந்தா, அனோதா, நிரஞ்சன், அவனி (Dentist), Dr.தர்சினி (கொழும்பு றாகம, வைத்தியசாலை), அசோகர் (Agriculture B.sc), அகிதன், ஆதவன், அங்கசன், அன்கதி, ஆரணி, பிரசன்னா, அபி, றயுலன், றஜீவன், நேர்த்திகா, அங்கன், அகிலா, அலன், ஆர்ணன், அபி சன், கஜானி, லதுசன், கௌதமன், நர்மதா, ரிஷி, சிபி, ஆருதி, அவுத்திரி, கர்சன், திவியா, ராகுல், நிலானி, நேகா, நிவேதா, Dr. பிரியா (நோர்வே), தனு, அஜய், மான்சி, அக்ஷயன், அகலியன், அகரன், ஆதிரையன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

168, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(மருத்துவ பீடம் முன்பாக)
077 1707822, 075 5285338


(சி/12292)(2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை நவரட்ணம்

(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நெசவு ஆலை சங்கானை)



கல்லாரை மல்லா கத்தைப் பிறப்பிட மாகவும் சுன்னாகத்தை வசிப் பிடமாக வும் கொண்ட அண்ணா மலை நவரட்ணம் (முன்னாள் தொழில்நுட்ப உத்தி யோகத்தர் நெசவு ஆலை சங்கானை) நேற்று (19.11.2013) செவ்வாயக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான அண்ணாமலை -விசாலாட்சி தம்பதியரின்கனிஷ்ட மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமக னும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும், சுதன், சுதனி, மதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரம், கலைச்செல்வி, அஜிதா, ரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனும், கலைவிழி, தனுஸ்கான், கலைநிலவன், திகழ் நிலவன், ஜந்துசன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான அன்னம், சிவக்கொழுந்து மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான புலேந்திரம், ஞான சேகரம், ராஜேந்திரம் மற்றும் சர்வேந்திரம், மலர்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புளியந்தோட்டம் சுன்னாகத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (20.11.2013) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியந்தோட்டம், சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் வைரவநாதர்



பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ், நோர்வே ஆகிய இடங்களை வதிவிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் வைரவ நாதர் 16-11-2013 சனிக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ் சென்ற வைரவநாதர்- சுந்தரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற பொன்னம்பலம்- சிவகாமிப்பிள்ளை தம் பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான புண்ணியர், பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், புனிதாம்பிகை அவர்களின் பாசமிகு கணவரும், கலா(நோர்வே), ரஞ்சன்(சுவிஸ்), காலஞ்சென்ற சிறீ(பிரான்ஸ்), பாலா (லண்டன்), குமார்(லண்டன்), சூட்டி (பிரான்ஸ்), றமா(நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, துரைராசா, நவரட்ணம், தர்மராசா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறீ, கவிதா, தாரணி, தர்சினி, றஜினி, காஞ்சி ஆகியோரின் அருமை மாமனாரும், ராசா (லண்டன்), குணம் (இலங்கை), காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் கருணா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜன், கௌதமி, சிலக்ஷன், தர்சிகன், றக்சன், பிரண வன், சாருஜன், சாதுரி, அக்ஷயன், மானுசன், மாதுரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2013) வியாழக்கிழமை நோர்வேயில் நடைபெறும். அதே வேளை அவரது சொந்த முகவரியான நல்லூர், பூநகரியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி/13925)(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அருந்ததி தனபாலசிங்கம்



மானிப்பாயை சேர்ந்த திருமதி அருந்ததி தனபாலசிங்கம் நேற்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் (முன்னாள் லிகிதர், பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), மனைவியும் புவிராஜ் (முன்னால் கணக்காய்வாளர்), காமினி (ஜேர்மனி), ரவிராஜ் (ஜேர்மனி), ரூபராஜ் ஆகியோரின் அன்புத் தாயும் சித்திரா துலா (கொமர்ஷல் வங்கி மானிப்பாய்), றேனுகா (கனடா) ஆகியோரின் பெரியதாயும் காலஞ்சென்றவர்களான ராஜேந்திரா (முன்னாள் லிகிதர், இலங்கை மின்சாரசபை கொழும்பு), தெய்வேந்திரம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) மற்றும் திருமதி பவளமல்லிகை, திருச்செல்வம் (முன்னாள் ஆங்கில ஆசிரியர் மானிப்பாய் மகளிர் கல்லூரி), சூரியகாந்தி ஆகியோரின் சகோதரியும் வசந்தமலர், தில்லைநாதன் (ஜேர்மனி), ஜெயபாலினி (ஜேர்மனி) ,சுதர்சினி ஆகியோரின் மாமியும் இரோஷன் (பொறியியல் பீடம் மொறட்டுவ), டிலக்ஷன், பானுஷன், யதுஷன், யசிலா (ஜேர்மனி), டில்ஷன் (ஜேர்மனி), நெல்ஷன் ( ஜேர்மனி), செல்சியா (ஜேர்மனி), எடிசன் (ஜேர்மனி), டினுசன், டென்சியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2013) புதன்கிழமை ந.ப 12 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி, மானிப்பாய்

தகவல்:
மகன்மார் (புவிராஜ் ரூபராஜ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியைக் கற்பிக்க வருகிறது புதிய முறை

## ஆராய்கிறது தேசிய மொழிகள் அமைச்சு

கொழும்பு.நவ.20
மொழியைக் கற்பிக்கும் புதிய முறைமை தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வுள்ளது என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன்மூலம் மும்மொழி செயற்றிட்டத்தை நாடு முழு வதும் உரிய முறையில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.
உத்தியோகத்தர்கள் மற்றும் சாதாரண நபர்களுக்கு மொழிகளை கற்பிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறினார்.
திறமையுள்ளவர்களுக்கு மொழியைக் கற்பிக்கும் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



ஆங்கில மொழியை கற்பிக்கும் விசேட திட்டமும் ஆரம்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.
கல்வித் திணைக்களத்துக்கு மேலதிகமாக, தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு மொழியைக் கற்பிக்கும் விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மொழி தொடர்பான பயிற்சிகள் தேவை என்று அவர் மேலும் கூறினார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சிங்கள

பிரச்சினையாருக்கு இருக்கிறது? மனித உரிமைகளைப் பற்றிப் பேச வேண்டியவர்கள் யார்?" என்று நேற்றுப் பல கேள்விகளைத் தொடுத்தார் அவர்.
"போரில் இராணுவத்தினரும் உயிரிழந்தனர். இவர்களின் உயிரிழப்புக்குப் பொறுப்புக் கூறுவது யார்? தமிழருக்கு ஒரு நியாயம் சிங்களவர்களுக்கு ஒரு நியாயமா?" என்றும் அவர் கேள்விகளை எழுப்பினார்.
"நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனி நடக்க வேண்டியவற்றைப் பார்ப்போம். அதை விடுத்து ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதில்பயனில்லை. இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகள், தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளன. இதனைப் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனிடமும் நான் எடுத்துரைத்தேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கை வந்திருந்த பிரிட்டன் பிரதமருக்கும் தமக்கும் இடையிலான சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பில் 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

#### போர்க்குற்றங்கள்

இலங்கையில் இடம்பெற்ற போரில் இரு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மக்கள் மட்டும் பாதிப்படையவில்லை. போரின்போதும் அதன் பின்னரும் நாட்டின் நிலைமைகளில் பெரும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த மூன்று வருடங்களாக நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர். போர் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. அதனால் அது குறித்து நான் பேச விரும்பவில்லை. இருப்பினும், போரில் இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அப்படியாயின் அவர்களது உயிருக்கு யார் பொறுப்பு கூற வேண்டியவர்கள்?

#### யாருக்கு மனித உரிமை பிரச்சினை?

இலங்கையில், எந்தத் தமிழரும் எங்கும் சுதந்திரமாக வாழலாம் என்பதை இலங்கையின் சாராசரி குடிமகன் - தமிழன் - இலங்கையன் என்ற வகையில் நான் கூறிக் கொள்கின்றேன். போரின் போது தமிழர்கள் வடக்கிலும் வாழ்ந்தனர். கொழும்பு உள்ளிட்ட தெற்கிலும் சுதந்திரமாக வாழ்ந்தனர். வாழும் உரிமை இருந்தது. ஆனால் சிங்கள மக்களுக்கு போரின்போதும் வடக்குக்குச் செல்ல முடியாத நிலை இருந்தது. அங்கு சென்று வாழ்ந்திருந்தால் சிங்கள மக்கள் உயிருடன் இருந்திருக்க முடியாது.
ஆனால் போர் முடிவடைந்துள்ள தற்போதைய சூழ்நிலையிலும், சிங்கள மக்கள் வடக்கில் சென்று வாழ முடியாத நிலை உள்ளது. முல்லைத்தீவில் மட்டும்தான் சிறிதளவு சிங்கள மக்கள் இருக்கின்றனர். யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது. அப்படியாயின், எந்த மக்களது மனித உரிமைகள் மீறப்படுகின்றன? யாருக்கு அந்தப் பிரச்சினை இருக்கிறது?

#### தப்பான அபிப்பிராயத்தில் சர்வதேசம்

சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளன. இதனை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனிடம் நான் தெரிவித்தேன். இலங்கை நன்றாக அபிவிருத்தி அடைந்துள்ளது என்று அவர் கூறினார். அத்துடன், சில விடயங்களில் அரசு அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், கனடா முதலான நாடுகள் தங்களது அரசியல் நலன்கருதி இலங்கை தொடர்பில் கருத்து வெளியிடுகின்றன.

#### அரசியல் பேசவில்லை

நான் அரசியல் பேசவில்லை. எனக்கு அரசியல் தேவையும் இல்லை. அதனால் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து நான் கருத்திற்கொள்வதில்லை. வடக்கு மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளை அரசு செய்கின்றது. என்னால் இயன்ற உதவிகளை நானும் செய்கின்றேன். இன்னும் சிறிது காலத்தில் வடக்கு மேலும் அபிவிருத்தி அடைந்து விடும்" என்றார். (12)

### உள்ளக

வருமான எட்வேட் மில்லிபாண்ட் நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.
பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டின் இறுதியில், மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாகக் குறிப்பிடப் படவில்லை என்வும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டுமா அல்லது இல்லையா என்பது தொடர்பாகக் கேள்வி எழுப்பப்படவில்லை எனவும் மிலிபாண்ட் குறிப்பிட்டார்.
இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் பொதுநலவாய அமைப்பின் விழுமியங்களுடன் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன. இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள்தொடர்பான உண்மை உரைக்கப்படுவதைப் பிரிட்டன் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் எனவும் மில்லிபாண்ட் மேலும் சுட்டிக்காட்டினார்.
இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதென்கின்ற தனது தீர்மானமானது 'நிகழ்ச்சி நிரலை வடிவமைக்கவும், உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் முதன்மையான பிரச்சினையை வெளிச்சமிட்டுக் காட்டவும் உதவுகிறது எனவும் வடக்குக்குப் பயணம் செய்த முதலாவது அனைத்துலக நாட்டுத் தலைவரான கமரூன் அங்கு கூறினார்.
பிரிட்டன், ஐ.நாவின் ஊடாக இலங்கைமீது அழுத்தம் கொடுப்பதாகவும், இறுதி ஐந்து மாத காலப் போரின்போது இடம்பெற்ற மீறல்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துவதாகவும், இதுவே இலங்கையில் நிலையான நீண்ட கால மீளிணக்கப்பாடு தோன்ற வழிவகுக்கும் எனவும் கமரூன் மேலும் குறிப்பிட்டார்.
2009ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் 2013 இல் இலங்கையில் உச்சி மாநாடு நடத்துவதெனத் தீர்மானித்தபோது அதற்கு முன்னைய தொழிற்கட்சி அரசு அங்கீகாரம் வழங்கியதாகவும், மில்லிபாண்ட் சந்தர்ப்பத்துக்கேற்ப, இரட்டை நிலைப்பாட்டுடன் இலங்கையின் பிரச்சினையை அணுகுவ தாகவும் கமரூன் குற்றம் சுமத்தினார்.
"நான் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது விருப்பிற்கேற்ப மாநாட்டின் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து நடத்த அனுமதிப்பதா அல்லது எமது பொதுநலவாய அமைப்பின் பங்காளிகளுடன் இணைந்து எமது நலன்களை நிகழ்ச்சி நிரலில் இணைப்பதற்காக இந்த உச்சி மாட்டில் கலந்துகொள்வதா என்கிற இரண்டு தெரிவைக் கொண்டிருந்தேன்.
இறுதியில் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு எமது விழுமியங்களைப் பாதுகாப்பதெனத் தீர்மானித்தேன். இதன் மூலம் என்னால் முடிந்தளவு முன்னேற்றத்தை ஏற்படுத்த விரும்பினேன். நான் இதில் கலந்துகொண்டதானது பொது நலவாயத்துக்கும், இலங்கை மற்றும் பிரிட்டன் ஆகியவற்றுக்கான சரியான தீர்வாகும் என நம்புகிறேன்" என்றும் கமரூன் தனது உரையில் கூறினார்.
பிரிட்டன் பிரதமரின் நாடாளுமன்ற உரையின் பின்னர் அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பிலும், சனல்- 4 ஊடகவியலாளர்கள் அரசினால் திட்டமிட்டு அச்சுறுத்தப்பட்டமை குறித்தும் காரசாரமான விவா [illegible] தனது வடக்குப் பயணம் குறித்தும் அங்கு தான் கண்டறிந்த விடயங்கள் அனைத்தையும் பிரதமர் கமரூன் தனது உரையில் விரிவாக விளக்கினார். (த)

### தமிழர்களிடம்

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தமிழக அரசியல் வாதிகள், தமிழ் உணர்வாளர்கள் ஆகியோர் முன்னாள் கிரிக்கெட் வீரரான முரளியின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.
அத்துடன், தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரித் தனது கூற்றை முரளி திரும்பப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.
இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்,
"இருபது - முப்பது தாய்மார்கள் தங்களது பிள்ளைகளைக் காணவில்லை என அழுது புலம்பிப் போராட்டம் நடத்துவதால் மனித உரிமை குற்றச்சாட்டுகள் உண்மையாகிவிடா" என பெற்ற பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய் மார்களை கொச்சைப் படுத்தி, முரளிதரன் பேசியுள்ளதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. காணாமற் போன தங்கள் பிள்ளைகளைத் தேடியலையும் தாய்மார்களைக் கொச்சைப்படுத்தி, முத்தையா முரளிதரன் மாற்று வரலாற்றில் இன்று இடம் பிடித்து விட்டார். அவர் உடனடியாக பொது மன்னிப்புக்கோர வேண்டும்." என்று கூறினார்.
அதேவேளை, "30 தாய்மார்கள் தான் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர் எனக்கூறும் முரளிக்கு, ஆயிரக் கணக்கான தாய்மார்களை போராட்டக் களத்துக்கு வரவிடாது வவுனியாவில் வழிமறித்து அரசு விரட்டியடித்த விடயம் தெரியாதா?
பிறப்பினால் மாத்திரமே தமிழன் என்ற நாமத்தைப் பெற்றுள்ள முரளி இவ்வாறு செயற்படுவது குறித்து நாம் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை. அவர் தற்போது அரசுக்கு அதீத விசு வாசத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளார்" என்று கூறினார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன. (த-சி)

### மனித உரிமை

திலேயே நடத்த ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக நம் பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.
இந்நிலையில், பொதுநலவாய செயலகத்தின் மனித உரிமை பிரிவின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவினர் டிசெம்பர் 2 ஆம் திகதி இலங்கைக்கு பயணம் செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பி [illegible] உள்ளக [illegible] நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.
அத்தோடு, தேசிய ரீதியிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதையே பொதுநலவாயம் நம்புகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளும் தேசிய ரீதியிலான விசாரணைகளை விரும்புகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (த-சி)

### சட்டம்

தேச சபை உறுப்பினர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், பொலிஸார் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.
குறிப்பாகக் கடந்த வாரம் வலி.வடக்குப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற மக்களின் வாகனங்கள் மீது பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அவர் சுட்டிக்காட்டினார்.
"வல்லைவெளியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியதில் வாகனத்தின் கண்ணாடிகள் உடைந்ததாகவும், இது தொடர்பில் அவசர தொலைபேசி இலக்கமான 119க்கு அறிவிக்கப்பட்டும் பொலிஸார் வரவில்லை.
அதேபோன்று தொண்டமானாறிலும், சுன்னாகத்திலும், வியாபாரி மூலையிலும் இவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்கள் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினாலேயே நடத்தப்பட்டுள்ளன. இது தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் அச்சமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது" என்று ரங்கேஸ்வரன் குற்றச்சாட்டை முன்வைத்தார். இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், இவற்றுடன் தொடர்புடையவர்கள் பிடிக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர் எனவும் குற்றம் சுமத்தினார்.
மேலும் பொன்னாலையில் தினமும் 20 பனைகள் வரை தறிக்கப்படுவதாகவும் இவை தடுக்கப்படவில்லை எனவும் இதற்கு ஒரு சில பொலிஸாரும் உடந்தையாக உள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (த-5)

### நெறிமுறை

ளது என்று பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.
பொதுநலவாய மாநாட்டில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்ளுமாறு அதிகாரி ஒருவர் பிரதமருக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அதிகாரியின் அழைப்பை டேவிட் கமரூன் தட்டிக்கழித்துவிட்டார் என்றும் அரசு உயர் மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன.

### வலி.வடக்கு

தரவுகள் திரட்டப்படும் போது அந்த மக்களுக்கு விடுவிக்கப்படாத பிரதேசத்தில் காணிகள் இருந்தனவா என்பது தொடர்பிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.
இதன் பின்னர் வலி.வடக்கு மக்களின் விடுவிக்கப்படாத காணிகள் அவர்களுக்கே மீளவும் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான முருகேசு சந்திரகுமார் முன்மொழிந்தார். இதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த ஆண்டு இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இதே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டினார். இருப்பினும் நேற்றைய தினம் கொண்டு வரப்பட்ட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. மேலும் விடுவிக்கப்படவுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ள ஒரு சில பகுதிகளில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது. (த-5)

### அரச

ஆலோசனை நடத்தவில்லை. இந்தக் காரணமாக நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்தது.
இந்த நிலையில் நேற்றைய கூட்டத்தில் தலைமை உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரச அதிபர் விட்ட தவறை நியாயப்படுத்திப் பேசினார்.
"வழமையாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான திகதியை நான் இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கேட்டு அரச அதிபரிடம் கூறுவேன் என்று தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா வழமை போன்று இந்த முறையும் நான் திகதியை கூறியபோது. நான் வடக்கு முதலமைச்சருடன் கதைத்தே திகதி சொல்வதாக அரச அதிபர் நினைத்திருப்பார்.
வேறு எதுவும் நடக்கவில்லை. அவர்கள் பிழையாக வழி நடத்தப்படுகின்றனர்" என்றார் டக்ளஸ் தேவானந்தா.
பொறுப்புள்ள அரச அதிபர் என்ற அடிப்படையில், மற்றொரு இணைத் தலைவரான வடக்கு முதலமைச்சரிடம் இது குறித்து ஆலோசனை நடத்தத் தவறியமையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியாயப் படுத்தினார். (த-5)

### கூட்டமைப்பு

தன்னிச்சையான நடவடிக்கை யாகும்.
இதனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை பிற்போட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். அரச அதிபரிடம் கோரியிருந்தது. ஆயினும் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுக் கூட்டம் நேற்று நடத்தப்பட்டது. இதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் இதில் பங்குபற்றவில்லை. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கிறீன்பீல்ட் சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.20
இலங்கை மென்பந்துக் கிரிக்கெட் சம்மேளனம் நடத்திய 20/20 மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழக அணி சம்பியன் ஆனது.
கடந்த வாரம் மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசியப் பாடசாலை மைதா னத்தில் இந்தப் போட்டி இடம்பெற்றது.
இதில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் தேசியப் பாடசாலை அணியை எதிர்த்து மன்னார் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சென்.சேவியர் ஆண்கள் தேசியப் பாடசாலை அணி 15.3 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் மில்ரன் 14 ஓட்டங்களையும், பிரியகாந் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழக அணி சார்பில் றூபராஜன் 3 இலக்குகளையும், பவின்குமார், நிந் தாகரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் டனிசினியன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.
80 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் கிறீன்பீல்ட் விளையாட்டுக் காக் அணி 6.5 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 45 ஓட்டங்களை பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது இதனால் வெற்றி தோல்வி நாணயச் சுழற்சியின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் கிறீன் பீல்ட் அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
கிறீன் பீல்ட் அணி சார்பாக அல்பிரட் ராஜசிங்கம் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும், கவிராஜ் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசியப் பாடசாலை அணி சார்பில் பிரியகாந் 2 இலக்குகளையும் அரவிந், றோய் ஆகியோர் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர். (த-23)



## ஆட்டம் சமநிலை




யாழ்ப்பாணம், நவ.20
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளை யாட்டுக் கழக அணி இதில் மோதிக் கொண்டது.
ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 2 கோல்களை அடித்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ.20
மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகம் 5 பந்துப் பரி மாற்றங்கள் கொண்ட 6 பேர் பங்கு பற்றும் மென்பந்து கிரிக் கெட் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.
இந்தப் போட்டிகளில் மன்னார் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்குகொள்ள முடியும் எனவும், பதிவுகளை மேற்கொள்ளும் முதல் 30 விளையாட்டுக் கழகங்களுக்கு போட்டியில் விளையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் விளை யாட்டுக் கழகங்கள் போட்டி ஏற்பாட்டாளர் அமல்ராஜுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (த-23)

## சென்.பற்றிக்ஸ் வீரனுக்கு நேற்று கௌரவிப்பு நிகழ்வு





யாழ்ப்பாணம், நவ.20
இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டபிள்யூ.சி.எல்.லிவிங்ஸ்ரன் நேற்று செவ்வாய்க்கிழமை கல்லூரிச் சமூகத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.
கல்லூரியின் நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் 'பாண்ட்' வாத்தியங்களுடன் அழைத்துவரப்பட்டனர்.
கல்லூரி அதிபர் அருட் தந்தை ஜெறோ செல்வநாயகம் தலைமையில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
லிவிங்ஸ்ரனுக்கு கல்லூரி ஆசிரியர் குழாம், பழைய மாணவர் சங்க யாழ்.கிளையினர் பரிசில் வழங்கிக் கௌரவித்தனர்.
அத்துடன் லிவிங்ஸ்ரனின் பயிற்றுநர்களும் நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண் டார்.
வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட், வடமாகாண கல்வித் திணைக்கள முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், சென்.பற் றிக்ஸ் கல்லூரி யாழ். பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எஸ்.மரியதாஸ், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை முன்னாள் அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம், கல்லூரிப் பழைய மாணவர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-23)

## மன்னார் லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், நவ.20
மன்னார் உதைபந்தாட்ட லீக் நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் நகர சபை பொது மைதானத்திலும், உதைபந்தாட்ட லீக் மைதானத்திலும் ஆரம்பமாகின்றது.
மேற்படி சுற்றுப் போட்டித் தொடரில் 30 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.
யாழ்.மாவட்டத்திலிருந்து நாவாந்துறை சென் மேரிஸ், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன. (த-23)

## நாளை மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், நவ.20
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள 'ஏ' பிரிவு அணிக்கான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## தெல்லிப்பழைக் கோட்ட உதைபந்தாட்டப் போட்டி

மாங்குளம், நவ.20
தெல்லிப்பழை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு அருணோதய கல்லூரி மைதானத்தில் நடை பெற உள்ளது.
இதில் 14 வயதுப் பிரிவில் அருணோதயக் கல்லூரியை எதிர்த்து வயாவிளான் மகா வித்தியாலயமும், 16 வயது பிரிவின் அருணோதயக் கல்லூரியை எதிர்த்து மகா ஜனக் கல்லூரி அணியும், 18 வயதுப் பிரிவில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணியும் மோதவுள்ளது. (த-422)

## சென். ஹென்றிஸ், மானிப்பாய் இந்து உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி



யாழ்ப்பாணம்,நவ.20
சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 14 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியும், 18 வயது பிரிவு அணிக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் வெற்றி பெற்று சம்பியன் ஆகின.
நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம் பெற்ற 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப் பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
18 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இரண்டு அணியினதும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெற வில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந் தது. ஆட்டம் வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன.
இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியன் ஆனது. (த-23)

## வென்றது றோயல்




யாழ்ப்பாணம்,நவ.20
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி 6:1 என் கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க் கேள்விகள் ஏதுமின்றி நேற்று நடந்தது ஒருங்கிணைப்புக் கூட்டம்

## வடக்குத் தேர்தலால் காலம் பிந்திவிட்டது என்கிறார் டக்ளஸ்

தொகுப்பு: அமுதன்



கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பதை நேற்று நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உணர்த்தியது. ஆளுந் தரப்பு அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் நேற்று கூட்டம் நடைபெற்றதால் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கேள்வி கேட்களவரும் இருக்கவில்லை. எல்லாவற்றுக்கும் அறிக்கை கோருவதிலேயே குறியாக இருந்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உரிய காலத்தில் நடத்த வட மாகாண சபை தேர்தலும், பொதுநலவாய மாநாடும் தடையாக இருந்ததாக அவர் புதுக்கதை விட்டார்.

யாழ்.மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் செல்லவில்லை.

கூட்டத்துக்கான இணைத் தலைமை, வட மாகாண புதிய முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கப்படாமை காரணமாகவே தாம் இதனைப் புறக்கணிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னரே அறிவித்திருந்தது.

**ஆள்கள் அற்ற கதிரைகள்**

இதனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பெரும்பாலான ஆசனங்கள் வெறுமையாகவே இருந்தன. பின்னர் அந்த வெற்றிடங்களை அரச அதிகாரிகளே நிரப்பிக் கொண்டனர். இருந்தும் இணைத் தலைமைக்குரிய ஓர் ஆசனம் வெறுமையாகவே இருந்தது.

வழமையான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாவது வழமை. இருப்பினும் நேற்று, போரில் உயிர் துறந்தவர்களுக்கான அக வணக்கத்துடன் அது ஆரம்பமானது.

**அபிவிருத்தித் திட்டங்கள்**

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். இதில் யாழ். மாவட்டத்துக்கு இந்த ஆண்டு 17 ஆயிரத்து 26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதில் 2 ஆயிரத்து 696 மில்லியன் ரூபாவே செலவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நிதியில் விசேட திட்டங்கள் அடங்குவதால் அடுத்தடுத்த வருடங்களுக்கும் அவை பாவனையில் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஒவ்வொரு துறைசார் அபிவிருத்திகள் தொடர்பிலும் அரச அதிபர் விளக்கினார்.

**சொல்லியது செயலில் இல்லை**

அரச அதிபர் தனது உரையில், யாழ். மாவட்டத்தில் மும்மொழிக் கொள்கைகள் உரிய முறையில் பின்பற்றப்படுவதாகத் தெரிவித்தார். ஆனால் அவர் தனது உரையை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்திய 'புறஜெக்ரரில் 'சிலைற்றுகள்' ஆங்கில மொழியில் மாத்திரமே காண்பிக்கப்பட்டன.

மொழிக்கொள்கை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு இனிமேல் தமிழ் மொழியிலேயே அறிக்கைகள் சமர்பிக்கப்பட வேண்டும்என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தலைமையுரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வட மாகாண சபைத் தேர்தலாலும் 'சோக்கொம்' மாநாட்டாலும் காலதாமத மானதாகக் குறிப்பிட்டார். அமைச்சர் 'சோக்கொம்' என்பதற்குப் பதிலாக சோகம் என்று உச்சரித்து பின் திருத்தமாகச் சொன்னதால் அவரது சோகத்தை உணர முடிந்தது.

14 நாள்கள் அவகாசம் கொடுத்து நான் தான் கூட்டம் வைக்கச் சொன்னேன். இந்த மாதம் 21 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 21 ஆம் திகதி வரையில் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட கூட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு வாசிக்கப்படவுள்ளது. இதனால் அதற்கு முன்னர் வைக்குமாறு நான் தான் சொன்னேன். வழமையாக நான் ஆளுநருடன் கதைத்து விட்டு அறிவிப்பேன். ஆனால் தற்போது வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பதவி வழியாக அவர்தான் ஓர் இணைத் தலைவர். அவருடன் நான் கதைத்துத்தான் திகதியைச் சொல்கிறேன் என அரச அதிபர் எண்ணி திகதியை அறிவித்தார் என்று முன்னுக்கு பின் முரணாக அமைச்சர் கூறினார்.

மேலும் பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வராதமை நட்டம் என்று குறிப்பிட்ட அமைச்சர், அவர் வந்திருந்தால் இந்திய மீனவர் பிரச்சினை, 13 ஆவது அரசியல் திருத்தம் தொடர்பிலும் கதைத்திருக்க முடியும் என்றார்.

இதுவரை காலமும் அபிவிருத்திக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் கதைக்க முற்பட்டால், அபிவிருத்தி பற்றி மட்டும் பேசுங்கள் என்று வாயடைக்கும் டக்ளஸ் தேவானந்தா, நேற்றைய தினம் அவர்கள் வராததால் அரசியலைப் பேசி அந்த இடைவெளியை நிரப்பி விட்டார்.

**பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய அமைச்சர்**

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான அழைப்பிதழ் பல அதிகாரிகளுக்குகிடைக்கவில்லை என்ற விடயம் முதலாவதாக சர்ச்சையைக் கிளப்பியது.

கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்கள் மாவட்டச் செயலகத்தால் பிரதம தபாலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மாயமாகியுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நடந்தது என்ன என்று அமைச்சர் கேட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 4 ஆம் திகதி பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டதாக மாவட்ட செயலகத்தினர் தெரிவித்தனர். அப்படியானால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைத்ததற்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக் முடியுமா என்று தபாலகரிடம் அமைச்சர் கேள்வியெழுப்பினார். அவர் அதற்குச் சமர்ப்பிக்கலாம் என்றார்.

' சேம் சைட் கோல்' அடிப்பது போல அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் சில அதிகாரிகளுக்கு அழைப்புக்கடிதங்கள் கிடைக்கவில்லை என்றும் அது மட்டுமல்ல எனக்கே சென்ற கூட்ட அறிக்கை கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அதிகாரிகளுக்குக் கடந்த 12 ஆம் திகதிதான் கடிதம் அனுப்பியதென. மாவட்ட செயலகத்தினர் தெரிவித்தனர். இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் ஏன் அவர்களுக்கு 14 தினங்களுக்கு முன்னர் கடிதம் அனுப்பவில்லை என்று கேள்வியெழுப்பினார்.

பிரதம தபாலகர், குறித்த கடிதங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படவில்லை என்றும் சாதாரண தபாலிலேயே அனுப்பப்பட்டன என்றும் குறிப்பிட்டார். சாதாரணமாக அடுத்த நாளே குறித்த கடிதங்கள் கிடைக்கப் பெறும் என்று அவர் குறிப்பிட்டார். இதன் பின்னர் துறைசார் மீளாய்வுகள் இடம்பெற்றன.

**அறிக்கை கோரல்**

சகல விடயங்களுக்கும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. இதன் போது நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குட்பட்ட விடயங்களுக்கு அறிக்கை கோரிய போது, குறித்த அதிகாரி ஏற்கனவே அறிக்கை தரப்பட்டதாகச் சொல்ல, சரி இருந்தாலும் மீளவும் அறிக்கை தருமாறும் கோரினார்.

**மாகாண சபை மீது கேள்விக் கணை**

வடக்கு மாகாண சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரோ, அமைச்சரோ உறுப்பினர்களோ வராத நிலையில், கூட்டத்துக்கு வந்திருந்த மாகாண சபை அதிகாரிகளைக் கேள்விகளால் அரச தரப்பினர் துளைத் தெடுத்தனர்.

மாகாண சபைக்குரிய ஒவ்வொரு திணைக்களங்களும் தமக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று மத்திய அரசின் அமைச்சர் டக்ளஸ் கோர, எதுவித மறுதலிப்பும் இல்லாமால் தலைப்பாட்டினர் மாகாண அதிகாரிகள்.

மாகாண அமைச்சர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களிடம் கேட்டுப் பதில் சொல்வதாக யாரும் தெரிவிக்கவில்லை.

இதுவரை காலமும் மாகாண சபை சார்பாக ஆளுநர் பங்கு பற்றிய கூட்டங்களில் மூச்சுப் பேச்சு இன்றி இருந்த அரச தரப்பினர், நேற்றைய கூட்டத்தில் பாய்ந்து, பாய்ந்து குறை கண்டுபிடித்தனர்.

**அனுமதி யார் கொடுத்தது**

வயல் நிலங்கள், மேட்டுக் காணிகளில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இவற்றுக்கு யார் அனுமதி வழங்கியது என்று கேள்வி எழுப்பினார் அமைச்சர்.

நெடுங்குளம் வீதி, அரியாலை பகுதியில் நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமாகவுள்ள காணி ஒன்றில் கட்டடம் கட்டப்படுகின்றது. இது குறித்து எம்மிடம் அனுமதி பெறப்படவில்லையென்று பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். இதற்கான அமைதி யாழ். மாநகர சபையிடமே பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, எம்மிடம் எந்த அனுமதியும் பெறப்படவில்லை என்றார். ஆனால் நல்லூர் பிரதேச சபையின் செயலாளரோ அவர்கள்தான் அனுமதி கொடுத்ததாகத் தெரிவிக்க, அமைச்சர் டக்ளஸ், அந்தப் பகுதி உங்கள் எல்லைக்குள் அமைந்திருந்தால் நீங்கள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச சபைச் செயலாளர் பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

**ஊடகச் செய்திகளுக்கு முக்கியத்துவம்**

ஊடகங்களில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு குறைபாடுகள், சுட்டிக்காட்டப்படுகின்ற போதும், எதையுமே பொருட்படுத்தாத அமைச்சர், நேற்றைய கூட்டத்தில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் படு தோல்வியால், ஈ.பி.டி.பியின் செயற்பாடு முற்றாக மாறிவிட்டதாகச் சபையிலுள்ளவர்கள் முணுமுணுத்தனர். அத்துடன் இதுவரை காலமும் தாங்கள் செய்ததை மறந்து கேள்விகள் கேட்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாகாண அமைச்சுக்களில் கல்வி அமைச்சின் செயலாளரையே சகல விடயங்களிலும் குடைந்தெடுத்தனர்.

**கட்டாக்காலியால் மூண்ட போர்**

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மாகாண அமைச்சுக்குக் கீழ் வருவதால், பணிப்பாளர் திருமதி வி. அமிர்தலிங்கம் மீதும் கேள்விக்கணைகளைக் தொடுத்தனர்.

கால்நடை வைத்தியர்களுக்கான வெற்றிடம் மற்றும் வசதிகள் போதாமை தொடர்பில் அவர் சுட்டிக் காட்டிய போதும் அவரது பேச்சைக் கேளாமல் குறைகளைச் சுட்டிக்காட்டினர். குறிப்பாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், எனக்கும் மூன்றிலொரு பகுதிக்கு கிராம சேவையாளர்கள் இல்லை. அதற்காக வேலை செய்யாமலா உள்ளோம்.

குறைகளைச் சுட்டிக் காட்டுவதைவிட இருப்பதைக் கொண்டு செய்வதுதான் சிறந்தது என்றார். இதற்கு மிருக வைத்தியர் வேலையொன்றும், கிராம சேவகர்வேலை மாதிரி இல்லை என்று குறிப்பிட்டார் பணிப்பாளர்.

**முறையாக வாங்கிக் கட்டிய மாநகர முதல்வர்**

இதன்போது எழுந்து மாநகர சபை முதல்வர், கட்டாக்காலி மாடுகள், ஆடுகள் பிடிப்பது தொடர்பாகக் கேள்வி யெழுப்பினார். அதற்குப் பணிப்பாளர் கட்டாக்காலிகளை பிடிப்பது எங்கள் வேலையில்லை. உள்ளூராட்சிச் சபைகளின் வேலையென்று பதிலளித்தார் சபையிலிருந்தவர்கள் கைதட்டிக் கரகோஷம் செய்தனர். பதிலுக்கு முதல்வர் திருப்பிக் கத்தியபோதும், கை தட்டல் மத்தியில் அவரது கத்தல் எடுபடவில்லை.

**நீலிக் கண்ணீர் வடித்த அரச தரப்பு**

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தமிழ் மக்களைக் குழப்பி அச்ச நிலைக்குத் தள்ளி வருகின்றனர் என்று தெரிவித்து வந்த ஈ.பி.டி.பியினர் நேற்று 'அந்தர் பல்டி' அடித்து சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், மக்கள் அச்சமான சூழ்நிலையில் வாழ்வதாகவும் தெரிவித்தனர்.

மேலும் வலி. வடக்கு மக்களின் காணிகள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தனர்.

கூட்டம் முழுமையாக முடிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமையுடன் உள்ளேன்

## கெவின் பீற்றர்சன் தெரிவிப்பு



தனது திறமைகள் குறித்து தன்னிடம் நம்பிக்கையுள்ளதாக இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றில் வெளியான செய்திக்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலிய ஊடகமொன்று கெவின் பீற்றர்சன் மிகுந்த திமிருடையவர் எனவும் அதன் காரணமாக அவரது அணியின் சக வீரர்களாலேயே அவர் விரும்பப்படுவதில்லை எனச் செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தனது திறமையில் தனக்கு நம்பிக்கையிருக்க வேண்டிய தேவையுள்ளதாக கெவின் பீற்றர்சன் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்காவில் பிறந்து கிரிக்கெட் விளையாடுவதற்காக இங்கிலாந்திற்குச் சென்றடைந்த கெவின் பீற்றர்சன் இந்தப் பயணத்தில் ஏராளமான கடினமான போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

தான் திமிருடைய்வன் என ஏனையோர் நினைப்பதைப் பற்றி தான் ஒன்றும் செய்ய முடியாது எனக் குறிப்பிட்ட கெவின் பீற்றர்சன், ஏராளமான மிகச் சிறப்பான விளையாட்டு வீரர்களுக்கு அந்த இயல்பு சிறிதளவு இருந்திருந்ததாகவும் அதன் காரணமா கவே அவர்கள் மேலும் சிறப்பாகச் செயற்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இயல்பை தான் தன்னம் பிக்கை என அழைப்பதாகவும் ஊடகத்தினர் திமிர் என அழைப்பதாகவும் குறிப்பிட்ட கெவின் பீற்றர்சன், திமிர் என அழைக்கப்படுவதால் சிறப்பான தலையங்கங்கள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இதுவரை 99 டெஸ்ற் போட்டி களில் பங்குபற்றியுள்ள கெவின் பீற்றர்சன், முதலாவது ஆஷஷ் போட்டியில் பங்குபற்றும் போது தனது 100 ஆவது டெஸ்ற் போட்டியில் பங்குபற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-400)



# சச்சினுக்கு 9 நாடுகளில் தபால் தலை

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினுக்கு இதுவரையிலும் 9 நாடுகளில் தபால்தலை வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின்(வயது 40), சர்வதேச கிரிக்கெட்டில் சதத்தில் சதம் அடித்து சாதித்தவர்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றவருக்கு, கடந்த 14ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் மத்திய அரசு சார்பில் தபால் தலை வெளியிடப்பட்டது. ஆனால் இதற்கு முன் பல நாடுகள் சச்சினுக்குத் தபால் தலை வெளியிட்டுள்ள செய்தி தற்போது தெரியவந்துள்ளது.

உலகத் தபால் தலைகளைச் சேகரிக்கும் விடயத்தில் லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்ற அரவிந்த் ஜெயின் என்பவர் இதை உறுதி செய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்த சச்சினை கௌரவிக்கும் வகையில், கடந்த 2008இல் ஸ்கொட்லாந்து அரசு மூன்று வித படங்களில் தபால் தலை வெளியிட்டது.

இவர் 12,429 ஓட்டங்கள் எடுத்த போது இங்கிலாந்து சார்பில் 2009ல் தபால் தலை வெளியானது. இதே ஆண்டில் கொங்கோவும் சச்சினுக்குப் பெருமை தந்தது.

2011இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்ற போது சென்.வின்சென்ட் என்ற அரசும், கினியா-பிசாவு நாடுகளும் தபால்தலை வெளியிட்டன.

இது தவிர டோகா குடியரசு சார்பில், சச்சின் மற்றும் கங்குலிக்குப் பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. (த-400)

# ஓய்வுக்குப் பிறகும் முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் தர வரிசைப் பட்டியலில் 18ஆவது இடத்தை அடைந்தார்.

டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலைச் சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில் இந்திய அணியின் ஜாம்பவான், ஐந்து இடங்கள் முன்னேறி 18ஆவது இடத்தைப் பிடித்தார். மும்பை டெஸ்டில் சதம் கடந்த சக வீரர் புஜாரா 2 இடம் முன்னேறி, 6ஆவது இடத்தைப் பிடித்தார்.

மற்ற இந்திய வீரர்களான கோஹ்லி, முரளி விஜய் தலா 4 மற்றும் 2 இடம் முன்னேற்றம் கண்டு 21, 42ஆவது இடத்தை அடைந்தனர்.

தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், அம்லா முதலிரண்டு இடத்தில் நீடிக்கின்றனர். மேற்கிந்தியத் தீவுகளின் சந்தர்பால் 3ஆவது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன், பிலாந்தர் முதலிரண்டு இடத்தில் உள்ளனர். இலங்கை வீரர் ஹேரத் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

மும்பை டெஸ்டில் ஆட்ட நாயகன் விருது வென்ற இந்திய சுழற் பந்துவீச்சாளர் ஓஜா 4 இடம் முன்னேறி, 9ஆவது இடத்தை பிடித்தார். சக வீரர் அஷ்வின் ஒரு இடம் முன்னேறி, 5ஆவது இடத்தை அடைந்தார். (த)

# நெருக்கடியில் ஆனந்த்

சென்னையில் நடைபெற்று வரும் உலக செஸ் சம்பியன் கிண்ணப் போட்டியில் நடப்பு சம்பியன் விஸ்வநாதன் ஆனந்தும், நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனும் விளையாடி வருகின்றனர். மொத்தம் 12 சுற்றுகள் கொண்ட இப்போட்டியில் 7 சுற்றுகள் முடிவடைந்த நிலையில் கார்ல்சன் 4.5-2.5 என முன்னிலை பெற்றிருந்தார்.

இந்நிலையில், இருவருக்கிடையிலான 8 ஆவது சுற்று ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில், விஸ்வநாதன் ஆனந்த் கறுப்பு காய்களுடனும், கார்ல்சன் வெள்ளை காய்களுடனும் ஆடினர். நெருக்கடியுடன் ஆடிய விஸ்வநாதன் ஆனந்த் கடுமையாகப் போராடி இந்த சுற்றை சமன் செய்தார். 33ஆவது நகர்த்தலில் சமன் செய்ய ஒப்புக்கொண்டதையடுத்து, இருவருக்கும் தலா அரை புள்ளி வழங்கப்பட்டது.

இதுவரை நடைபெற்ற 8 சுற்றுகள் முடிவில், கார்ல்சன் 5 புள்ளிகள் பெற்றுள்ளார். விஸ்வநாதன் ஆனந்த் 3 புள்ளிகளுடன் மிகவும் பின்தங்கியிருக்கிறார்.

# கைவிடப்பட்டது ஆட்டம்

இலங்கை நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற இருந்த முதலாவது 20/20 போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

பல்லேகல சர்வதேச மைதானத்தில் இப் போட்டி நடைபெறவிருந்தது. இச் சூழ்நிலையில் தொடர்ச்சியாக மழை பெய்த தன் காரணமாக போட்டி கைவிடப் பட்ட தாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.

இதே வேளை இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது. (400)

ஒன்று கூடலும் விருந்துபசார நிகழ்வும்

திகதி : 21.11.2013
நேரம் : 08.00 am
இடம் : New Science World

எமது ஆசிரியர்களிடம் கல்விகற்று 2012 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக புகுமுக அனைத்து மாவட்ட விஞ்ஞான மாணவர்களையும் மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Director & Staff
New Science World

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச,தனியார் ஊழியர்கள்,பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவு ஆரம்பம் 23.11.2013 சனிக்கிழமை
பிரிவு:1 03.00-05.00
3 மாதத்தில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
SAAMSON Language School
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

UK இல் படிக்க
IELTS தேவையில்லை
பட்ட, பட்டப் பின் படிப்பு பகுதி நேர வேலைவாய்ப்புடன்
திசைகாட்டி பிறைவேற் லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப் பாணம்.
021 221 9016
www.thisaivisa.com

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ஆஸ்திரேலியாவில் படிக்க உழைக்க IELTS தேவையில்லை
IT டிப்ளோமா, Hotel முகாமைத்துவத்தில் படிக்க உழைக்க 2 வருடத்தில் PR பெறலாம் விசாவகை 457
திசைகாட்டி (பிறை) லிமிற்
175 பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்.
021 2219016
www. thisaivisa.com

விற்பனையாகின்றன
கமநல திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவும்பரீட்சை வழிகாட்டி தொகுப்பு
த. தவசேகர்
விலை 300/=
பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, ஜோதி, ...

விசேட வகுப்புக்கள்
கமநல திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் பரீட்சைக்கானது
* யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ். நகர்) ஒவ்வொரு சனியும் 1.00 மணி
* வவுனியாவில் C.B.A. கல்வி நிலையம்
* கிளிநொச்சி எடிசன் கல்வி நிலையம்

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 10.12.1974 — மறைவு 23.08.2013

அமரர் ஜெனிவா கஜேந்திரன்
(மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை ஆசிரியர்)

அன்னாரின் மறைவுசெய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் கடந்த 23.08.2013 அன்று சிவபதம் அடைந்த ஜெனிவா கஜேந்திரன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 20.11.2013 காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வல்லிபுரம் புலோலி. குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வாழ்க்கை என்பது
> நீயே அமைப்பதாகும்.
> பின் எதற்காக
> நீ கவலை
> கொள்கிறாய்?
>
> -திருமதி ரோமா


# புதன் பொய்கை A

உதயன் | நவம்பர் 20 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


# மனமே
## எல்லாமும் உன்னால்தான்

ராஜராஜன்

மூன்று மனிதர்கள் ஏதோவொரு விதத்தில் மன நிலை பாதிக்கப்பட்டு துன்பப்படுவதைக் காண்கின்றோம். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இவை யாவும் மனிதர்களாலேயே உருவாக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை.

மேலும் ஒரு பிரிவினர் மட்டுமே இவ்வாறு பாதிக்கப்படுவதாகக் கூற முடியாது. வேறுபாடுகளையெல்லாம் கடந்து அனைவரிடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பது இதுவொன்றுதான்.

மிகப் பெரிய பணக்காரன் ஒருவன் சோர்வாகக் காணப்படுகின்றான். அவனது உடல் உற்சாகத்தை இழந்து காணப்படுவதும் தெரிகின்றது. அவன் 24 மணி நேரமும் பணத்தைப் பற்றியே சிந்திப்பவன் என்பது அனைவருக்கும் தெரியும். இது தொடர்பாக அவனிடமே கேட்டபோது: எனது வியாபாரத்தில் 20 கோடி ரூபா இலாபம் கிடைக்குமென நான் அதிக நம்பிக்கையுடன் காத்திருந்தேன். ஆனால் அந்த நம்பிக்கை தகர்ந்து விட்டது. 19 கோடி ரூபாதான் கிடைத்துள்ளது. இழக்கப்பட்ட அந்த ஒரு கோடி ரூபா எனது மனதைப் பெரிதும் பாதித்துள்ளது. அதனால்தான் சோர்வாக இருக்கின்றேன் என்ற பதில் கிடைத்தது. அவனுக்கு வியாபாரத்தில் இழப்பீடு ஏற்பட்டிருந்தால் சோர்வு ஏற்பட்டதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் கிடைக்க வேண்டிய இலாபத்தில் ஐந்து சதவீத இழப்பு ஏற்பட்டதற்கு அவன் சோர்வுடன் காணப்படுவதை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. இது அவனது மனதில் எழுந்த பேராசையின் விளைவு என்பதுதான் யதார்த்தம். போதுமென்ற மனம் படைத்தவனாக அவன் இருந்திருந்தால் மனச்சோர்வு அவனை அணுகியிருக்கவே மாட்டாது. இத்தகைய விதத்தில் தான் எம்மில் பலர் மனச் சோர்வுக்கு ஆளாகி வருகின்றனர்.

அண்மையில் வெளிவந்த தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவு கள் வெளிவந்தபோது பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை விட அவர்களது பெற்றோர்கள் தான் அதிக மனத் தவிப்புடன் காணப்பட்டனர். முடிவுகளை அறிந்தும் சித்தியடையாத மாணவர்களின் பெற்றோர் பலர் தாம் ஏதோ மாறாத அவமானத்தை எதிர்கொண்டது போன்று மற்றவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்து சோர்வுடன் முடங்கியிருந்ததைக் காண முடிந்தது. பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர் சிலர் கூட இந்த நிலையில் காணப்பட் டனர். தமது பிள்ளை இன்னமும் அதிக புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற ஆதங்கம்தான் இதற்கான முக்கிய காரணமாகும்.

இந்தப் பரீட்சை மட்டுமே தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தீர்மானித்துவிடப் போவதில்லை என்ற உண்மையை உணரத்தவறியதன் காரணமாக இவர்கள் இத்தகைய தேவையற்ற மனச் சோர்வுக்கு ஆளாகித் தம்மையும், தமது பிள்ளைகளையும் வருத்திக் கொள்கின்றனர். இவ்வாறு பல காரணங்களை எடுத்துக் கூற முடியும். நாம் எதிலும் அதிக நம்பிக்கை வைப்பதும் இந்த நிலைக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.






> நாம் எதிலும் அளவான வகையில் நம்பிக்கை கொள்பவர்களாக இருந்தால் இந்த மனச்சோர்வு எம்மை அணுகவே மாட்டாது. இதுவொரு மனம் சம்பந்தப்பட்ட விடயமாக இருந்தாலும் உடலை யும் அதிகளவில் பாதிக்கின்றது. நாம் எப்போதுமே எமது மனத்தை உறுதியாக வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவரது வீட்டில் சனிக்கிழமை தோறும் ஏதாவதொரு இறைச்சி மதிய உணவுடன் பரிமாறப்படுவது வழக்கமாகும். அன்று சனிக்கிழமை என்பதால் மதிய உணவுடன் இறைச்சியை ஒரு வெட்டு வெட்டலாம் என்ற அதீத எதிர்பார்ப்புடன் குடும்பத் தலைவர் ஒருவர் வீடுவந்து சேருக்ன்றார். சமையலறையையும் நோட்டம் விடுகின்றார். அங்கிருந்து சமைத்த இறைச்சியின் வாசனை அவரது மூக்கைத் துளைப்பதாக உணருகின்றார். ஆவலுடன் உணவை உண்பதற்கென அமர்ந்த அவரது கண் முன்னால் இறைச்சிக்குப் பதில் கருவாட்டுக் குழம்பு காணப்பட்டது. உச்சிக்கு ஏறிய கோபத்தை அவரால் அடக்க முடியவில்லை. [illegible] லிருந்தமனைவியைத் தாறு [illegible] திட்டுகின்றார். சமையலறையிலிருந்து வெளி வந்த சமைத்த இறைச்சியின் வாசனை அவரது மன எண்ணத் தின் வெளிப்பாடு என்பதை அவர் உணரத் தவறி விட்டார். ஏமாற்றத்தின் விளைவாக அவரது மனம் சோர்வடைந்து தொப்பெனக் கீழே வீழ்ந்துவிட்டது. அவரது உடலும் சோர்ந்துபோய் படுக்கையில் விழுந்து கிடக்கின்றது.

எம்மில் பலர் இவ்வாறுதான் அதீத எதிர்பார்ப்புக்களை மனதில் கொண் [illegible] ளாகவே மாறிவிடுவார்கள்.

நாம் எதிலும் அளவான வகையில் நம்பிக்கை கொள்பவர்களாக இருந்தால் இந்த மனச்சோர்வு எம்மை அணுகவே மாட்டாது. இதுவொரு மனம் சம்பந்தப்பட்ட விடயமாக இருந்தாலும் உடலை யும் அதிகளவில் பாதிக்கின்றது. நாம் எப்போதுமே எமது மனத்தை உறுதியாக வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தேவையற்ற விடயங்களுக்கெல்லாம் குழம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மனம் வேகமாகப் பயணிக்கக் கூடியது. ஒரு சில விநாடிகளுக்குள் இந்த உலகையே சுற்றி வரக் கூடிய ஆற்றல் படைத்தது. மற்றவர்கள் உணராத வகையில் அவர்களை எமது மனதால் பார்க்கின்ற சக்தி எம்மிடம் உள்ளது. வெளியில் உருவமாகத் தோன்றும் எமது உடலை இயங்கச் செய்வது அருவமாக எம்முள்மறைந்திருக்கும் எமது மனம்தான் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனால் தெரிந்து கொண்டே நாம் தவறு செய்கின்றோம். எமது மனத்தை வருத்துகின்றோம். உடல் ரீதியாக ஏற்படும் காயங் களை விட மனரீதியாக ஏற்படுத்தப்படும் காயங்கள் எப்போதுமே ஆறாது. எம்மை வருத்திக் கொண்டிருக்கும். யாராவது ஒருவர் எமக்குத் தீமை செய்து விட்டால் அவரைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் முதலில் எமது மனதில் தோன்று கின்றது. பல வருடங்கள் கடந்தா லும் இது மறைவதில்லை. ஆண்டுகள் செல்லச் செல்ல இதன் தீவிரம் அதிகரிக்கின்றதே தவிர குறைவ தில்லை. மற்றவர்களுக்கு வெளிப் பார்வைக்கு இது தெரியாத போதி லும் எமது உள் மனதில் அந்த அக்கினி கனன்று கொண்டே இருக்கின்றது. இதனை அணைப்பதும் தொடர்ந்து எரிய விடுவதும் எமது கரங்களிலேயே உள்ளது. ஆகவே நாம் எமது உடலைவிட எமது மனதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

அதிகளவு ஆசையும் குரூர சிந்தனையும் மனதில் இருக்கும்வரை அது சோர்வையே அடிக்கடி எதிர் கொள்ளும். ஏனென்றால் இவையிரண்டுமே உடனிருந்து எம்மை அழிக்கும் திறமை வாய்ந்தவையாகும்.

எனவே, நாம் எப்போதுமே எமது மனதை இயன்றளவு மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். எத்தனை துன்பங்கள் வந்தாலும் அவை யாவும் எமக்குக் கிடைக்கப் போகின்ற நன்மைகளின் அத்திபாரங்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த உலகிலே இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் இயல்பான நிலையாகும். ஆகவே மனதில் தேங்கி நிற்கும் கழிவுகளை வெளியே எடுத்து எறிந்துவிட வேண்டும். இதனால் தெளிந்த நீர்போன்றதொரு நிலைக்கு எமது மனம் மாறிவிடுகின்றது. அங்கு எப்போதும் அமைதியும் மகிழ்ச்சியுமே குடிகொண்டிருக்கும். அந்த மனமே ஒரு கோயிலாகவும் மாறிவிடும். வழிபாட்டுக்கு உரியதாகிவிடும். இதனால் எமது உடல் கூட மேன்மையடைகின்றது. மற்றவர்களால் மதிக்கப்படுகின்றது. மனச் சோர்வு எங்கோ காண முடியாத தொலை தூரத்துக்கு ஓடிப்போய் ஒளிந்து கொள்கின்றது. இனி எமது வாழ்வில் வசந்தமே வீசும் - புயலுக்கு அங்கு இடமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல் - ஸ்ரீஸ்கந்தநாதம்



தன்னலம் கருதாத கல்வித் தொண்டாற்றிய ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் மணிவிழா மலராக "ஸ்ரீஸ்கந்தநாதம்" மலர்ந்துள்ளது. மூன்று ஆசிச் செய்திகள், 16 வாழ்த்துரைகள், 20கல்வி சார் கட்டுரைகள் என மலர் நாதம் பரப்புகிறது.

ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் கல்விப் பணிகள் பற்றிய பார்வையை இ.கோகுலராகவன் கதை கூறும் பாங்கில் எடுத்துரைத்துள்ளார். புதுமையாகவும், இரசிக்கும்படியாகவும் உள்ளது. மலர் நாயகன் ஸ்ரீயின் மூன்று கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன. தனது பளை மகா வித்தியாலய வாழ்வுக் காலம் பற்றிய அனுபவப் பகிர்வாகவும், ஆசிரியத்துவம் குறித் தும் யாழ்ப்பாணத் தமிழ் ஆசிரியர் கல்விப் பாரம்பரியம் குறித்தும் இவை பேசுகின்றன.

ஏனையவை முன்னணிக் கல்வியாளர்களாலும் துறைசார் வளவாளர்களாலும் வரையப்பட்டுள்ளன. கல்வியின் சமகாலப் போக்குகளை எடுத்துரைப்பனவாகவும், அவை பற்றிய காத்திரமான விமர்சனங்களாகவும் இவை அமைந்துள்ளன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர், தென்மராட்சியின் ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் எனக் காத்திரமான பணிநிலைச் சிறப்புக்களுடைய ஸ்ரீயின் மணிவிழா மலரும் கனதியாகவே மலர்ந்துள்ளது.

நீர்வைக் கிழார்

## இறுவட்டு-இலந்தைக்காடு சிவன் இசையமுதம்



எத்தனையோ இசைப்பாடல்களைச் சினிமாத் திரை உலகம் அள்ளி இறைத்துக் கொண்டிருந்தாலும், அவற்றுக்குள்ளும் பக்தி இரசனை மட்டும் தனக்கெனத் தனி இடம் பிடித்திருக்கின்றது என்பதற்கு அண்மைக் கால பக்தி இசை இறுவட்டுக்களின் வரவுகள் முரசறைகின்றன.

ஆன்மிக வழியில் மனங்களை ஆசுவாசப் படுத்தும் தார்மீகக் கடமையை இப்பக்தி இசை இறுவட்டுக்கள்தான் செய்து வருகின்றன. துன்பத்தில் அங்கலாய்க்கும் மனித உள்ளங்களை ஒரு நிலைப்படுத்தி சங்கடங்கள் நீக்கிச் சாந்தப்படுத்துவதிலும் மகா சக்தியாக பக்தி இசை மாத்திரை ஊக்கம் நல்கி வருகின்றன.

அந்த வகையில் அண்மையில் வெளி வந்த "இலந்தைக்காடு சிவன் இசைய முதம்" இறுவட்டு பக்தி ரசம் சொட்டச் சொட்ட சக்தி சிவனிடம் எம்மைச் சங்கமிக்கச் செய்கின்றன.

முத்தான பத்துப் பாடல்களும் அம்மை அப்பனுக்கு முத்தாரமாய் அணிகலன்களாய் அலங்கரித்து நிற்க அடியவர் உள்ளங்களில் அவை ஆனந்த நடனமிடுகின்றன.

இசையமைப்பாளர் ஸ்ரீகுகனின் இசைக் கலவை கேட்போரை உறைய வைக் கின்றது. பாடல்களின் கவி வரிகளுக்கு உயிரூட்டி உரம் சேர்த்து நிற்கின்றன.

கவிஞர் வேலணையூர் சுரேஷின் கவி வரிகள் கட்டியம் கூறி நிற்கின்றன.

எஸ்.பி.சாந்தன் பாடிய அரியாவளை ஊரு... அருமையான பேரு....., ஜெயபாரதி பாடிய "மாவடிப் பதிவாழும் மாரியம்மா... பிரசன்னா பாடிய" கயிலையில் ஆடிடும் நாதா...போன்ற இறுவட்டில் உள்ள பாடல்கள் கேட்கும் மனங்களைச் சுண்டி இழுக்கின்றன.

யாழ்.உடுப்பிட்டியின் இலந்தைக்காடு திருப்பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் ஆலயச் சிவனடியார்களின் வெளியீடாக வெளிவந்திருக்கும் இந்த இறுவட்டு அந்த ஊருக்கு மட்டுமன்றி இந்த இறை உலகிற்கே ஒரு வரப்பிரசாதமாகும்.

சு.நாராயணன், உடுப்பிட்டி

## நிமிர்த்தப்பட்ட சாய்ந்தகோபுரம்!

உலக அதிசயங்களுள் ஒன்றான பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் 210 கோடி ரூபா செலவில் நிமிர்த்தப்பட்டுள்ளது.

இத்தாலியின் பைசா நகரில் உள்ள தேவாலயத்தின் மணிக்கூண்டாகப் பயன்படுத்தவே, 8 மாடிகள் கொண்ட இந்த கோபுரக் கட்டடத்தைக் கட்ட ஆரம்பித்தனர். கி.பி 1173 ஆம் ஆண்டு கட்டுமானப்பணிகள் ஆரம்பமாகின. இதைச் சாதாரணக் கட்டடம் போல செங்குத்தாகவே கட்டினர். அடித்தளம் சரியாக அமைக்கப்படாததால் கி.பி 1272ஆம் ஆண்டு கோபுரம் தென் மேற்கு பக்கமாகக் கொஞ்சம் கொஞ்சமாக சாய ஆரம்பித்தது.

இதன்பின் அடித்தளத்தை சிறிது சரி செய்து கட்டுமானத்தைத் தொடர்ந்தனர். ஆனாலும் சாய்வு நிற்கவில்லை. 1920ஆம் ஆண்டில் அடித்தளத்தை நவீன தொழில்நுட்ப முறையில் சரிசெய்தனர். ஆயினும் 1993ஆம் ஆண் டில் 5.4 செ.மீ.,மேலும் சாய்ந்தது.

இதனையடுத்து கோபுரத்தை நிமிர்த்தும் பணியில் 11 ஆண்டுகளாக கட்டட வல்லுநர்கள் ஈடுபட்டனர். 2001ஆம் ஆண்டு தொடங்கிய இந் தப் பணியில், 14,500 தொன் எடையுள்ள கோபுரத்தின் அத்திபாரத்தில் தண்ணீர் நிரப்பப்பட்டு ஸ்டீல் கேபிள்கள் அமைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்திற்கு 210 கோடி ரூபா செலவிடப்பட்டது. ஆரம்பத்தில் 38 சென்றி மீற்றர்கள் நிமிர்த்தத் திட்டமிடப்பட்டாலும், இறுதியில் 25 சென்றி மீற்றர் அளவுக்கு நிமிர்த்தப் பட்டது.

இந்த நிலையில் இவ்வாண்டில் ஆண்டு வல்லுநர்கள் அளித்த ஆய்வறிக்கையில் கோபுரம் சாய்வது குறைந்துள்ளது என்றும், மேலும் நேராக்கப் பட்டால் அத்திபாரம் பாதிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கோபுரத்தைக் காண ஆண்டு தோறும் 60 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

இதன் எட்டாவது மாடி வரை செல்வதற்கு, சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது, ஆண்டுக்கு 253 கோடி ரூபா வரை வருமானம் கிடைக்கிறது. தற்போது செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளால் இந்தக் கோபுரம் இன்னும் 200 முதல் 300 ஆண்டுகள் வரை பாதுகாப்பாக இருக்கும் என்று கட்டட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



# வாசகர் திருமுகம்

## ஊரிக்காடு வீதி புனரமைக்கப்படுமா?

யாழ்.ஊரிக்காடு- தொண்டமானாறு வீதி மிக நீண்ட காலமாக இருள் மண்டிக் கிடக்கிறது. வீதியும் கரடு முரடாகக் கிடக்கிறது. காப்பெற் யுகத்தில் இந்த வீதியின் புனரமைப்புக்கு நெடுங் காலமாக அழுத்தமும் இல்லை அகலிப்பும் இல்லை. இந்த வீதி வரலாற்றுத் தொன்மை மிக்க செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு விசேட நாள்களில் பக்தர்கள் படையெடுக்கும் பிரதான வீதியாகும்.

உடுப்பிட்டி வீதி இரவில் ஜெகஜோதியாகக் காட்சியளிக்கிறது. பருத்தித்துறை வீதி இந்திரலோகமாக இரவில் காட்சி யளிக்கிறது. ஊரிக்காடு வீதி மட்டும் பாவிகள் புகலிடமாக. புறநகர் என்பதால் புறக்கணிக்கப்படலாமா? சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிச் சபை அலுவலகம் மூன்று மாடிகளோடு வசந்த மாளிகையாக கட்டப்பட்டு வானுயர்ந்து நிற்கிறது. அருகிலே கல்யாண மண்டபம் தாஜ்மகாலுக்கு இணையாக ஜொலிக்கிறது. போதாக்குறைக்கு எதிரிலுள்ள ஆலயத்திலும் ஒரு கல்யாண மண்டபம் கட்டப்படப் போகிறது. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்தானே? நல்லவை பாராட்டப்பட வேண்டிய விடயங்கள் தான். மேற்படி கட்டடங்கள் எமது பிரதேசத்தின் பொருளாதார, கலாசார மேம்பாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமானவைதான். உடுப்பிட்டி வீதியில் மிக நீண்ட காலமாக இயங்கி வந்த சாராயக் கடை மூடப்பட்டமை மிகவும் பாராட்டுக் குரிய விடயமாகும். ஊரிக்காடு வீதியில் கடல் புறா இராணுவ முகாம் மட்டுமே இரவில் தேவலோகமாகக் காட்சியளிக்கிறது. மற்றைய பகுதிகள் இருண்ட கண்டமாகிய ஆபிரிக்காவையே நினைவூட்டுகின்றன. கட்டடங்கள் உயரும்போது உள்ளங்களும் உயரவேண்டும். மன முண்டானால் மார்க்கமுண்டு. அபிவிருத்தியில் சமநிலை பேணப்பட வேண்டும். ஊரிக்காடு வீதியும் புனரமைப்பு செய்ய வேண்டும்.

சந்நிதியான்.

## கொலை, கொள்ளைகளை தடுப்பார்களா?

வடபகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொடூரமான கொலைகள், கொள்ளைகள் குறித்து மக்கள் பீதியில் உறைந்து போய் இருக்கின்றனர். கொலை, கொள்ளைகள் நாளுக்கு நாள் மிகத் துணிகரமாக இடம்பெற்று வருகின்றன.

வீடுகளில் மாத்திரமல்ல பெரிய ஆலயங்களிலும் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதாஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஒரு கோடி ரூபாவிற்கு மேல் பெறுமதி வாய்ந்த புனிதப் பொருள்கள் சூறையாடப் பட்டுள்ளன. இப்படிப் பல ஆலயங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைத் தடுப்பார் யார்? கேட்பார் யார் என்று மக்கள் குழம்பி நிற்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் வடமராட்சி கிழக்கில் ஒரே இரவில் பத்து வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இத் துணிவு யாருக்கு வரும்? திட்டமிடப்பட்ட ஒரு பின்னணியிலேதான் இந்தக் கொள்ளைகள் நடந்து வருகின்றன என்று பலர் கருதுகிறார்கள். யாழில் இரு வேறு இடங்களில் இரு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

முழத்திற்கு முழம் காவலரண்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் ரோந்து என்றெல்லாம் இருந்தும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்றால் அதன் மர்மம் என்ன?

கொலை, கொள்ளை பற்றி மக்கள் பொலிஸாரிடம் முறையிடுவதோடு விடயம் முடிகிறது. இந்தக் கொலை, கொள்ளைகளைத் தடுக்க வழியென்ன என்று மக்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்.

தமிழ்த் தலைவர்களும் மாகாண சபை முதல்வர், உறுப்பினர் அனைவரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களை இல்லா தொழிப்பதற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும்.

க.கந்தசாமி, ஆனைக்கோட்டை

## இரண்டு பரப்பு காணி எனக்கும் கிடைக்குமா?

யாழ்.அரியாலை இலந்தைக்குளம் மன்றுளாடும் விநாயகர் கோயிலுக்குச் சொந்தமாக பல காணிகள் உள்ளன. அவை பல வறியவர்களுக்குத் தஞ்சமளித்துள்ளன. பலர் அரச உதவியுடன் வீடு அமைத்து அந்தக் காணியில் வாழ்கின்றனர். சில காணிகள் வேற்று மதத்தினருக்கும் பனை வடலி வளர்ப்பதற்கும், மர வியாபாரத்திற்கும் வழங்கப்பட்டுள் ளன. பிள்ளையாரை வணங்கும் அடியவர்களாகிய நாம் வீடு, காணி இன்றி வாடி இருக்க பிற மதத்தினர் கோவில் காணிகளை ஆட்சிப்படுத்துவது எமக்கு வேதனையைத் தருகின்றது.

அந்தக் காணிகளைப் பிரித்து எமக்கும் இரண்டு பரப்புக் காணியாவது தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அரியாலை ஏ-9 வீதிக்கருகில் மாம்பழம் சந்திப் பகுதியில் சிதம்பர புண்ணியக் காணி ஒன்றுண்டு. அதில் குடியிருப்பவ்ர்கள் சமயம் மாறி வேற்றுச் சமயத்தை வளர்க்கும் இடமாக்கியுள்ளனர். இதற்குரிய தீர்வுதான் என்னவோ? ஆலயப் பிணக்குகளைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா?

சைவசமயி மனோகரி, அரியாலை.

## முதியோர் இல்லம் அமைக்க உதவுவார்களா?

60 வயதுக்கு மேற்பட்ட 118 முதியோர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இரண்டு வருடங் களாக முல்லைத்தீவு செல்வபுரம் கரைதுறைப் பற்று சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் இயங்கி வருகிறது.

இந்தச் சங்கத்துக்கு இதுவரை எவரது [illegible] கிடைக்காமையால், இவர் [illegible] உளைச்சல்களிலிருந்து காப்பாற்றிப் பராமரிக்க தற்போது இவர்களுக்கு ஒரு முதியோர் பகல்நேர இல்லம் தேவையாகவுள்ளது. இவர்கள் மேல் கருணைகொண்டு இந்த இல்லத்தை அமைத்து இவர்களுக்கு தினமும் ஆறுதலளிக்க பெருமனம் கொண்டோர் யாராவது முன் வருவார்களா? என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

பே.அமிர்தநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20/11/2013



# தமிழரின் இருப்பைப் பறைசாற்றிய
# மூன்று நாடகங்கள்

கதடியூர் நி.ஹரன்



செயல்திறன் அரங்க இயக்கத்தினால் இளையோர் நாடக விழா கடந்த 01.09.2013 ஞாயிற்றுக் கிழமை பி.ப 03.30 மணியளவில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் விழாவில் நல்லதங்காள் எனும் தனியாள் அரங்க ஆற்றுகையும், செயல்திறன் அரங்க இயக்க நிறைவேற்றுப் பணிப்பாளர் தே தவானந்தின் எழுத்துருவாக்கம், நெறியாள்கையில் உருவாகிய வீடு பேறு, கருப்பைத் தறுக்கணிப்பு, வெப்பக்குடுவை ஆ மூன்று நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.

கருப்பைத் தறுக்கணிப்பு என்ற நாடகம் தாய் நிலம் பாழாகுதல் பற்றிப் பேசுவதாக அமைந்திருந்தது.

வெப்பக்குடுவை என்ற நாடகம் தாயைத் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் நிற்கும் பிள்ளைகள் பற்றியும் தொலைத்த தாயைத்



தேடும்போது அவர்கள் எதிர்நோக்கும் துயரங்கள் பற்றியும் பேசி நிற் ன்றன.

மூ று நாடகங்களிலும் சிறப்பான அரங்க நுட்பங்களை பயன்படுத்தியுள்ளார் நெறியாளர். வீடு பேறு நாடகத்தில் இரண்டு வீடுகளை மேடையில் காட்டிய முறை சிறப்புக்குரியது.ஒன்றை நிரந்தரமாக ஆரம்பத்திலேயே வைத்தும் மற்றைய வீட்டை பிள்ளை கற்பனையில் மேடையில் அமைப்பதுமாக காட்சிகள் அமைந்தன. வாடகை வீட்டில் இருப்போரை சுதந்திரமாக நடமாட முடியாது கா ய நுட்பம்.நிவாரணம் வே ட நிற்கும் மக்களின் நடத்தைகளைக் காட்டிய நுட்பம்

நுட்பம் மற்றும் இறுதிக் காட்சியில் சீமையில் வாழ்வோர் தம்மை உருக்கி தாய் நாட்டில் உள்ளோரை சந்தோசமாக வாழ வைக்கும் தன்மையைக் காட்ட மேடையின் நடுவே ஒளியூட்டிய நுட்பம் வரவேற்கத்தக்கது.

வெப்பக்குடுவைநாடகத்தில் சொந்தத் தாயை தவற விட்டுவிட்டு போலித்தாயுடன் பிள்ளைகள் இருக்கும்போது அவர்கள் முகமூடி அணிந்து தலையை இடையிடையே அழகாக அசைத்து தாம் போலியாக வாழ்வதாகக் காட்டிய நுட்பமும் சிறப்பாக அமைந்திருந்தது.வேடஉடை

வரவேற்புக்குரியது. கருப்பைத் தறுக்கணிப்பு நாடகத்தில் கிணறு வெட்ட பூதம் வருவது போல காட்சி அமைத்த முறைமை.வியாபார முகவர்களின் உரையாடல்கள்

அமைந்த முறைமை பார்வையாளரை ரசிக்க வைத்தது. பிணம் ஒன்றை தூக்கிச் செல்லும்போது கடைப்பிடித்த நுட்பம் உண்மையிலேயே பிணம் ஒன்றை காவிச்செல்வது போல் இருந்தது. மேடையில் உரல்களைப் பயன்படுத்தி காட்சிக்கு மெருகூட்டிய

பொதுமைப்படுத்தப்பட்டு அமைந்திருந்தது. இடையிடையே பொருத்தமாக பாடல் பாடப்பட்டமையும் இசையமைப்பும் ரசிக்கும் வகையில் அமைந்திருந்தன. ஒளியமைப்பு சிறப்புக்குரியதாக இருந்தாலும் ஒருசில இடங்களில் பொருத்தப்பாடற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தன.

கருப்பைத் தறுக்கணிப்புநாடகம் இரட்டைக் கதைப்பின்னலைக் கொண்டிருந்த தன்மையால் சற்று தொய்வுநிலை ஏற்பட்டதை உணரக்கூடியதாக இருந்தது. நாடகங்களில் நடித்த நடிகர்கள் துடிப்புடன் தங்கள் பாகத்தை ஆற்றியதை காணக்கூடியதாக இருந்தது.

தமிழரின் இருப்பு கேள்விக்குறியாகி வரும் நிலையில் தமிழரின் இருப்பைப் பறைசாற்றுவதாகவும்,எமது வீடு எமக்கு வேண்டும், எமது நிலம் எமக்கு வேண்டும், எமது தாய் எமக்கு வேண்டும் என்பவற்றை நறுக்காகப் பேசுவதாகவும் மூன்று நாடகங்களும் அமைந்திருந்தன. நாடகத்தை காலத்தின் கண்ணாடி என்று கூறுவார்கள். அந்தவகையில் வடமாகாண சபைத்தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்த காலகட்டத்தில் தமிழர் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி யாருக்கு வாக்குகளை அளிக்க வேண்டும் என்பதை அவர்களே தீர்மானம் எடுக்கும் நிலையை மறைமுகமாக வெளிப்படுத்துவதாகவும் இந்நாடகங்கள் அமைந்திருந்தன.

பேசிய விடயங்கள் பார்வையாளரை சென்றடைந்திருப்பினும் கலைப்படைப்பு என்ற வகையில் இன்னும்சற்றுமுழுமைபெறவேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்நாடகங்கள் யதார்த்த நிலையை குறியீடுகள் மூலம் பேசிநின்றதனால் குறியீட்டு யதார்த்த நாடகம் என்ற வகைக்குள் உள்ளடக்கலாம் போல் இருக்கின்றது. இவ்வாற்றுகைகள் நாடகமாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததோடு மட்டுமன்றி ஏனைய கலா ரசிகர்களுக்கும் சிறந்த கலா அனுபவமாகவும் அமைந்திருந்தது.நாடக கலைப்படைப்புக்கள் குறைவடைந்து செல்லும் காலகட்டத்தில்

இவ்வாறான படைப்புக்கள் ஆற்றுகை செய்யப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டியது.



கல்விச் சுடர் ஒளிரும்
யாழ்ப்பாணத்தில்
அபிவிருத்தியின் சுடரை ஒளிரச்செய்ய



பீபள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி
யாழ் மக்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக
புதுப்பொலிவுடன் புது முகவரியில்.

பீபள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி தனது கிளையை
இல.12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நவம்பர் 20ம் திகதி சுபநேரத்தில்
உங்கள் நிதித் தேவைகளின் நிமித்தம் மேலதிக வசதிகளுடன் இடமாற்றம் செய்கின்றது.

எமது நம்பிக்கையை வென்ற சேவைகள்
- லீசிங் மற்றும் தவணைக் கொள்வனவு
- சேமிப்பு கணக்கு
- நிலையான வைப்பு
- வியாபார மற்றும் பிரத்தியேக கடன்
- வாகன இறக்குமதிக்கான கடன் வசதிகள்
- இஸ்லாமிய கடன்

People's Leasing & Finance PLC
(A Subsidiary of People's Bank)
இல.1161, மருதானை வீதி, கொழும்பு 08
தொ.பேசி. : 0112 631 631

யாழ் கிளை - இல.12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பேசி : 021 222 8031/ 021 222 0187
ஃபக்ஸ் : 021 222 9627

www.plc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியைப் போன்று ஒரு கிரகம்



பூமியைப் போன்றதொரு புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் நாசா சார்பில் விண்வெளியில் உள்ள கிரகங்களை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட விண்கலம் 'கெப்ளர்'. அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த டெலஸ்கோப் புதிய கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களைபுகைப் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது. அந்தவகையில், தற் போது புதிய கிரகம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது கெப்ளர் விண்கலம்.

பூமியைப் போன்ற சாயலில் காணப் படும் அந்த கிரகத்துக்கு 'கெப்ளர்-78 பி' என விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர். பூமியில் இருந்து சுமார் 700 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள இக்கிரகம் பூமியைப் போன்றே வடி வமைப்பு



பூமியை விட சுமார் 1.2 மடங்கு பெரியதும், 1.7 மடங்கு கூடுதல் எடையும் கொண்டதாகக் காணப்படுகிறது இந்தக் கிரகம். பூமியை விட 2 ஆயிரம் டிகிரி செல்சியஸ் அதிக வெப்பம் அங்கு நிலவுவதால், அக்கிரகத்தில் எந்த உயிரினமும் வாழ்வதற்கு சாத்தியமில்லை என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காக்கையரே காக்கையரே
கறுப்பு வண்ணக் காக்கையரே
அங்கும் இங்கும் பார்ப்பதேனோ?
பாலர் எமக்கு பராக்குக் காட்டி
பலகாரத்தைப் பறித்திடவா
நீர் ஆகாசத்தோட்டி என்றாலும்
கூசாமல் திருடச் சொன்னது ஆர்,
பேசாமல் பறந்தோடிவிடும்- இல்லை
வசமாக மாட்டிடுவீர் உண்மை.

**கி.வாகினி**
காமாட்சி முன்பள்ளி , நாச்சிமார் கோயிலடி.

# சிட்டு குருவியும் குட்டி யானையும்

சென்ற வாரத் தொடர்-......
எங்கே யானை தன்னை அடித்துவிடுமோ என்று பயந்து போன கோழி ஒரே ஓட்டமாக ஓடியது.
யானை வலியோடு 'சே, அவசரப்பட்டு போட்டிக்கு ஒத்துக் கொண்டோமே? . சிட்டுக் குருவியிடம் தோற்கக் கூடாது. எப்படியும் வெல்ல வேண்டும்' என்று நினைத்தது.
அப்பொழுது, அந்தப் பக்கமாக ஒரு காகம் பறந்து வந்தது. அதை நிறுத்திய யானை, விடயத்தைச் சொல்லியது. யானையை மேலிருந்து கீழ் வரைக்கும் பார்த்த காகம், 'உன்னுடைய பெரிய தோற்றம்தான் பிரச்சினையே. நாலு நாள் சாப்பிடமால் இருந்தால் நன்றாகப் பறக்கலாம்' என்று சொல்லிவிட்டுப் பறந்து போனது.
யானை எதுவும் சாப்பிடாமல் பட்டினிகிடந்து நாலு நாளில் வாடி வதங்கிப் போனது. யானையால் எழுந்து நிற்கவே முடியவில்லை. சரி, எப்படியாவது பறந்து பார்க்கலாம் என்று தாவியது. ஆனால் யானை மயக்கம் வந்து விழுந்தது.
யானைக்கு கோபம் அதிகமாகிக் கத்தியது. அதைக் கேட்ட கழுகு கிட்ட வந்து சொன்னது. 'ஏன் அண்ணே கோபப்படுற, பறக்கிறது சாதாரண விடயம் தான். அதுக்கு நீ என்ன செய்ய வேண்டும் என்றால், அதோ தெரியுதே உயரமான மலை. அதன் மேலே ஏறு. உச்சிக்குப் போனதும், அங்கே இருந்து தான் பறக்க வேண்டும்என்று சொல்லிக்கொண்டே கண்ணை மூடிக்கொண்டு குதி. தானாகப் பறந்துடுவாய்' என்றது.
யானைக்கு அப்படிக் குதித்தால் பறக்கமுடியுமா என்று தயக்கமாக இருந்தது. என்னை நம்பினால், உடனே நீ பறந்து விடலாம் என்றது, கழுகு.
யானை மூச்சுவாங்க மலை மேல ஏற ஆரம்பித்தது. உச்சிக்குப் போவதற்கு முன்பே மூச்சு வாங்கியது. அங்கேயிருந்து கீழே பார்த்தால் பெரிய காடு மரம் எல்லாம் குட்டியாகத் தெரிந்தன. கண்ணை மூடிக் கொண்டு கீழே குதிக்க எட்டிப் பார்த்தால் தலை சுற்றியது. வேறு வழியில்லை என்று நினைத்து குதிக்கப் போகும் போது, குருவி பறந்து வந்தது. 'யானை அண்ணே, இங்கே இருந்து குதித்தால் நீங்கள் இறந்து விடுவீர்கள், இவ்வளவு உயரத்தில இருந்து பாருங்க காடு எவ்வளவு அழகா இருக்கிறது. இங்குள்ள ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. இதுல யாருமே பெரியவர்களும் இல்லை, யாருமே சின்னவர்களும் இல்லை.
உங்களாலை பறக்க முடியாது, என்னால் சின்னக் கல்லைக் கூடத் தூக்க முடியாது. அவரவர்கள் பலம் திறமை அவர்களுக்கு, இப்போது கூட ஒன்றும் ஆகவில்லை, நாங்கள் நட்பாக இருப்பதாக இருந்தால் போட்டியே வேண்டாம்' என்றது. யானை யோசித்துப் பார்த்தது,
குருவி சொல்வது சரி தான், என்னால பறக்கமுடியாது, குருவியால் மரத்தைத் தூக்க முடியாது, நாம் ஏன் தேவையில்லாமல் போட்டி போட வேண்டும். சே நான் தான் பெரிய ஆள் என்று இருந்து விட்டேன்,
எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், நம்மால முடியாத ஒரு விடயத்தை இன்னொருவரால் லேசாகச் செய்ய முடியும். அதனால், யாரையுமே நாம் அலட்சியமாக நினைக்கக் கூடாது. எல்லோரிடமும் அன்பாகவும் நட்பாகவும் நடக்க வேண்டும் என எண்ணிக் கொண்டது யானை.



# தாஜ்மஹால்



இந்தியாவில் ஆக்ரா நகரில் உள்ள யமுனை நதிக்கரையில் உள்ளது தாஜ்மஹால். முகலாயர் கட்டடக் கலைக்கு இது முக்கிய சான்றாகும். இது வெள்ளைப் பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்டுள்ளது.
தாஜ்மஹாலுக்கு எதிரே உள்ளே குளமும் அதன் இரு பக்கமும் இருக்கின்ற பச்சை நிறத் தோற்றமும் எல்லோர் கண்களையும் கவர்கின்றன. முகலாய மன்னன் ஷாஜகான் தன் அன்பு மனைவி மும்தாஜ்ஜின் நினைவாகக் கட்டிய கல்லறைதான் இதுவாகும். 1632 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1648ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. .16 ஆண்டுகள் 22 ஆயிரம் மனிதர்களின் உழைப்பில் உருவானது தாஜ்மஹால். அந்தக் காலத்திலேயே தாஜ்மஹால் மூன்று கோடி 20 லட்சம் ரூபா செலவில் உருவாகி இருக்கின்றது.

சி.கஜானி, தரம்-9'டி'
மீளி.இந்துக் கல்லூரி

தமிழ் இலக்கிய வானில் சுடர்விட்டொளிரும் விண்மீன்களில் பாரதியாரும் ஒருவர். அவர் ஒரு மகாகவி, புரட்சிக் கவிஞர். பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்த ஒப்பற்ற பெரியார் பாரதியார். தமிழ் என்றும் தமிழன் என்றும் சொல்வதற்கு பயம் கொண்டிருந்த காலத்தில் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" எனப்பாடி தமிழின் இருப்பை உணர்த்தினார்.
அடிமை, எதிர்ப்பு, வீரம், தமிழ்ப்பற்று, பெண் உரிமை உணர்வு, தொழில் வளர்ச்சி, தேசிய உணர்வு என்பன எல்லாம் பாரதியாரின் கவிதைகளில் பளிச்சிடுகின்றன. சமூகக் கொடுமைகளையும், மூடநம்பிக்கைகளையும் கண்டித்துப் பாரதியார் கண்ணன் பாட்டு, பாப்பாபாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற ஒப்பற்ற, காலத்தால் அழியாத கவிதைகளையும் தந்துள்ளார்.
இலக்கண வரம்புக்குள் நின்று இன்ன பொருளை இன்னவாறு பாட வேண்டும் என்ற மரபை உடைத்து சொல்புதிதாய், பொருள் புதிதாய் சோதிமிக்க நவகவிதை பாடியவன் பாரதி.
தமிழ் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது அவர்களது மூடத்தனமான மூடநம்பிக்கையே என உணர்ந்து கொண்ட பாரதியார் அவற்றை மக்களிடம் இருந்து போக்கிட முயன்றார். "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்து விட்டால்" என்று மக்களின் வாழ்வு நிலையை எள்ளி நகையாடினார்.
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகிய பாரதியார், பண்டைய மரபைப் பேணியதோடு, மரபை மறுத்து தெம்மாங்கு, பள்ளு, சிந்து, கண்ணி முதலிய நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலும் கவிதை பாடியமை குறிப்பிடத்தக்கது. இதனால் தான் பாரதியை புதுமைக் கவிஞர் என்று புகழ்கின்றனர். எளிய, இலகுவான சொற்களைப் பயன்படுத்தி பாசெய்த பாரதி அநேக கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சின்னச் சின்ன வசனங்கள், உயிர்த்துடிப்புள்ள சொற்கள், கற்பனைத்திறன் ஆகிய அனைத்தையும் பாரதியின் கவிதைகளில் காணலாம்.
தேச விடுதலை, பெண் விடுதலை, சாதி விடுதலை என்ப வற்றை உணர்த்தி மக்களின் மூட நம்பிக்கைகளைக் களைந்து தமிழன் என்ற இருப்பை உணர்த்தியவன், "பாட்டுக் கொரு புலவன்" என வர்ணிக்கப்படும் மகாகவி பாரதி ஆவார்.

சு.ஆர்த்திகா, தரம்-9டி,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



# தொகைநிலைத் தொடர்கள்

1. இரு சுடர்களும் எவை?
சூரியன், சந்திரன்
2. இரு திணைகள் எவை?
உயர்திணை, அஃறிணை
3. இரு குரவர் யாவர்?
தாய், தந்தையர்
4. இரு மரபுகளும் எவை?
தாய்மரபு, தந்தைமரபு
5. இரு நிதிகளும் எவை?
சங்கநிதி, பதுமநிதி
6. இரு பொருள்கள் எவை?
கல்வி, செல்வம்
7. இரு பற்றுகளும் எவை?
அகப்பற்று, புறப்பற்று
8. இரு மைகள் எவை?
இம்மை, மறுமை
9. திரிகடுகம் எவை?
சுக்கு, மிளகு, திப்பிலி
10. முக்கனிகளும் எவை?
மா, பலா, வாழை

இ.தனுஷிகா, தரம்-8
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் கொடுத்தால் பரிசு



தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் தருவதை ஊக்குவிக்கும் வகையில் பரிசுக் கூப்பன்களை இங்கிலாந்து அரசு வழங்கி வருகிறது.

இங்கிலாந்திலேயே டெர்பிஷெரி, சவுத் யார்க்ஷெரி போன்ற இடங்களில் தாய்ப்பால் கொடுக்கும் பழக்கம் குறைவாக உள்ளது. இதற்கு காரணம், தங்களது அழகு குறைந்து விடுமோ என தாய்மார்கள் தயங்குவது தான்.

ஆனால் தாய்ப்பால் தருவதன் மூலம் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பது மட்டுமின்றி, தாய்க்கும் நன்மை பயக்கும் என அவர்களுக்கு தெரிவதில்லை. எனவே புதிதாக திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. அதாவது தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு பரிசுக் கூப்பன்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி குழந்தைக்கு 6 வாரம் வரையில் தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு ரூ.12 ஆயிரமும், 6 மாதங்கள் வரையில் பால் கொடுக்கும் பெண்களுக்கு கூடுதலாக ரூ.8 ஆயிரமும் வெகுமதியாக வழங்கப்பட்டது.

அந்த கூப்பன்களைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு ஆரோக்கியமான, உபயோகமான பொருள் கள் வாங்குவார்கள் என எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

கூப்பனைப் பெற்ற பெரும்பான்மை யானவர்கள் அதனைப் பயன்படுத்தி சிகரெட், மது போன்ற போதைப் பொருள்களைத்தான் வாங்கியுள்ளார்களாம். இதனால் இங்கிலாந்து அரசு அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளதாம்.



# மரத்தை திருமணம் செய்த மனிதர்



பெரு நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் மரத்தை திருமணம் செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெருநாட்டை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் ரிச்சர்டு டோர்ரோர். இவர் மரங்கள் வளர்க்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக புதிய முயற்சியை எடுத்துள்ளார். அர்ஜென்டினா நாட்டின் பியூனோஸ் அயர்ஸ் நகரில் பூங்கா ஒன்று உள்ளது. அங்குள்ள மரம் ஒன்றுக்கு திருமண மோதிரம் அணிவித்து துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

மணமகன் போல வெள்ளை உடையில், தலையில் தொப்பி அணிந்து வந்த அவர் மரத்தை கட்டி அணைத்து திருமண உறுதி மொழியை எடுத்தார். மோதிரம் அணிவித்து பின்னர் முத்த மிட்டு மகிழ்ந்தார்.

இதுபற்றி அவர் கூறுகையில், மக்கள் மனதில் சுற்றுச்சூழல் விழிப்பு ணர்வை ஏற்படுத்த இதை செய்கி றேன்.

பெரு நாட்டிற்கு வெளியே தற்போது இந்த நிகழ்ச்சியை முதல் முறையாக நடத்தியுள்ளதாகவும், பல தென் அமெரிக்க நாடுகளுக்கு செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.


# தரமான ஹரிஸ்சந்திர உற்பத்திகள்




தரத்திற்கான நம்பகரமான பெயர்
www.harischandramills.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவையில்லாமல் மாத்திரைகளை பாவித்தால் பக்கவிளைவு ஏற்படும்



உலகில் உள்ள நோய்களில் சுமார் 80 சதவீதமான நோய்கள் தானாகவே குணமடையும் தன்மை கொண்டவை. அவற்றைக் குணப்படுத்த எந்தவித மான மருந்து மாத்திரைகளும் தேவையில்லை. ஆனால் எம்மில் சிலர் தொட்டதற்கெல்லாம் மாத்திரைகளை உட்கொள்வதையே வழக்கமாக கொண்டிருக் கின்றனர்.

இவ்வாறு தேவையில்லாமல் மருந்து மாத்திரை களை உட்கொள்வதால் அவர்கள் மிகப்பெரிய பக்க விளைவுகளுக்கு ஆளாகுவதுடன், சில நேரங் களில் அது உயிராபத்தையும் ஏற்படுத்திவிடக் கூடிய ஆபத்தும் இருக்கிறது.

நாம் பயன்படுத்தும் சகல மருந்துகளும் ஏதோ ஒரு வகையில் நமக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. எப்படி அது நோய்களைக் குணப்படுத்துகின்றதோ அதே அளவுக்கு பக்க விளைவுகளையும் ஏற்ப டுத்தும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே மாத்திரைகளை எடுத் துக் கொள்வதற்கு முன்னர் அதன் விலை, தேவை போன்றவற்றைக் கருத்தில் கொள்வதுடன், தேவை இருந்தால் மட்டுமே அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.



## ஈரல் நோயிலிருந்து பாதுகாப்புப் பெற...

மனித உடலில் ஈரலின் தொழிற்பாடானது இன்றியமையாத ஒன்றாகும். நீரிழிவு போன்ற நோய்களுக்கு பிரதான காரணமாக அமைவது ஈரலின் தொழிற்பாடு ஆகும்.

இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த ஈரலின் தொழிற்பாட்டைச் சீராகப் பேணுவதன் மூலம் பல்வேறு வகையான நோய்களிலிருந்து நம்மை நாம் தற்காத்துக்கொள்ள முடியும்.

இந்த நோயில் இருந்து பாதுகாப்புப் பெற சில ஆலோசனைகள்:-

நாள் ஒன்றுக்கு 8 தொடக்கம் 10 கிளாஸ் வரை தண்ணீர் அருந்த வேண்டும்.

பீட்ரூட், கரட், கோவா, போன்ற காய்கறிகளை அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஈரல் அமைந்துள்ள பகுதியை மசாஜ் செய்து வரவேண்டும், அதனால் ஈரலுக்கான இரத்த ஓட்டம் அதிகரித்து அதன் செயற்பாடு சீராகின் றது.



## நடைப்பயிற்சி பக்கவாத நோயைத் தடுக்கும்

நாள்தோறும் 90 நிமிடங்கள் வரை நடைப்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் பக்கவாத நோயிலிருந்து 3 மடங்கு பாதுகாப்பு கிடைக்கின்றது என்று ஆராய்ச் சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வுக்காக 60 தொடக்கம் 80 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 3,435 பேர் பயன்படுத்தப் பட்டுள்ளனர்.

பிரிட்டனில் ஆண்டுதோறும் 152,000 வரையா னோர் பக்கவாத நோயால் பீடிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

## வங்கி கணக்கில் உள்ள பணத்தை கண்டறியும் கடிகாரம்

பொதுவாக அலாரக் கடிகா ரம் ஒருவரை தூக்கத்தில் இருந்து எழுப்புவதற்கு மட் டுமே பயன்படும். ஆனால் அமெரிக்காவில் ஒரு புது மையான அலாரக் கடிகா ரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிகாரம்தான் உண்மையான விழிப்பை ஏற்படுத்தும் அலாரம் என்று கூறப்படுகிறது.

அப்படி என்னதான் கூறும் இந்தக் கடிகாரம்? உங்கள் வங்கி கணக் கில் எவ்வளவு பணம் இருக்கிறது? எவ்வ ளவு பேர் உங்களை தொடர்ந்து தெரிந்து வைத்தி ருக்கிறார்கள்? இன்னும் எவ்வளவு நாளைக்கு நீங்கள் உயிர் வாழ்வீர்கள்? என்ற தகவல்களைத் தெரிவிக்கும். இந்தக் கடிகாரம் சமூக வலைதளங்களில் உள்ள தகவல்கள், உங்களது உடல் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை முறை குறித்தும் தகவல்களைத் தெரிவிக்கும் என்று கூறப்படுகிறது.



## இராட்சத குதிரைச் சிலை



*சுமார் 99 அடி கள் உயரமான குதிரையின் தலையை சித்தரிக்கும் சிலையானது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.*



ஸ்கொட்லாந்தின் பால் கிர்க் பகுதியில் உருவாக் கப்பட்டுள்ள சுமார் 99 அடிகள் உயரமான குதி ரையின் தலையைச் சித் தரிக்கும் சிலையானது பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.

இந்தச் சிலை 7 வருட கால முயற்சியால் உரு வாக்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிராவின் படங்களைப் பார்த்தே பலர் இயக்குநர் ஆனார்கள்






இயக்குநர் அகிரா குரஸேவாவின் திரைப்படங்களைப் பார்த்தே பலர் இயக்குநரான வரலாறுகள் இருக்கின்றன. அந்த அளவுக்கு இவரது திரைப் படங்கள் பெயர் சொல்லும்படி அமைந்தன. இன்றைய காலமும் இவரது திரைப் படங்கள் உலகின் சிறந்த படங்களாக மெச்சப்பட்டு வருவதே இவரின் திறமைக்குக் கிடைத்த பரிசு.

23.03.1910 ஆம் ஆண்டு அகிரா குரஸேவா ஜப்பானில் பிறந்தார். 1936 ஆம் ஆண்டு ஜப்பானில் ஒரு சினிமா ஸ்ரூடியோவில் இயக்குநர் கஜிரோ ஜயமமோட்டோவிடம் உதவி இயக்குநராக வேலைக்குச் சேர்ந்தார். சுமார் 7 வருடங்கள் கழித்து 1943 இல் இவரது முதல் படமான shahshiro sugata படம் வெளியானது.

அடுத்து இவர் இயக்கிய படங்கள் எல்லாமே ஜப் பானிய போர்க்காலங்களில் வெளியானதால் கிட்டத்தட்ட ஜப்பானிய அரசின் பெருமைகளை விளக்கும் படங்களாகவே இருந்தன.

Beautiful people என்கிற இவரது படம் ஜப்பானிய இராணுவத்தில் பெண்கள் பணிபுரிவதை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட படம்.

இப்படியாக 10 படங்களுக்கு மேல் இயக்கி இருந்தாலும் அகிராவை உலகுக்கு தெரியப்படுத்திய இவரது படமான 1950 இல் வெளிவந்த roshaman தான். வெனிஸ் திரைப்பட விழாவில் தங்க சிங்கம் விருது பெற்று ஜப்பானிய சினிமாவை உலகுக்கு அறிமுகப்படுத் தியது.

இவரது திரைப்படங்கள் உலக அளவில் வெற்றி பெற்றதை மிகச் சாதாரணமான வகையில் ஒரு சின்னச் செய்தியாகத் தான் பத்திரிகைகள் வெளியிட்டன. இந்த ரோஷமான் படம் உலகில் பல மொழிகளில் வெளிவந்த பல திரைப் படங்களுக்கு முன்னுதாரணமாக இருந்துள்ளது. இவரது பல திரைப்படங்கள் உலகின் பல மொழிகளில் திருடப்பட்டோ, உரிமை வாங்கப்பட்டோ திரைப் படமாய் வெளிவந்திருக்கின்றன. 1952 இல் வெளிவந்த இவரது shichinin no samurais (seven samuri's) என்கிற திரைப்படம் ஆங்கிலத்தில் கௌபோய் படமாக மாற்றப்பட்டு The maganificient seven என்ற பெயரில் வெளிவந்தது. அகிராவின் ஏழு சமுராயின் 3½ மணிநேரம் கொண்டது. இந்தப் படம் எடுத்த விதமும் நடிகர்களின் நடிப்பும் எம்மை கட்டிப்போட்டு விடும்.

பல கமராக்களைப் பயன்படுத்தி வித விதமான கோணங்களில் திரைப் படம் எடுப்பதில் தீவிரம் காட்டியவர். ஏழு சமுராப் படத்தில் இவர் எடுத்த பல கோண கமரா காட்சிகள் படத்துக்கு வலுச்சேர்த்தன. மிகவும் துல்லியமாக படத்தை எடுப்பதற்காக கடுமையாக உழைப்பார். அதற்காக எவ்வளவு நேரம் போனாலும் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டார். 1980களில் இவ ரது திரைப்படங்கள் தோல்வி கண்ட தால் மனதளவில் பாதிக்கப்பட்டார்.

அந்தக் காலப் பகுதியில் விரக்தியின் விளிம்பில் இவரது வாழ்க்கை சென்றதால், தன்னுடைய கை நரம்புகளை 30 இடங்களில் அறுத்து தற்கொலை செய்ய முயன்றார். அந்தளவுக்கு சினிமா மீது அதிக நம்பிக்கை கொண்டு உழைத்தவர். இவரது எல்லாத் திரைப்படங்களிலும் ஒரே ஆள்களை வைத்து படமெடுப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார் takashi shimura என்பவரை கதாநாயகனாக வைத்து 19 திரைப்படங்கள் எடுத்துள்ளார். அதே போல் tashiro mifune என்பவரை 16 திரைப்படங்களில் லீடிங் ரோலில் நடிக்க வைத்திருக்கிறார்.

அகிராவுக்கு இந்தியாவின் சத்யஜித் ரேவை மிகவும் பிடிக்கும். சினிமாத் தோல்வியால் நிறுவனங்கள் இவரது திரைப்படங்களை எடுப்பதற்குப் பின்னடித்தன. இதனால் ஜப்பானியத் தொலைக் காட்சியில் நிகழ்ச்சி இயக்கி வந்தார்.

அகிரா தனது வாழ்வில் சினிமாவைத் தவிர வேறு எதனையும் சிந்திக்காதவர். வீட்டில் இருக்கும் போது இவரது சிந்தனை சினிமாவைப் பற்றியே இருக்கும். இவரது மனைவி yoko yaguchi யும் ஒரு நடிகையாவார். இவருக்கு இரு பிள்ளைகள். 1993 இல் வெளிவந்த madadayo என்ற திரைப்படமே இவர் கடைசியாக இயக்கிய திரைப் படமாகும்.

1998 இல் 88 வயதில் அகிரா காலமானார். உலகில் பெரும்பாலானவர்களால் புகழப்பட்டு மதிக்கப் பட்ட அகிராவை சினிமா உலகம் அவ்வளவு சிறப்பாக மதிக்கவில்லை என்பது சோகமே. அகிராவைக் கண்டால் சினிமா இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், ரசிகர்கள் மரியாதை செலுத்துவார்கள். அந்தளவுக்கு அவரது திரைப்படங்கள் எல்லோரையும் ஈர்த்தன.

இவர் இயக்கிய திரைப்படங்கள் ஒவ்வொன்றையும் தனது சக்திக்கு மீறி உழைத்து வெளியிட்டார். தனது குடும்ப வாழ்வு பற்றி சிறிதளவு கூடச் சிந்திக்காமல் சினிமாவுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த பெருந்தகை. இப்படியாகப் பேரும், புகழுமாக இருந்த அகிராவை சினிமா உலகம் கடைசியில் கைவிட்டு விட்டது என்று நினைக்கும் போது அவரது திரைப்படங்களை உயிர்ப்பித்த உலகம் அவரது வாழ்வை உயிர்ப்பிக்க மறந்து விட்டது எனக் கொள்ள முடிகிறது. இவரின் திரைப்படங் களைப் பார்த்து அதே போல் மாற்று மொழிகளில் படம் எடுக்கும் அளவுக்கு இவரது திரைப் படங்கள் உலக அளவில் பிரசித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. அகிராவின் பார்வை உலக பார்வையாக இருந்தது. அதனைத் தனது திரைப்படத்தின் மூலம் வெளிப்படுத்தினார். தமிழில் ஏ.வி.எம். தயாரிப்பில் எஸ்.பாலச்சந்தர் இயக்கிய 'அந்த நாள்' திரைப்படம் முழுக்க முழுக்க அகிராவின் ரோஷமானின் திரைக்கதை உத்தியைப் பின்பற்றி எடுக்கப் பட்ட படம். அதேபோல் கமல் நடித்த விருமாண்டி படத்திலும் ரோஷமானின் தாக்கத்தைப் பார்க்கலாம்.

பார்வையாளன்.

---

# எங்கே போகிறோம்?

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

தயிர் வடை, சாம்பார் வடை என்று பார்த்திருக்கிறோம். ஆனால் பியர் இட்லியை இப்பத்தான் பார்க்கிறோம் என்று சாமி படத்தில் நடிகர் விக்ரம் ஒரு சாப்பாட்டுக்கடையில் இட்லிக்கு பியர் விட்டு சாப்பிடுவதைப் பார்த்துப் பக்கத்தில் இருந்தவர் சொன்னார். அதே போலத் தான் மஞ்சத் திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, மாம்பழத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத்திருவிழா என்று நல்லூர் முருகன் கோயிலில் பார்த்திருக்கிறோம்.

நல்லூர் முருகன் கோயில் வீதியில் பியர் திருவிழாவைப் பார்த்தீர்களா? நான் பார்த்திருக்கிறேன். கடந்த 13 ஆம் திகதி இரவு 7 மணி இருக்கும்.... ஒரு வாகனத்திலும், சில மோட்டார் சைக்கிள்களிலும் வந்து இறங்கிய 8 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்றினால் பியர் திருவிழா நடத்தப்பட்டது. பியர் மணம் அந்த இடத்தில் பரவியது. அந்த வழியே சென்ற நான் விபரீதம் ஏதோ இடம்பெறுவதாக உணர்ந்தேன்.

மனதில் படபடப்புடன் பியர் மணத்தில் மூக்கைப் பொத்திக் கொண்டு கடந்து செல்கிறேன். பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயத்துக்கு முன்பாகவா இந்தக் கூத்து. இவர்களைக் கட்டுப்படுத்த ஒருவரும் இல்லையா? என்று எனக்குள் நினைத்துக் கொண்டு நல்லூர் முருகனே நீ இந்தக் கூத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயா என்று கேட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்கிறேன். ஆனாலும் மனது திருப்திப்படவில்லை. திரும்பி அந்த இடத்துக்குப் போகுமாறு எனது மனது உந்தித் தள்ளியது. எனது மோட்டார் சைக்கிளைத் திருப்பினேன். அந்த இளைஞர் குழு நிற்கும் இடத்தை நெருங்கிச் செல்கிறேன். அவர்கள் நிற்கும் இடத்துக்கு முன்னே உள்ள கடை ஒன்றின் முன்னே எனது மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன்.

அந்தக் கடைக்கு பொருள் வாங்க வந்த ஒருவர் என்னைப் பார்த்து "தம்பி அங்கை பார்த்தீரோ? பார்த்துமா இந்த இடத்தில் மோட்டார் சைக்கிளை நிற்பாட்டி இருக்கிறீர்?" என்று சொன்னார். நானோ அவரது கதையைப் பொருட்படுத்தாமல் அந்த இளைஞர் குழுவைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். எனது பாதுகாப்புக் கருதி கடைப்பக்கம் நெருங்கி தெரு விளக்கின் வெளிச்சம் என் மீது படாத இடத்தில் மறைந்து நிற்கிறேன்.

எனது பக்கமாக அந்த ஆளும் வந்து நிற்கிறார். பியர் போத்தலை பந்து போல எறிந்து விளையாடுகிறார்கள் அந்த இளைஞர்கள். சிலர் பியர் போத்தலின் மூடியைத் திறந்து குலுக்கி மேலே பிடிக்கிறார்கள். அந்தப் போத்தல்களில் இருந்து சீறிக் கொண்டு வெளியே வரும் பியரில் கூக்குரலிட்க் குளிக்கிறார்கள். ஆனந்த பியர் வெள்ளத்தில் மூழ்கி என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் தன்னிலை மறந்து அந்த இளைஞர் குழு கூத்தாடுகிறது.

அவர்கள் ஒவ்வொருவரும் ஓர் இடத்தில் நிற்கவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் தள்ளாடித் தள்ளாடி வயது போனவர்கள், கண் தெரியாதவர்கள் போல அங்கும் இங்கும் நடந்து திரிகிறார்கள். அதனால் தான் நடு வீதியில் தாங்கள் நிற்கிறோம் என்பது கூடத் தெரியாமல் நிற்கிறார்கள். அதற்குள் அவர்கள் கையில் வைத்திருக்கும் பியர் போத்தல்களைக் காட்டி வீதியில் செல்பவர்களையும் மிரட்டுகிறார்கள். அந்த வழியே சைக்கிளில் வரும் பெண்களை மறிக்கிறார்கள். அந்தப் பெண்கள் திரும்பி ஓட்டம் பிடிக்கிறார்கள்.

பின்னர் அந்த வீதி வழியே வந்த பயணிகள் பஸ்ஸை மறிக்கிறார்கள். அந்த பயணிகள் பஸ் நிற்பதாக பாசாங்கு செய்து விட்டு அவர்கள் வழி விட்டதும் வேகமாகப் பறக்கிறது. இப்படியாக அந்த நல்லூர் முருகன் முன் வீதியில் நின்று கூத்தாடுகிறார்கள். இவர்கள் யார்? இவர்களின் பின்னணி என்ன? எவருக்கும் பயப்படாது நடு வீதியில் நின்று இப்படியாக தண்ணியடித்து போதையில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்து கொண்டு நிற்கிறார்கள்.

இந்த இளைஞர்கள் நின்று அட்டகாசம் செய்த இடத்தில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் ஓர் இராணுவக் காவல் நிலையம் இருக்கிறது.

அந்த காவல் நிலையத்தில் நின்ற ஓர் இராணுவ சிப்பாய் இவர்களின் கூத்துக்களை ஏதோ திரைப்படம் பார்ப்பது போல பார்த்துக் கொண்டுநிற்கிறார். அந்த இராணுவ சிப்பாய்க்கு என்ன வேலை. இந்த இளைஞர்களை கட்டுப்படுத்தி போக்குவரத்தைச் சீராக்க முடியாவிட்டால் எதற்காக ஓர் இராணுவ காவல் அரணை அந்தப் பகுதியில் போட்டிருக்கிறார்கள் என்று எனக்குள்ளே கேள்விகள் எழுந்தன. அந்த இளைஞர்களின் விபரீதச் செயலுக்கு அந்த இராணுவக் காவலரண் பாதுகாப்புக் கொடுப்பதாக எண்ணத் தோன்றியது. எனக்குப் பக்கத்தில் நின்று அந்த இளைஞர்களின் கூத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதரோ, "இந்தக் கூத்து இன்றைக்கு மட்டும் நடக்கேல்லை தம்பி, தொடர்ந்து நடக்கிறது" என்றார். நானோ "பொலிஸுக்கு சொல்ல வேண்டியது தானே?" என்றேன். அவரோ " பொலிஸுக்கு சொல்ல யார் போகப் போயினம். அப்படிப் போனாலும், பொலிஸார் இவர்களை அடக்கிப் போடுவினம் என்று நம்ப ஏலாது" என்றார்.

நானோ "ஏன், அண்ணை இப்படிச் சொல்லுறியள். பொலிஸ் ஒரு நடவடிக்கை எடுக்கும் தானே" என்றேன். அவரோ "பொலிஸ் இப்படிப் பல நடவடிக்கைகளை கிடப்பில போட்டு விட்டிருக்கும். உந்தக் கதையை விட்டிட்டு வேறு ஏதாவது ஐடியா சொல்லுங்கோ தம்பி" என்றார். நானோ அங்கே காவலரணில் நின்ற இராணுவ சிப்பாயைப் பார்த்தேன். நான் பார்ப்பதைப் பார்த்துவிட்ட அந்த நபர் "பிறகும் அங்கை ஏன் பார்க்கிறீர்" என்றார். நானோ "இல்லை என்ன செய்யலாம் என்று யோசிக்கிறன்" என்றேன். அவரோ "ஒன்றுமே செய்ய முடியாது. அவங்கள் நின்றாங்கள் என்றால் இந்தச் சனம் உந்தக் கண்றாவியை எல்லாம் பார்க்குமோ அவங்கள் இல்லாதது தெரியுது" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு கதையைத் தொடர்ந்தார்.

சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதைத் தவிர எங்களாலை என்ன செய்ய முடியும். நாங்கள் தலையிட்டால் அந்த இளைஞர்களுக்கு சார்பாக ஏன் இதில் நிற்கிற இராணுவவீரன் கூட வந்து விடுவான். தப்பைத் தட்டிக் கேட்பவனுக்குத்தான் இப்பொழுது கூட அடி விழுகிறது. ஏனெனில் தப்பைத் தட்டிக் கேட்பவனுக்குச் சார்பாக நடந்து தவறு செய்பவர்களைத் தண்டிக்கத் தொடங்கினால் நாளைக்கு எமது சமூகம் ஒரு கட்டுக்கோப்புடன், ஒழுக்கமாக வளர்ந்து நிற்கும். பின்னர் தமது உரிமையை ஒன்றாக நின்று கேட்கும் என்ற பயம் தான் அந்தத் தரப்புகளுக்கு. இதனால் தான் எக்கேடு கெட்டாவது போகட்டும். பிணக்குகளும் பேதங்களும் மலிந்தால் அங்கு ஒற்றுமையும் ஒன்றிணைவும் இல்லாமல் போகும். அதுதானே எமது தேவையும், என்று அந்தத் தரப்புக்கள் சிந்தித்துச் செயற்படுகிறார்கள் போலும் என்ற எண்ணம் மனதில் வலுக்கிறது என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org